உலக வரலாற்றுத் தகவல் களஞ்சியம்

ஆசிரியர்: மவ்லவீ உஸ்மான் மஃரூஃபீ
தமிழில் : மவ்லவீ முஹம்மத் ரஸீன்–ஹஸனீ

உலக வரலாற்றுத் தகவல் களஞ்சியம்

இந்நூல் விலைமதிப்பிட முடியாத ஓர் அறிவுக் களஞ்சியம்.
நூலகங்களுக்கு ஒரு மகத்தான அறிவுப் பெட்டகம்.
தமிழுலகிற்கே இது ஒரு மாபெரும் ஞானக்கருவூலம்.

ஆசிரியர்:

மவ்லவீ முஹம்மத் உஸ்மான் ம.ரூ.பீ

மொழியாக்கம்:

மவ்லவீ முஹம்மத் ரஸீன் - ஹஸனீ (பாஜிலே மழாஹிரீ)

வெளியீடு :

DARUL QUR'AAN PUBLISHERS,
No. 100, KANDY ROAD,
MALLAWAPITIYA, KURUNEGALA,
SRI LANKA.

புத்தக விபரத் தொகுப்பு

நூலின் பெயர்	:	**உலக வரலாற்றுத் தகவல் களஞ்சியம்**
மொழி	:	தமிழ்
மூலம்	:	உர்து (ஏக் ஆலமீ தாரீக்)
மொழியாக்கம்	:	**மவ்லவீ முஹம்மத் ரஸீன் - ஹஸனீ** (பாஜிலே மழாஹிரீ) இலங்கை.
பதிப்புரிமை	:	மொ/ஆசிரியருக்கே!
முதல் பதிப்பு	:	கி.பி. 2000 அக்டோபர்
பக்கம்	:	304
அளவு	:	1/8 டெம்மி
வெளியீடு	:	DARUL QUR'AAN PUBLISHERS, No. 100, KANDY ROAD, MALLAWAPITIYA, KURUNEGALA, SRI LANKA.
ஒளி அச்சு	:	மாஜி கிரா.பிக்ஸ், சென்னை-1. ✆: 524 9905
நூலின் விலை	:	இலங்கை ரூ. 225.00 இந்தியா ரூ. 75.00

இந்நூல் கிடைக்குமிடங்கள்

இலங்கையில் :

ISLAMIC BOOK HOUSE,
77, Sri Vajiragnana Mawatha,
Colombo - 9.
T.P. : 684851, 687091.

HADHEE BOOK DEPOT
79, Dematagoda Road,
Colombo - 9.
T.P. : 697768, 332672

இந்தியாவில் :

திரீயெம் புக் செல்லர்ஸ்,
83, அங்கப்பன் தெரு, சென்னை-1.
Tel:522 5028 T/fax:523 0687

அனஸ் புக் டிப்போ
81, அங்கப்பன் தெரு,
சென்னை-1 Tel: 527 0539

ஸலாமத் புக் சென்டர்,
மஸ்ஜிதே மஃமூர் வளாகம்,
168/3, அங்கப்பன் தெரு,
சென்னை - 1. Tel: 527 0582

இஸ்லாமிய பதிப்பகம்
77, செம்புதாஸ் தெரு,
மண்ணடி, சென்னை- 1.
Tel: 524 8412

சமர்ப்பணம்

என்னை ஈன்றெடுத்து எனக்கு அறிவமுது ஊட்டி ஆளாக்கிய என் அன்புக்குரிய பெற்றோருக்கும், எனக்கு சன்மார்க்கக் கல்வியை புகட்டிய ஆசிரியப் பெருந்தகைகளுக்கும் இன்னும் என் நலனில் அக்கறை கொண்டு எனக்காக வேண்டி பிரார்த்தனைப் புரிந்த நல்லோர்களுக்கும் இந்நூலைச் சமர்ப்பணம் செய்கிறேன்.

வேண்டுகோள்!

மொழிப்பெயர்ப்பாசிரியரின் அனுமதியின்றி இந்நூலினை அச்சிடவோ, அது சம்பந்தப்பட்ட ஏதேனும் ஒரு காரியத்தை செய்யவோ எவருக்கும் அனுமதியில்லை. அப்படிச் செய்வது சட்டப்படி குற்றமாகும்.

இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை தங்கள் நூல்களிலோ பத்திரிகைகளிலோ வெளியிடும் அன்பர்கள் தயவு செய்து இந்நூலின் பெயரை அவசியம் குறிப்பிட வேண்டுகிறோம்.

உலக வரலாறு

நூலினை படைத்திட எனக்கு உதவிய துணை நூல்கள்

1. ஜலாலைன் 2. மிஷ்காத். 3. இத்கான் 4. பைழுல் கதீர். 5.உம்ததுர் ரிஆயா 6. ஸீரத் இப்னு ஹிஷாம். 7. தல்கீஹ் இப்னு ஜவ்ஸீ. 8. தக்ரீபுத் தஹ்தீப். 9. தத்கிரத்துல் ஹுஃப்பாழ் 10. அஸ்மா உஸ் ஸஹாபதிர் ருவாதி வமா லிகுல்லி வாஹிதிம் மினல் அதத். 11. இம்தாதுல் பாரீ (புகாரியின் விரிவுரை). 12. அத்தர்ஜு ல் முகல்லில். 13. கியாஸு ல் லுகாத். 14. அல் முன்ஜித். 15. ஹயாத்துல் ஹயவான். 16. நக்ஷே ஹயாத். 17. ஸீரத்துல் முஸ்தஃபா. 18 துருஸுத் தாரீஹு ல் இஸ்லாமீ. 19. அஸஹ்ஹு ஸ் ஸியர். 20. ரஹ்மத்துன் லில் ஆலமீன். 21. ஸீரத்துன் நபி. 22. தாரீஹே மில்லத். 23. தாரீஹு ல் கஅபா. 24. தாரீஹு ல் அதபுல் அரபீ. 25. தாரீக் ஹதீஸ். 26. தாரீஹு ல் மின்வாய் வ.அஹ்லிஹி. 27. தாரீக் பைத்துல் முகத்தஸ். 28. தவாரீக் மக்கா. 29. கோல்டன் தாரீக் ஹிந்துஸ்தான். 30. ஆஇனயே தவாரீக். 31. மஹாஸினுத் தவாரீக். 32. தத் கிரத்துல் முஸன்னிஃபீன். 33. அஹ்வாலுல் முஸன்னிஃபீன். 34. தத்கிரா உலமாயே ஹிந்த். 35. தத்கிரா உலமாயேஅஃஜம் கட். 36. தத்கிரா உலமாயே முபாரக்பூர். 37. ஸவ் படே ஆதமீ. 38. ஹாஷியா தர்ஜமயே ஷைகுல் ஹிந்த். 39. ஜவாஹிருள் ஃபிக்ஹ். 40. தஸ்தெகார் அஹ்லே ஷரஃப். 41. ஹயாத்தே இமாம் அபூ தாவூத். 42. தஹீரயே மஅலூமாத். 43. மக்ஜனுல் மஅலூமாத். 44. இம்தாதுல் அவ்ஸான். 45. ஹு கூகுல் வாலிதைன். 46. கஷ்கூல் பாதின். 47. ஜாஇஸா தராஜமே குர்ஆனி. 48. மிஃப்தாஹு த் தகாவிம். 49. ஃபழாஇலே ஹஜ். 50. குர்ஆன் நம்பர் நிழாம், கான்பூர். 51. குர்ஆன் நம்பர் நெய்ரஹ்-பம்பாய். 52. ஷைகுல் இஸ்லாம் நம்பருல் ஜம்ஈயா -டெல்லி. 53. தஅலீமீ நம்பருல் பலாக், பம்பாய். 54. ஈத் நம்பர் ரோஜ்நாமா இன்கிலாப். 55. ஜன்தரீ நம்பர் ஹரீம் - லக்னோ. 56. தாருல் உலூம் தேவ்பந்த் கீ ஸத் ரிஸாலா ஜிந்தகீ. 57. தாருல் உலூம் தேவ்பந்த் ஏக் நஜர் மே. 58. இல்மே கிராஅத் ஓர் குர்ரா ஏ ஸப்அ. .59. இஹ்யாவுல் மஆனி. 60. கம்ப்யூட்டர் ஸே ஏக் தஹ்கீக். 61. தத்கிரா மாஹே விஸால். 62. தாருல் உலூம் தேவ்பந்த் மாத இதழ். 63. மஆரிஃப் அஃஜம் கட் மாத இதழ். 64. அல் ஜம்ஈயா-டெல்லி. 65. மர்கிஃ அஹ்தே ரிஸாலத் வகிலா ஃபாதே ராஷிதா. 66. ஃபஹரிஸ்த் மதாரிஸ் நிதாயே இஸ்லாம், கல்கத்தா. 67. ஜீத் ஆஸான் அட்லஸ். 68. முஹம்மதீ படி தக்வீம் - பம்பாய். 69. மிஃப்தாஹே ஜன்தரீ , மஹு, கி.பி. 1996. 70. பயாழே மஅரூஃபி. 71. தாரீக் ஹரமைன் ஷரீபைன் மற்றும் பல நூல்கள், இதழ்கள், சஞ்சிகைகள்.

மூல நூலாசிரியரின் இதர நூல்கள் :

1. ஹயாத்தே தாஹிர். 2. கம்யூனிஸம் அவ்ர் மத்ஹப். 3. தரஸே மஅஃபிரத். 4. ஏக் ஆலமீ தாரீக். 5. மஷாஹீரே பூரா மஃரூஃப். 6.முஅஜிஸாத் வகராமத். 7. தாரீக் வகாஇஃ-துருஸே தாரீகுல் இஸ்லாமின் மொழியாக்கம். 8. தத்கிரத்துல் ஃபுனூன். 9. ஹாலாத்துல் முஸன்னிஃபீன். 10. முக்தஸர் தாரீஹ் நபவீ. 11. குலிஸ்தா ஃபாஹிரா ஹர்த் மன் ழும். 12. குலிஸ்தா ஃபாஹிரா கலான். 13. மஷாஹீரே கோபாகன்ஜ். 14. ஷஹீதே பாபரி மஸ்ஜித். 15. மஹாஸினுத் தவாரிஹ் 16. அர்கானே தப்லீக். 17. புர்தஃஸீர் நமாஸ். 18. ஸீரத்துல் ரஸூல் (ஸல்) 19. மிஃப்தாஹுத் தகாவிம் 20. தகாரீரே மவ்லானா ஆஸாத் (ரஹ்) 21. மகாமாத்தே ஹரீரியா வஹல்லே லுகாதே அரபீயா-வின் மொழியாக்கம்.

தென்னகத்தின் தாய்க்கல்லூரி ஜாமிஆ அல் பாக்கியாத்துஸ் ஸாலிஹாத்தின் முன்னாள் முதல்வரும் இந்நாள் பேராசிரியருமான அல்ஹாஜ் மவ்லானா P.S.P. ஜைனுல் ஆபிதீன் ஹழ்ரத் அவர்கள் மனமுவந்தளித்த

வாழ்த்துரை

'உலக வரலாறு' எனும் இந்நூலை பல்வேறு இடங்களில் பார்வையிட்டேன். இதன் மூல நூல் 'ஏக் ஆலமீ தாரீக்' எனும் பெயரில் மவ்லானா உஸ்மான் மஃரூஃபீ அவர்களால் உர்து மொழியில் எழுதப்பட்டதாகும்.

அதன் நேரடியான தமிழாக்கமே இந்நூல். வரலாறு என்பது மனிதனை கீழ்நிலையிலிருந்து உயர்ந்த உன்னத நிலைக்கு உயர்த்தும் ஒப்பற்ற வழிகாட்டியாகும்.

பரிசுத்த திருக்குர்ஆன் உலகத்திலுள்ள மனிதகுலம் முழுவதையும் நோக்கிக் கூறுகிறது:

' மாந்தர்களே! நீங்கள் பக்திமான்களாக - தின்மையைவிட்டும் உங்களை தடுத்துக் கொள்ளும், இறையச்சம் கொண்டவர்களாக ஆகும் பொருட்டு; உங்களையும் முன்னோர்களையும் படைத்து, பக்குவமாக உணவளித்து பாதுகாக்கும் இரட்சகனை வணங்குங்கள். அவன் உங்கட்கு பூமியை விரிப்பாகவும் வானத்தை முகடாகவும் அமைத்து வானத்திலிருந்து மழையை இறக்கி அதன் மூலம் உங்கட்கு ஆகாரம் அளிப்பதற்காக பழங்களை பயன்தரும் பொருட்களை வெளியாக்கினான். ஆகையால் அறிந்து கொண்டே நீங்கள் அல்லாஹ்வுக்கு இணைகளைக் கற்பிக்காதீர்கள் (2:21,22)

' பரிசுத்த திருக்குர்ஆனில் முதன் முதலாக அல்லாஹ்வை வணங்க வேண்டும்; என அடியார்களுக்கு உத்தரவிடப்படுவது; இரண்டாவது பிரிவில் உள்ள இத்திரு வசனங்களில்தான்.

மேற்கூறப்பெற்ற இரு வசனங்கள் எடுத்தியம்பும் தத்துவமென்ன? அவற்றின் மூலம் நாம் கற்றுக்கொள்ளும் பாடங்களென்ன? படிப்பினை என்ன?

சிருஷ்டிகர்த்தாவாகிய அல்லாஹ்வின் அபார சக்தியை அவனின் மகோன்னத தராதரத்தை அறிந்து கொள்வது அவனின் சிருஷ்டிகளில் அமைந்துள்ள அற்புதங்களையும், இறன்களையும், வலிமைகளையும், பொலிவுகளையும் புரிந்து கொள்வதின் மூலமே அமையும் என்பதேயாகும்.

உலக வரலாறு எனும் இந்நூல் உலகத்தை ஆண்ட மன்னர்கள் பற்றி; அவர்கள் தம் ஆற்றல் பற்றி; அவர்களின் உயர்வு தாழ்வு பற்றி பேசுகிறதை கேட்கலாம். உலக நாடுகளின் மக்கள் தொகை, உலகத்திலேற்பட்ட அதிசயங்கள், பரிசுத்த இஸ்லாத்தின் ஒப்பிலா உயர்நிலை; மக்கா-மதீனா, பைத்துல் முகத்தஸ் போன்ற புனிதமிகு இடங்களின் வரலாறு, நபிமார்களின் வாழ்க்கை, நாயகத் தோழர்களின் அர்ப்பணம், கி.மு., கி.பி யில் நடந்த புதுமையான நிகழ்வுகள் இவையனைத்தும் சுருக்கமாக ஆனால் தெளிவாக எடுத்துரைப்பதை புரிந்து கொள்ளலாம்.

இந்நூல் ஒவ்வொருவரிடத்தும் இருக்க வேண்டிய நன்னூல். படித்தறிந்து; படைத்தவனின் வல்லமை புரிந்து நற்குணசீலனாக நானிலத்தில் வாழ வழிகாட்டும் திருநூல்.

இப்படைப்பை படைத்துத்தந்த மவ்லவீ முஹம்மத் ரஜீன் அவர்களை பாராட்டுகிறேன். இதுபோன்ற பல நூல்களை வெளியாக்கித் தருவதற்குரிய உடல் பலம்; உடைமை பலம்; உள்ள வளம் ஆகிய அனைத்தையும் அல்லாஹ் அளித்தருள பிரார்த்திக்கிறேன்.

இந்நூல் பாரெங்கும் பரவி, பயன் மிகு வழங்கி, உலகம் நன்னெறியில் செழித்தோங்க அல்லாஹ் கிருபை செய்வானாக.

28 ரஜப் 1420

அன்புள்ள

9.11.1999

P.S.P.ஜைனுல் ஆபிதீன்

ஜாமிஆ அல் பாக்கியாத்துஸ் ஸாலிஹாத், வேலூர்

சென்னை-செங்கல்பட்டு மாவட்ட ஜமாஅத்துல் உலமா சபைத் தலைவரும் சென்னை புரசைவாக்கம் ஜுமுஆ மஸ்ஜிதின் இமாமும் திருக்குர்ஆன் விரிவுரையாளரும். பன்னூல் ஆசிரியருமான மவ்லானா மவ்லவீ அல்ஹாஜ் **K.A.**நிஜாமுத்தீன் மன்பயீ ஹழ்ரத் அவர்கள் இந்நூலிற்கு மனமுவந்தளித்த

அணிந்துரை

நஹ்மதுஹு வநுஸல்லீ அலா ரஸூலிஹில் கரீம்

உலகின் பல்வேறு காலக் கட்டங்களில் பல்வேறு இடங்களில் நிகழ்வுற்ற வரலாற்று நிகழ்ச்சிக் குறிப்புகளைத் தெரிந்து கொள்வது நம்முடைய பொது அறிவைப் பெருக்கிக் கொள்ள உதவுவதுடன், அவற்றின் மூலம் படிப்பினை பல பெற்று எதிர் காலத்தை நமக்குப் பலனுள்ளதாக அமைத்துக் கொள்வதற்கும் பிறருக்கும் அதனைக் கூறி வழி காட்டுவதற்கும் பேருதவியாக ஆகிவிடும்.

அத்தகைய பணியில் உலக வரலாற்றுக் குறிப்புகளை மக்கள் தெரிந்து பலன் பெற வேண்டுமென்ற எண்ணத்தில் உர்தூ மொழியினில் மௌலானா முஹம்மது உஸ்மான் மஃரூஃபீ அவர்கள் தொகுத்துள்ள இந்நூலைத் தமிழறிந்தவர்களும் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தில் தமிழில் பெயர்த்துத் தொகுத்துத் தந்துள்ளார் இலங்கையைச் சேர்ந்த 'மௌலவீ முஹம்மது ரஸீன் மழாஹிரி' அவர்கள்.

இந்நூலினில் எத்தனை செய்திகள் எத்தனை வரலாறுகள் இடம் பெற்றுள்ளன என்பதை இதன் பொருளடக்கப் பக்கத்தைப் பார்த்தவுடன் புரிந்து கொள்ளலாம். அத்தகைய முக்கிய நிகழ்வுகள், செய்திக் குறிப்புகள் நிறைந்துள்ள இந்நூலினை பொதுமக்கள் அனைவரும் வாங்கிப் படித்து பலன் பெற வேண்டும். குறிப்பாக ஆலிம்கள், மாணவர்கள் ஒவ்வொருவரும் இதனை வாங்கிப் படித்துப் பயன் பெற வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

இதன் மூல நூலாசிரியரவர்களுக்கும், மொழிபெயர்ப்பாசிரியர் அவர்களுக்கும் அல்லாஹுதஆலா நிரப்பான நன்மைகளை ஈருலகிலும் வழங்கிச் சிறப்பிப்பானாக! ஆமீன்!

இஸ்லாமிய ஊழியன்

K.A.நிஜாமுத்தீன்

புரசைவாக்கம்

11, ரமளான், 1420.

20, டிஸம்பர், 1999

தென்னகத்தின் பிரசித்தி பெற்ற மதரஸா யூசுஃபீய்யா அரபிக் கல்லூரியின்
அதிபரும், பேராசிரியருமான
மவ்லானா கலீல் அஹ்மத் கீரனூரி ஹழ்ரத்
அவர்கள் இந்நூலிற்கு மனமுவந்தளித்த

அணிந்துரை

வரலாறு என்ற சென்ற காலம், வரவிருக்கும் வருங்காலத்துக்கு வலிமையான உருக்கொடுக்க வல்ல வலுவான ஆயுதமாகும்.

அனைவரும் அறிந்திருக்க வேண்டிய அதி முக்கிய சென்ற காலக் குறிப்புகளை அழகிய முறையில் தொகுத்துத் தந்துள்ளார் உர்து மூல நூலாசிரியர். உண்மையிலேயே மனம் திறந்து பாராட்டப்பட வேண்டிய அம்சமாகும். நான் முதன் முதலில் இதைப் பார்த்த போது ஆச்சரியக் கண்ணோடு பார்த்தேன். மாணவர்கள் அவசியம் இந்நூலை வைத்திருக்க வேண்டுமெனக் கூறினேன்..

காலத்தின் தேவையுணர்ந்து இந்நூலை மவ்லவீ முஹம்மத் ரஸீன் மழாஹிரீ அவர்கள் தமிழில் தந்துள்ளார்கள். படிப்பதற்கு ஆர்வம் தரும் முறையில் அமைந்துள்ளதால் தமிழறிந்த அனைவரும் இதைப் படித்துணர்ந்து வருங்காலத்துக்கு வேண்டிய படிப்பினைகள் பெற்றுக் கொள்ள வேண்டுமென அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். ஆசிரியர்களின் முயற்சியை அல்லாஹ் அங்கீகரிப்பானாக. ஆமீன்.

இவண்
கலீல் அஹ்மத் கீரனூரி
யூசுஃபீய்யா அரபிக் கல்லூரி
பேகம்பூர், திண்டுக்கல்

12, ஜமாதுல் ஆகிர் 1420
23, செப்டம்பர் 1999

மவ்லவீ சா. அப்துன்னாஸிர் பாக்கவி
நபிமொழி தமிழாக்குனர்
ரஹ்மத் பப்ளிகேஷன்ஸ், சென்னை - 4.

இளம் மௌலவீயின் இனிய சேவை

மனித அனுபவங்களின் தொகுப்பே வரலாற்று ஏடுகள். அவ்வரலாற்றின் சில திவலைகளை உங்கள் கரத்தில் அள்ளி வழங்கியிருக்கிறார் மௌலவீ முஹம்மத் ரஜீன்.

இந்த நூலை ஆரம்ப முதல் இறுதிவரை பார்வையிடக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. மூலநூலோடு ஒப்பிட்டு என்னால் இயன்ற பல திருத்தங்களைச் செய்தேன்.

உலக வரலாற்றின் ஆண்டுக்குறிப்புகளும், அரிய பல துணுக்குகளும் தழுவிய இந்நூல் மானிட வரலாறாயும் ஆய்வியலாருக்கு அளப்பரும் துணைவன். கையடக்க நூலகம்.

உர்துவில் 'ஏக் ஆலமீ தாரீக்' எனும் பெயரில் வெளிவந்து சுமார் ஐந்து பதிப்புகள்வரை வெளியிடப்பட்ட இந்நூல் மவ்லானா முஹம்மத் உஸ்மான் மஃரூஃபீ அவர்கள் பல்லாண்டு காலமாய் தேனீயாய் மாறித்திரட்டிச் சேர்த்த சொத்தாகும். அதனைச் சுவைத்து 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' எனும் நோக்கில் தமிழ் கூறும் இஸ்லாமிய நல்லுலகிற்குப் படைத்திருக்கின்றார் நண்பர் மௌலவீ முஹம்மத் ரஸீன் ஹஸனீ அவர்கள்.

மூல நூலாசிரியரின் முனைப்பும் மொழியாக்குனரின் முயற்சியும் போற்றற்குரியது. விலை மதிப்பற்றது. இந்த வரலாற்றுத் தொகுப்பை உங்கள் வரவேற்பறைக்குக் கொண்டு வந்த இந்த இளம் மௌலவீயின் இனிய சேவையை இறைவன் ஏற்றுக் கொள்வானாக.

உலக வரலாற்றில் ஓர் திருப்பத்தை ஏற்படுத்திய இஸ்லாமிய சமுதாயம் இதை வாங்கி வாசிக்க வேண்டுமாய், தொடர்ந்து எழுத்துச் சேவை புரிய நூலாசிரியரை ஊக்கப்படுத் வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மௌலவீ
சா. அப்துந் நாஸிர் (பாக்கவி)
ரஹ்மத் பப்ளிகேஷன்ஸ்,
சென்னை - 4.

2, ரமளான் 1420
11.12.1999

மூல நூலாசிரியரின் வேண்டுகோள்

நான் எனது குறிப்பேட்டில் சில வரலாற்றுச் செய்திகளை எழுதி வைத்திருந்தேன். மக்கள் யாவரும் பயனடைய அதனை அச்சிடும்படி என்னை சிலர் மிகவும் வற்புறுத்தினர். அவ்வேண்டுகோளுக்கிணங்க 1973 ஆம் ஆண்டில் (ஹிஜ்ரி 1393) புதிய கோணத்தில் வரிசைப்படுத்தி 'உலக வரலாறு' எனும் பெயரில் அது புத்தகமாக பதிப்பானது. அல்லாஹ் தஆலாவிற்கே சர்வ புகழும்! அது மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றது. அது பல்வேறு சந்தர்ப்பங்களில் பற்பல விஷயங்கள் சேர்க்கப்பட்டு பலமுறை அச்சிடப்பட்டதில் சுமார் ஏழாயிரம் பிரதிகளை விட அதிகமாக வெளிவந்தது. பல பகுதிகளாகவும், பிரிவுகளாகவும் இருநூறு தலைப்புகள் இதில் உள்ளடங்கியுள்ளேன். இதில் அதிகமான பகுதிகள் வரலாறு சம்பந்தப்பட்டவை.

மற்றோர் இடத்திலிருந்து எடுத்துக்குறிப்பது மட்டுமே சரித்திரவியலாரின் பணியாகும். அனுமானங்கள் மற்றும் மதிப்பீடுகளுக்கும் வரலாற்றுக்கும் சம்பந்தமில்லை.

சிற்சில வரலாற்றுக் குறிப்புகள் முன்னுக்குப்பின் முரணாகவும் கருதது வேறுபாடு கொண்டனவாகவும் காணப்பட்டன. அவற்றைக் களைய நான் நூல்களைப் புரட்ட புரட்ட கருத்து வேறுபாடுகளின் எண்ணிக்கையும் என் வியப்பும் தான் அதிகரித்துக் கொண்டே போயிற்று. சரியான முடிவு காண்பது அவ்வாறு எளிதாக இருக்க வில்லை.

புத்தகத்தில் பல்வேறு இடங்களில் ஹிஜ்ரி மற்றும் கிறிஸ்துவ கணக்கிற்கிடையே முரண்பாடு களையப்பட்டுள்ளது. ஆங்காங்கே ஒரு வருட வித்தியாசம் வரலாம். ஐந்தாம் பதிப்பில் (1997) போதிய விஷயங்களைச் சேர்த்துள்ளேன்.

ஸஹாரன்பூர்- ஜாமிஆ மழாஹிருல் உலூமின் ஹதீஸ் கலை பேராசிரியர் மவ்லானா ஜைனுல் ஆபிதீன் ம.ஃரூ.ஃபீ ஸாஹிப் அவர்கள் 'மஆஸிர்' இதழின் ஆசிரியர் மவ்லானா இ.ஃஜாஸ் அஹ்மத் ஸாஹிப். ஹைராபாதைச் சேர்ந்த ஹாபிழ் ழியாஉல் ஹக் ஸாஹிப் ஆகியோர்கள் மறுபார்வை!ட்டு இந்நூலிற்காக சிறந்த ஆலோசனைகளை வழங்கினார்கள். அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். நூலின் கண் ஏதேனும் தவறுகள் தென்படின் அவசியம் அதை சுட்டிக் காட்டுமாறு அறிஞர்களிடம் வேண்டிக் கொள்கிறேன்.

نذرانہ بسرمایۂ فضل خویش بدریوزہ آوردہ ام دست پیش

எனது குறைந்த முதலீட்டில நான் புரிந்த இந்த உபகாரத்தை எண்ணி நான் பெருமைப்படவில்லை. ஒரு யாசகனாகவே நான் உங்கள் முன் கையேந்தி நிற்கிறேன்.

وَجِئْنَا بِبِضَاعَةٍ مُزْجَاةٍ فَأَوْفِ لَنَا الْكَيْلَ وَتَصَدَّقْ عَلَيْنَا-

நாங்கள் சொற்பமான சரக்கையே கொண்டு வந்துள்ளோம். ஆயினும் எங்களுக்கு நிறைவாக அளந்து தாருங்கள். (மேற்கொண்டு) எங்களுக்கு தர்மமும் செய்யுங்கள்!

17 முஹர்ரம் 1417 — முஹம்மத் உஸ்மான் ம.ஃரூ.ஃபீ
5 ஜூன் 1996

ஏன் வெளியிடுகிறோம்?

வரலாறு என்பது பாதுகாப்பாக, பத்திரமாக வைக்கப்பட வேண்டிய ஒன்றாகும். அது காலத்திற்கேற்ப படிப்பினையும் பெற்றுக் கொள்ளத் தகுந்த சிறந்ததொரு ஊன்றுகோளாகவும் திகழ்கிறது.

இத்தகைய வரலாறு சம்பந்தப்பட்ட ஒப்பற்ற மிகச்சிறந்ததொரு நூலைத் தேடிப்பிடித்து தமிழுலகிற்கு கொண்டு வந்த மொ. ஆசிரியரின் முய்ற்சி பாராட்டுக்குரியது. அதை தமிழுலகும் பயன்பெறும் பொருட்டு வெளியிடுவதில் நாங்கள் பெருமை கொள்கிறோம்.

கல்வி பயிலக்கூடிய அனைத்து கல்லூரி மாணவ, மாணவிகளுக்கும் இந்நூல் மிகவும் பயனளிக்கக்கூடிய சிறந்த வரலாற்று ஆய்வு நூலாகும். இன்னும் சொல்லப்போனால் இது அனைத்து நூலகங்களிலும் பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டிய ஒரு அருமையான அறிவுப் பெட்டகமாகும்.

அனைவரும் இந்நூலை சுவைக்க வேண்டுமெனவும், இந்நூல் யாவருக்கும் பயனாக அமைய வேண்டுமெனவும் அல்லாஹ் தஆலாவிடம் பேராதரவு வைக்கின்றோம்.

பதிப்பகத்தார்
தாருல் குர்ஆன் வெளியீட்டகம்
இலங்கை

மொழி பெயர்த்தோனுரை

உலகில் மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்ட மதங்கள் அறிவியலுடன் ஏதோ ஒரு கோணத்தில் சம்பந்தப்பட்டிருக்கலாம். ஆனால் அல்லாஹ் தஆலாவின் மூலம் அகிலத்தாரின் விமோசனத்திற்காக வழங்கப்பட்ட இஸ்லாம், அறிவியலுடன் எல்லாக் கோணங்களிலும் கைகோர்த்து வருகிறது.

நோபல் பரிசு வென்ற ஆல்.பர்ட் ஐன்ஸ்டின் கூறுகிறார் :

Science without Religion is Lame
Religion without Science is Blind.

மதமில்லாத விஞ்ஞானம் ஊனமானது
விஞ்ஞானமில்லாத மதம் குருடானது

அறிவியல் உலகினுள் நுழைந்து இதன் ஆசிரியர் சேகரித்த முத்துக்களின் கருவூலமே இத்தொகுப்பு. இதன் மூல நூல் என் கையில் கிட்டியதும் ஆச்சர்யத்தில் வியந்தேன். சிரமம் பாராமல் இதை மொழிபெயர்த்து தமிழுலகிற்கு வழங்க வேண்டுமென முனைந்தேன். மூல நூலிலிருந்து சில மாற்றங்கள் செய்துள்ளேன். தமிழுலகம் பயன்பெறும் வகையில் பலவற்றை சேர்த்தும் உள்ளேன். மொழியாக்கப் பணியில் ஏதும் தவறுகள் இருப்பின் அதை அவசியம் சுட்டிக்காட்டுமாறு பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன்.

இதை மொழியாக்கம் செய்வதற்கு நேரில் எனக்கு மனப்பூர்வமாக அனுமதியளித்த இதன் மூல நூலின் ஆசிரியருக்கும், இந்நூலினை சரிபார்த்துத் தந்துதவிய மவ்லவீ நுஸ்கி காஷி.பீ மற்றும் சா.அப்துன் நாஸிர் பாகவீ ஹழ்ரத் ஆகியோருக்கும் இந்நூலிற்கு சிறந்த ஆலோசனைகளை வழங்கி என்னை தேற்றிய நண்பர்களுக்கும் மற்றும் இது நூலாக வெளிவருவதற்கு உதவியாக இருந்த அன்பர்களுக்கும் என் உள்ளார்ந்த நன்றிகள்.

இந்நூல் அனைவர்களுக்கும் பயனாக அமைந்திட மிக்க மேலானவனான அல்லாஹ் தஆலா அருள் புரிந்தருள்வானாக!

01.09.1420
09.01.2000

மவ்லவீ
முஹம்மத் ரஸீன் ஹஸனீ
(பாஜிலே மழாஹிரீ)
இலங்கை.

இந்நூலின் உள்ளே . . .

எண்	தலைப்பு	பக்கம்
1.	வரலாறு என்றால்?	17
2.	நபிமார்களின் வம்சத் தொடர்	17
3.	நபிமார்களுக்கு இடையேயுள்ள கால இடைவெளி	18
4.	நபிமார்களின் வயதுகள், அனுப்பப்பட்ட காலம்	20
5.	அதிகமான வயதுடையோர்	22
6.	இறைத்தூதர்கள் மற்றும் இஸ்லாமியப் பெரியார்களின் தொழில்கள்	23
7.	வரலாற்றுக் குறிப்புகள் (கி.மு)	26
8.	வரலாற்றுக் குறிப்புகள் (கி.பி)	28
9.	முக்கியமான வரலாற்றுச் சம்பவங்கள்	32
10.	பொது அறிவுச் செய்திகள்	36
11.	கண்டங்கள்	37
12.	சூரிய மண்டலம்	38
13.	முக்கிய சிகரங்கள், நீளமான ஆறுகள், கடல்கள்	40
14.	பாலை நிலங்கள், தீவுகள், நீர்வீழ்ச்சிகள்	42
15.	நமது அண்ட வெளியும் கோள்களும்	43
16.	உலக நாடுகள்	46
17.	உலக மகா யுத்தம்	48
18.	இஸ்லாமிய உலகம்	50
19.	இந்தியா மற்றும் அதன் மாநிலங்கள்	51
20.	மக்காவில் இரவு 9.00 மணிக்கு ஏனைய இடங்களில் நேரம்	52
21.	டெல்லியில் மதியம் 12.00 மணிக்கு ஏனைய இடங்களில் நேரம்	53
22.	காலண்டர்கள்	55
23.	ஹிஜ்ரி காலண்டர்	59
24.	யானைப் படையினரின் சம்பவம்	60
25.	நபிகளாரின் பிறப்பும் அன்னாரைப் பற்றிய தகவல்களும்	62
26.	நபித்துவத்தின் தொடக்கமும் நபித்துவ ஆண்டுகளில் நடந்த நிகழ்ச்சிகளும்	65
27.	மதீனாவிற்கு அண்ணலாரின் ஹிஜ்ரத் மற்றும் ஹிஜ்ரி ஆண்டுகளில் நடந்த முக்கிய நிகழ்ச்சிகள்	67
28.	இஸ்லாமிய ஆட்சியின் தொடக்கம்	71
29.	நபிகளாரின் துணைவியர், நபி (ஸல்) அவர்களின் குழந்தைகள்	75
30.	அண்ணலாரின் தந்தையின் சகோதரர்கள், மாமிமார்கள் மற்றும் அடிமைப் பெண்கள்,	77
31.	ஹள்ரத் அபூபக்கர் (ரழி) அவர்களின் கிலாபத் (ஆட்சி)	78
32.	ஹள்ரத் உமர் (ரழி) அவர்களின் கிலாபத் (ஆட்சி)	79
33.	ஹள்ரத் உஸ்மான் (ரழி) அவர்களின் கிலாபத் (ஆட்சி)	81
34.	ஹள்ரத் அலீ (ரழி) அவர்களின் கிலாபத் (ஆட்சி)	83
35.	ஹள்ரத் ஹஸன் (ரழி) அவர்களின் கிலாபத் (ஆட்சி)	84
36.	உமையாக்களின் ஆட்சி	85
37.	அப்பாஸீயாக்களின் ஆட்சி	87

38. உஸ்மானியப் பேரரசு 90
39. ஸ்பெயின் பேரரசு 95
40. கஜனவீயாக்களின் ஆட்சி 97
41. இந்தியாவிற்கு முஸ்லிம்களின் வருகை 98
42. அடிமை வம்சத்து மன்னர்களின் ஆட்சி 99
43. கில்ஜீ மன்னர்களின் ஆட்சி 100
44. துக்ளக் மன்னர்களின் ஆட்சி 101
45. ஸையது வம்சத்து மன்னர்களின் ஆட்சி 102
46. லோடி மன்னர்களின் ஆட்சி 102
47. முகலாயப் பேரரசின் நிறுவல் 103
48. ஸூரி குடும்பத்தினரின் அரசாட்சி 103
49. முகலாயர்களின் போற்றத்தக்க அரசாட்சி 104
50. இந்தியாவில் நடந்த இஸ்லாமிய சுதந்திர அரசுகள் 106
51. இந்தியாவிற்கு ஐரோப்பியர்களின் வருகை 108
52. கிழக்கிந்தியக் கம்பெனியின் துவக்கம் மற்றும் பல சரித்திர குறிப்புகள் . . 108
53. ஐக்கிய நாட்டு சபை 111
54. இந்திய - பாக் பிரிவு 111
55. இந்திய ஜனாதிபதிகள் 111
56 இலங்கையின் ஆளுனர்கள் கி.பி. 1587 - 2000 112
57. பங்களாதேஷ் 115
58. இஸ்லாமிய வெற்றிகள் 115
59. ஆச்சரியம்! ஆனால் உண்மை! 120
60. பல்வேறு காலங்களில் பொருட்களின் விலைவாசி 122
61. இங்கிலாந்து மற்றும் இந்தியாவில் ஏற்பட்ட பஞ்சங்கள் 126
62. இந்தியப் பணம் இங்கிலாந்தில் 127
63. இந்திய தானியம் இங்கிலாந்தில் 128
64. இந்தியாவின் வளமான நிலை 128
65. கஅபாவை புனர்நிர்மாணம் செய்தவர்கள் 130
66. முப்பெரும் பள்ளிவாசல்கள் 133
67. மஸ்ஜிதுல் ஹராமின் விரிவாக்கம் 133
68. ஹரம் ஷரீ.ப்பின் நவீன ஏற்பாடுகள் 134
69. பைத்துல் முகத்தஸ் மற்றும் அதன் வரலாறு 136
70. மஸ்ஜிதுந் நபவீ 139
71. மஸ்ஜிதுந் நபவியின் படம் 142
72. இந்தியா - ஆட்சி, மக்கள் தொகை, மொழி 143
73. திருக் குர்ஆன் விரிவுரையாளர்கள் 145
74. ஹதீஸ் (நபிமொழி) நூல்களின் ஆசிரியர்கள் 146
75. ஹதீஸ் விரிவுரையாளர்கள் 150
76. ஹதீஸ் கலை சம்பந்தமான நூலாசிரியர்கள் 153
77. மார்க்கத்தின் பிரிவுச் சட்ட ஆய்வாளர்கள் 154
78. ஹனபி மத்ஹபின் பிரிவுச் சட்ட அறிஞர்கள் 156
79. ஷா.ப்பி மத்ஹபின் பிரிவுச் சட்ட அறிஞர்கள் 159
80. மாலிக் மத்ஹபின் பிரிவுச் சட்ட அறிஞர்கள் 160
81. ஹன்பலீ மத்ஹபின் பிரிவுச் சட்ட அறிஞர்கள் 160
82. 4 மத்ஹபுகள் பரவிய இடங்கள் 161
83. இஸ்லாமிய இறையியல் வல்லுனர்கள் 162
84. தேவ்பந்தின் பெரியார்கள் 163
85. இஸ்லாமிய சமுதாயத்தவரிடையே மறுமலர்ச்சி ஏற்படுத்திய மகான்கள் . . 166
86. சிஷ்தீயாக்களின் ஷைகுமார்கள் 167
87. ஏழுவகை காரீகளும் அவர்களிடமிருந்து திருக்குர்ஆன் ஓதல் முறையை அறிவிப்புச் செய்தவர்களும் 171
88. உலகப் பிரசித்தி பெற்றவர்கள் 173
89. கலிஞர்கள் 68 199
90. இந்தியா மற்றும் அவ்தின் ஆட்சியாளர்கள் 201
91. ஹைதராபாதை ஆண்ட நவாபுகள் 201
92. திருக் குர்ஆன் அருளப்பட்ட 23 ஆண்டுகள் 202
93. திருக் குர்ஆன் சம்பந்தமான சில வராலாறுகள் 205
94. திருக் குர்ஆன் சம்பந்தமான சில எண்ணிக்கைகள் 206
95 உலக சிந்தனையாளர்களின் பார்வையில் குர்ஆன் 208
96 நபி (ஸல்) பற்றி நல்லறிஞர்களின் கருத்துக்கள் 209
97 புகழ்பெற்ற அரபிக்கலா சாலை மழாஹிருல் உலூம் (உ.பி) 213
98. திருக்குர்ஆனின் வசனங்களின் வகைகள் 214
99. உலக மொழிகளில் திருக் குர்ஆன் மொழிபெயர்ப்புகளின் அட்டவணை . . 214
100. திருக்குர்ஆன் தமிழ் மொழி பெயர்ப்புகள் 229
101. திருக் குர்ஆன் மொழிபெயர்ப்புகளின் எண்ணிக்கைகள் 230
102. எழுத்துக்களின் எண்ணிக்கையில் குர்ஆனின் அதிசயங்கள் 231
103. நான்கு இன்ஜீல்கள் 232
104. ஈஸா (அலை) அவர்களின் 12 தோழர்கள் 232
105. ஷீயாக்களின் 12 இமாம்கள் 233
106. லைலதுல் கத்ர் 233
107. நபி (ஸல்) அவர்களின் காலத்தில மார்க்கத் தீர்ப்பு வல்லுனர்கள் 234
108. ஹஜ் கிரியைகளின் வரிசை முறை (அட்டவணை) 235
109. திருக் குர்ஆன் விளக்கவுரை நூல்கள் 236
110. ஹதீஸ் கலை சம்பந்தமான நபிமொழியியல் நூல்கள் 237
111. இல்முல் ஹதீஸ், .ப்பிக்ஹ், உசூலுல் .ப்பிக்ஹ், முனாழரா, அகீதா, இல்முல் கலாம், பலாகத் சம்பந்தமான நூல்கள் 238
112. இலக்கியம் சம்பந்தமான நூல்கள், பிலாசபி, வானவியல், நட்சத்திர, சாஸ்திரம், கணிதம், பொறியியல், அளவியல், அரபி இலக்கணம் சம்பந்தமான நூல்கள் 241
113. சொல்லிலக்கணம், தஜ்வீத், மருத்துவம், அரபி இலக்கணம் சம்பந்தமான நூல்கள் 245
114. இஸ்லாமிய நூல் நிலையங்கள் 249
115. இந்திய இஸ்லாமிய அரபிக் கல்லூரிகள் 250
116. இலங்கை அரபிக் கல்லூரிகள் 252

117 தமிழக அரபிக் கல்லூரிகள் 254
118. தமிழக நிஸ்வான் (பெண்கள்) மதரஸாக்கள் 257
119. உலகப் புகழ் பெற்ற கலாசாலை தாருல் உலூம் தேவ்பந்த் ஒரு பார்வை. 260
120. கல்லூரியின் மேற்பார்வையாளர்கள், முதல்வர்கள், தலைமை ஆசிரியர்கள், மு.ப்திகள், பாஜில் பட்டம் பெற்ற மாணவச் செல்வங்களின் எண்ணிக்கை. 260
121. தாருல் உலூம் தேவ்பந்தின் நற்சேவை 263
122. நூல்கள் வெளியீடு 264
123. இமாம் அஹ்மது (ரஹ்) அவர்களின் ஜனாஸா (உடல்) 264
124. முக்கியமான கண்டுபிடிப்புகள் 265
125. ராக்கெட் உலகம் 265
126. உலகில் மிகப் பெரியவை 269
127. மிகப்பெரும் நில நடுக்கங்கள் 270
128. பழம்பெரும் ஏழு அதிசயங்கள் 272
129. ஹஜ்ஜாஜின் அநீதி 275
130. மகா பொய்யன் மஹ்தீயின் குழப்பம் 276
131. உயிருடனிருக்கும் ஷுஹதாக்கள் 277
132. நபித் தோழர்களும் அவர்கள் அறிவித்த ஹதீஸ்களின் எண்ணிக்கைகளும் 277
133. இறுதியான நபித்தோழர்கள் 283
134. உர்து மொழியின் வரலாறு 283
135. நிறுத்தல் அளவுகள் 289
136. ஸகாத், ஸத்கத்துல் ப்பித்ர் சம்பந்தமான தகவல்கள் 290
137. கஸ்ர் தொழுகை, மஹ்ர் (மணக்கொடை) அளவு 291
138. 5000 ஆண்டுகளுக்குரிய ஹிஜ்ரி காலண்டர் 292
139. 5000 ஆண்டுகளுக்குரிய ஈஸவீ காலண்டர் 294
140. நிரந்தர ஹிஜ்ரி காலண்டர் (ஹி.100 - 5000) 296
141. ஈஸவீ காலண்டர் (கி.பி.1974 - 2099) 297
142. சந்திரச் சுற்றுக்கள் 298
143. சூரிய சந்திர வருடத்தின் ஏற்றத்தாழ்வு 299
144. சூரிய சந்திர மாதங்களின் ஏற்றத் தாழ்வு 299
145. சூரிய சந்திர வருடங்களின் ஒற்றுமை 299
146. சந்திரனின் கூடுதல் குறைவின் அளவு 300
147. உஹுதுப் போர்க்களம் (வரைபடம்) 301
148. பத்ருப் போர்க்களம் (வரைபடம்) 302
149. புனித பைத்துல் முக்ததஸின் வடிவம் 303
150. இந்நூலாசிரியர் பேசுகிறார்.... 304

வரலாறு

ஒரு நிகழ்ச்சி நடந்த காலத்தையும், அது பற்றிய செய்திகளையும் எடுத்துரைப்பதற்கே 'வரலாறு' [illegible] எனப்படுகிறது. இதற்கு அரபியில் 'தாரீ்க்' (பன்மை : தவாரீ்க்) எனப்படும்.

வரலாற்றின் நோக்கம்

முந்தைய சமுதாயத்தினர் மற்றும் நபிமார்களின் நிலைமைகள், மார்க்கம் மற்றும் உலக சம்பந்தமான அறிவுரைகளை அள்ளித்தரும் பயன்மிகு கலையே வரலாறு. (தத்கிரயே ீ்புனூன் - பக். 7)

ஹள்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் முதல் ஹள்ரத் ஆதம் (அலை) அவர்கள் வரை செல்லும் வம்சத் தொடர்

முஹம்மத் பின் அப்துல்லாஹ் பின் அப்துல் முத்தலிப் பின் ஷைபா பின் ஹாஷிம் அம்ர் பின் அப்து மனா.ப் முகீரா பின் குஸை ஜைது பின் கிலாப் பின் முர்ரா பின் கஅப் பின் லுஅய் பின் காலிப் பின் .பிஹ்ர் பின் மாலிக் பின் நள்ர் பின் கினானா பின் ஹுஜைமா பின் முத்ரிகா ஆமிர் பின் அத்னான் பின் உத் (உதத்) பின் முகவ்விம் பின் நாஹுர் பின் தெய்ரா பின் யஅருப் பின் யஷ்ஜுப் பின் நாபித் பின் இஸ்மாயீல் பின் இப்ராஹீம் கலீலுல்லாஹ் பின் தாரீஹ் ஆஸர் பின் நாஹுர் ஸாரு. பின் ராஅவ் பின் .பாலஹ் பின் ஐபர் பின் ஷாலஹ் பின் அர்.பக்ஷத் பின் ஸாம் பின் நூஹ் பின் லமக் பின் மத்தூ ஷலஹ் பின் அக்நூஹ் இத்ரீஸுன் நபீ பின் யர்த் பின் மஹலீல் பின் கைனன் பின் யானிஷ் பின் ஷீஸ் பின் ஆதம் அலைஹிஸ்ஸலாம்.
(ஸீரத் இப்னு ஹிஷாம் - பாகம் - 1, பக்கம் 1-3)

ஹள்ரத் இஸ்மாயீல் (அலை)

அனைத்து அரபிக்குலத்தார்களின் தந்தை ஹள்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்களாவார்கள். (இப்னு ஹிஷாம் பாகம் - 1, பக். 7)

ஹள்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்களின் 12 குழந்தைகள்

1. நாபித், 2. கைஸார், 3. அத்புல், 4. பல்ஷாத், 5. மிஸ்மஆ, 6. மாஷீ, 7. திம்மா, 8. ஆஸர், 9. தீமா, 10. யதூர், 11. நபிஷ், 12. கைஸுமா

இவர்கள் அனைவரின் தாயார் ரஅலா பின்த் மளாள் பின் அம்ர் ஜுர்ஹமீ ஆவார்கள். ஹள்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்கள் 130 வயதில் இறப்பெய்தினார்கள். தம் தாயுடன் கஅபாவில் ஹதீமின் எல்லைக்குள் அடக்கம் செய்யப்பட்டார்கள். அவர்களின் தாயாரின் பெயர் ஹாஜரா. அவர்கள் எகிப்தை சேர்ந்தவராவார்.

(இப்னு ஹிஷாம் பாகம் - 1, பக். 5,6)

இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கும் ஆதித்தூதர் ஆதம் (அலை) அவர்களுக்கும் இடையேயுள்ள கால இடைவெளி

♦ நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் பிறப்புக்கும் ஹள்ரத் ஈஸா (அலை) அவர்களின் பிறப்புக்கும் மத்தியில் 571 வருடங்கள்.

♦ ஹள்ரத் ஈஸா (அலை) முதல் ஹள்ரத் மூஸா (அலை) அவர்களின் மரணத்திற்கும் மத்தியில் 1716 வருடங்கள்

♦ ஹள்ரத் மூஸா (அலை) அவர்களுக்கும் ஹள்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களுக்கும் மத்தியில் 545 வருடங்கள்.

♦ ஹள்ரத் இப்ராஹீம் (அலை) முதல் ஹள்ரத் நூஹ் (அலை) அவர்களின் காலத்தில் ஏற்பட்ட வெள்ளப் பிரளயத்திற்கும் மத்தியில் 1081 வருடங்கள்.

♦ அதற்கும் ஹள்ரத் ஆதம் (அலை) அவர்களுக்கும் மத்தியில் 2242 வருடங்கள்.

♦ வரலாற்று ஆசிரியர்களின் பிரபல்யமான கருத்துப்படி நபிகளார் முஹம்மத் (ஸல்) அவர்களின் பிறப்புக்கும் ஹள்ரத் ஆதம் (அலை) அவர்களுக்கும் மத்தியில் 6155 வருடங்களின் இடைவெளியிருக்கின்றது.

(துருஸுத் தாரீகுல் இஸ்லாம்,
முஹ்யித்தீனே ஹயாத் பாகம் 1, பக். 21,
மற்றும் ஷரஹுல் மகாலா' பக். 18)

♦ ஹள்ரத் ஆதம் (அலை) முதல் ஹள்ரத் நூஹ் (அலை) வரை 2200 வருடங்கள்

♦ ஹள்ரத் நூஹ் (அலை) முதல் ஹள்ரத் இப்ராஹீம் (அலை) வரை 1143 வருடங்கள்

♦ ஹள்ரத் இப்ராஹீம் (அலை) முதல் ஹள்ரத் மூஸா (அலை) வரை 575 வருடங்கள்

♦ ஹள்ரத் மூஸா (அலை) முதல் ஹள்ரத் தாவூத் (அலை) வரை 579 வருடங்கள்

♦ ஹள்ரத் தாவூத் (அலை) முதல் ஹள்ரத் ஈஸா (அலை) வரை 1053 வருடங்கள்

♦ ஹள்ரத் ஈஸா (அலை) முதல் ஹள்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் வரை 600 வருடங்கள்

♦ ஹள்ரத் ஆதம் (அலை) முதல் ஹள்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் வரை 6150 வருடங்கள்

(தல்கீஹ் இப்னு ஜவ்ஸி, பக். 3)

♦ ஹள்ரத் ஆதம் (அலை) பிறப்பதற்கு இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பிலிருந்தே உலகில் ஜின் வர்க்கத்தினர் குடியிருந்தனர்.

(அல்பிதாயா வந்நிஹாயா, பாகம்:1, பக்.:71)

ஸுலைமான் (அலை) அவர்கள் கட்டிய **பைத்துல் முகத்தஸ்**

நபிமார்களின் வயதுகள்

நபிமார்களின் பெயர்கள்	வயது
ஹள்ரத் ஆதம் (அலை) அவர்கள்	1000 வருடங்கள்
ஹள்ரத் ஹூத் (அலை) அவர்கள்	465 வருடங்கள்
ஹள்ரத் இஸ்ஹாக் (அலை) அவர்கள்	180 வருடங்கள்
ஹள்ரத் மூஸா (அலை) அவர்கள்	120 வருடங்கள்
ஹள்ரத் சுலைமான் (அலை) அவர்கள்	52 வருடங்கள்
ஹள்ரத் ஷீஸ் (அலை) அவர்கள்	912 வருடங்கள்
ஹள்ரத் ஸாலிஹ் (அலை) அவர்கள்	280 வருடங்கள்
ஹள்ரத் யூ.ஸுப் (அலை) அவர்கள்	160 வருடங்கள்
ஹள்ரத் ஹாரூன் (அலை) அவர்கள்	130 வருடங்கள்
ஹள்ரத் ஸக்கரிய்யா (அலை) அவர்கள்	207 வருடங்கள்
ஹள்ரத் இத்ரீஸ் (அலை) அவர்கள்	365 வருடங்கள்
ஹள்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள்	120 வருடங்கள்
ஹள்ரத் யூஸு.ப் (அலை) அவர்கள்	110 வருடங்கள்
ஹள்ரத் அய்யூப் (அலை) அவர்கள்	88 வருடங்கள்
ஹள்ரத் யஹ்யா (அலை) அவர்கள்	195 வருடங்கள்
ஹள்ரத் நூஹ் (அலை) அவர்கள்	1000 வருடங்கள்
ஹள்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்கள்	130 வருடங்கள்
ஹள்ரத் ஷுஐப் (அலை) அவர்கள்	225 வருடங்கள்
ஹள்ரத் தாவூத் (அலை) அவர்கள்	100 வருடங்கள்
ஹள்ரத் ஈஸா (அலை) அவர்கள்	30 வருடங்கள்

(அல்பிதாயா, இத்கான், பயாழே ம.ரூ.பீ)

இறைத்தூதரின் பெயர்	அவர்களின் வயது	அலுப்பய்யப்பட்ட வரிசை எண்	அலுப்பய்யப்பட்ட காலம்
முஹம்மத் (ஸல்) அவர்கள்	63	25	கி.பி. 571 - 632
ஹள்ரத் ஈஸா (அலை)	30	24	கி.பி. 1 - 30
ஹள்ரத் யஹ்யா (அலை)	195	23	கி.பி. 1 - 30
ஹள்ரத் ஸக்கரிய்யா (அலை)	207	22	கி.மு. 20 - 100
ஹள்ரத் யூஜுஸ் (அலை)	-	21	கி.மு. 8 ம் நூற்றாண்டு
ஹள்ரத் அல்யஸஉ (அலை)	-	20	கி.மு. 9 ம் நூற்றாண்டு
ஹள்ரத் இல்யாஸ் (அலை)	-	19	கி.மு. 9 ம் நூற்றாண்டு
ஹள்ரத் சுலைமான் (அலை)	52	18	கி.மு. 932 - 985
ஹள்ரத் தாவூத் (அலை)	100	17	கி.மு. 973 - 1043
ஹள்ரத் ஹாரூன் (அலை)	130	16	கி.மு. 1317 - 1439
ஹள்ரத் மூஸா (அலை)	120	15	கி.மு. 1316 - 1436
ஹள்ரத் துல்கி.ப்ல் (அலை)	75	14	கி.மு. 15 - 16 ம் நூற்றாண்டுகளுக்கு மத்தியில்
ஹள்ரத் அய்யூப் (அலை)	88	13	
ஹள்ரத் ஷீஸ் (அலை)	225	12	
ஹள்ரத் யூஸு.ப் (அலை)	110	11	கி.மு. 1500 - 1610
ஹள்ரத் யூ.ஸுப் (அலை)	160	10	கி.மு. 1653 - 1800
ஹள்ரத் இஸ்ஹாக் (அலை)	180	9	கி.மு. 1581 - 1761
ஹள்ரத் இஸ்மாயீல் (அலை)	130	8	கி.மு. 1638 - 1781
ஹள்ரத் லூத் (அலை)	125	7	கி.மு. 1686 - 1861
ஹள்ரத் இப்ராஹீம் (அலை)	120	6	கி.மு. 1686 - 1861

● ஹள்ரத் ஸாலிஹ் (அலை)	280	5	கி.மு. 1800 - 2000
● ஹள்ரத் ஹூத் (அலை)	465	4	கி.மு. 2200 - 2500
● ஹள்ரத் நூஹ் (அலை)	1000	3	கி.மு. 2900 - 3900
● ஹள்ரத் இத்ரீஸ் (அலை)	365	2	
● ஹள்ரத் ஆதம் (அலை)	1000	1	

அதிகமான வயதுடையோர்

பெயர்கள்	வயது
● ஹள்ரத் ஆதம் (அலை) அவர்கள்	1000 வருடங்கள்
● ஹள்ரத் ஹூத் (அலை) அவர்கள்	465 வருடங்கள்
● ஹள்ரத் ஷீஸ் (அலை) அவர்கள்	912 வருடங்கள்
● ஹள்ரத் நூஹ் (அலை) அவர்கள்	1050 வருடங்கள்
● ஹள்ரத் ஸல்மான் .ாபார்ஸீ (ரழி) அவர்கள்	250 வருடங்கள்
● ஹஸ்ஸான் பின் ஸாபித் (ரழி) அவர்கள்	120 வருடங்கள்
● லுக்மான் பின் ஆதியல் அக்பர் அவர்கள்	502 வருடங்கள்
● அதீ பின் ஹாதம் தாஈ	180 வருடங்கள்
● ஹகீம் பின் ஹிஸாம்	120 வருடங்கள்
● ஷத்தாத்	900 வருடங்கள்

பெயர்கள்	வயது
● நம்ரூத்	800 வருடங்கள்
● கிஸ் பின் ஸாஇதா	380 வருடங்கள்
● அப்துல் மஸீஹ் பின் அம்ர் கஸ்ஸானீ	150 வருடங்கள்
● ஸுஹைர் பின் அபீ ஸுலாமா	120 வருடங்கள்
● ஸிர்ரு பின் ஜைஷ் அஸத்	120 வருடங்கள்
● ஹிம்யர் (ரோம்) அரசர் தாஜதன்	300 வருடங்கள்
● துரைத் பின் ஸிம்மா	200 வருடங்கள்
● மவ்லானா அப்துல் கனி பாரபன்கவீ	104 வருடங்கள்

(தல்கீஹ் இப்னு ஜவ்ஸி - பக்கம் 231. ஸாவி - பாகம் 4, பக்கம் 317)

இறைத்தூதர்கள் மற்றும் இஸ்லாமியப் பெரியார்களின் தொழில்கள்

வேளாண்மை

- ஹள்ரத் ஆதம் (அலை)
- ஹள்ரத் இப்றாஹீம் (அலை)
- ஹள்ரத் லூத் (அலை)
- ஹள்ரத் அல்யஸஉ (அலை)
- ஹள்ரத் ஸ.துபின் அபீ வக்காஸ் (ரழி)
- ஹள்ரத் உர்வா பின் ஸுபைர் (ரஹ்)
- ஹள்ரத் அபூபக்ர் (ரழி) அவர்களின் குடும்பத்தினர்
- ஹள்ரத் அப்துர்ரஹ்மான் பின் அல்வத் (ரஹ்)
- ஹள்ரத் இப்னு ஸீன் (ரஹ்)
- ஹள்ரத் அப்துர் ரஹ்மான் பின் .ஸைத் (ரஹ்)

நெசவு

- ஹள்ரத் ஆதம் (அலை)
- ஹள்ரத் ஹூத் (அலை)
- ஹள்ரத் இத்ரீஸ் (அலை)
- ஹள்ரத் ஸாலிஹ் (அலை)
- ஹள்ரத் அபூ அய்யூப் அல் அன்ஸாரீ (ரழி)
- ஹள்ரத் ஸைத் அப்துல்லாஹ் பின் அபீ அய்யூப் அன்ஸாரீ (ரழி)
- இமாம் அபூ ஹனீ.பா (ரஹ்)
- ஷாம் நகரத்தின் மு.ப்தி - இஸ்மாயீல் ஹாஜிக் (ரஹ்)
- முஹத்திஸ் ஜரீஸுமா தாபிஈ (ரஹ்)
- .பர்க்கத் ஸன்ஜீ தாபிஈ (ரஹ்)
- ஸைத் ஸகர் நஸ்ஸாஜ் (ரஹ்)

❄ ஹள்ரத் மஜ்மஅ (ரஹ்)

❄ முஹம்மத் புகாரீ நக்ஷபந்தீ (ரஹ்)

❄ காஜா பஹாவுத்தீன் (ரஹ்)

❄ ஷைகு அபூபக்ர் நஸ்ஸாஜ் (ரஹ்)

❄ ஷைகு அஹ்மத் நெஹர்வானீ (ரஹ்)

❄ ஷைகு அலீ ராமியத்னா (ரஹ்)

❄ மு.ம்.மின் ஆரி.ப் முனீரீ (ரஹ்)

❄ ஹள்ரத் அதா ஸுலமா (ரஹ்)

❄ ஹள்ரத் ஷைகு அப்துல் குத்தூஸ் கங்கோஹீ (ரஹ்)

❄ ஹள்ரத் ஜுனைதுல் பக்தாதீ (ரஹ்)

❄ ஹள்ரத் ஸிக்கன்தர் துல்கர்ணைன் (ரஹ்)

❄ ஹள்ரத் ஷைகு பின் *தக்னூன் (ரஹ்)

❄ ஹள்ரத் ஜம்ஷேத் பாதுஷா

சாயமிடுதல்

⌘ ஹள்ரத் ஆதம் (அலை) ⌘ ஹள்ரத் இப்ராஹீம் (அலை)

⌘ ஹள்ரத் அபூ அய்யூப் அல் அன்ஸாரீ (ரழி)

ஜவுளி

❖ ஹள்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் ❖ ஹள்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரழி) அவர்கள் ❖ ஹள்ரத் உஸ்மான் (ரழி) அவர்கள் ❖ ஹள்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்.ப் (ரழி) ❖ ஹள்ரத் தல்ஹா (ரழி) அவர்கள் ❖ ஹள்ரத் ஸுபைர் (ரழி) அவர்கள் ❖ இமாம் அபூ ஹனீ.பா (ரஹ்) அவர்கள் ❖ இப்னு ஸீரீன் (ரஹ்) அவர்கள் ❖ ஹள்ரத் ஜுனைதுல் பக்தாதீ (ரஹ்) அவர்கள்

*அல் கவாகிபுத் தராரீ எனும் நூலை பிரபல நபிமொழி நூலான புகாரியின் அட்டவணைப்படி கோர்வை செய்தார்கள். 12 பாகங்களில் இதற்கு விரிவுரை எழுதப்பட்டுள்ளது.

தச்சு

☯ ஹள்ரத் நூஹ் (அலை) அவர்கள் ☯ ஹள்ரத் ஸக்கரிய்யா (அலை) அவர்கள் ☯ ஹள்ரத் ஹாகானீ (ரஹ்) அவர்கள்

வணிகம்

🗁 ஹள்ரத் ஹூத் (அலை) அவர்கள் 🗁 ஹள்ரத் ஸாலிஹ் (அலை) அவர்கள் 🗁 ஹள்ரத் ஹாரூன் (அலை) அவர்கள் 🗁 ஹள்ரத் ஹாஷிம் அவர்கள் 🗁 ஹள்ரத் காஜா அபூ தாலிப் அவர்கள் 🗁 ஹள்ரத் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள்

ஆடு மேய்த்தல்

♈ ஹள்ரத் இஸ்ஹாக் (அலை) அவர்கள் ♈ ஹள்ரத் யஅகூப் (அலை) அவர்கள் ♈ ஹள்ரத் மூஸா (அலை) அவர்கள் ♈ ஹள்ரத் லுக்மான் (அலை) அவர்கள் ♈ ஹள்ரத் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள்.



உலகின் முதல் இறை இல்லம் புனித **க.ப்துல்லாஹ்**

வரலாற்றுக் குறிப்புகள் (கி.மு.)

♦கி.மு. 2100 :

பாபல் மன்னர் 'ஹமுராபி' என்பவர் நேர்மையான சட்டங்களை இயற்றினார்.

♦கி.மு. 1925 :

ஹிபத்திகள் பாபல் நகரத்தை கைப்பற்றிக் கொண்டனர்.

♦கி.மு. 1500 :

இந்தியாவிற்கு ஆரியர்களின் வருகை. மஹாபாரதப் போர்

♦கி.மு. 1455 :

யதஷ்டர் எனும் அரசன் தானாக பனி மலையில் சிக்குண்டு மரணமடைந்தான்.

♦கி.மு. 1362 :

மிஸ்ரில் தவ்தனஹ் ஐமன் அரியணை ஏறினார்.

♦கி.மு. 1200 - 800 :

ரிக் வேதம் கோர்வையாகுதல்

♦கி.மு. 1000 :

்.பாரசீகர்களின் தூதுவர் ஜர்தஷ்த் என்பவர் ஜர்தஷ்த் எனும் தத்துவத்தை போதித்தார்.

♦கி.மு. 1000 - 974 :

ஹள்ரத் தாவூத் (அலை) அவர்களின் அரசாட்சி.

♦கி.மு. 1008 - 978 :

ஹள்ரத் ஸுலைமான் (அலை) அவர்களின் அரசாட்சி

♦கி.மு. 978 :

ஹள்ரத் ஸுலைமான் (அலை) அவர்கள்

பைத்துல் முகத்தஸை (ஹைக்கலை) கட்டினார்கள்.

♦கி.மு. 800 - 315 :

இந்தியாவில் சாஸ்திரீகர்களின் காலம்.

♦கி.மு. 800 :

'ம.்.ரிப்' எனப்படும் நீர் தேக்கம் (யமன் நாட்டில்) கட்டப்பட்டது. உயரம்: 150 அடி, அகலம் : 50 அடி, நீளம் : 300 சதுர மைல்.

(ஹாஷியா தர்ஜமா ஷைகுல் ஹிந்த் - பக்: 573)

♦நபி முஹம்மது (ஸல்) அவர்களுக்கு 400 வருடங்களுக்கு முன் 'ஸபா' நாடு அழிக்கப்பட்டு பாலைவனமாக மாறிற்று.

(அஸஹ்ஹுஸ் ஸியர் பக்கம் : 55)

♦கி.மு. 604 - 561 :

ஸுலைமான் (அலை) அவர்கள் ஜின்களின் மூலம் நிறுவிய 'பைத்துல் முகத்தஸை' புக்த் நஸர் என்பவன் கி.மு. 587 இல் தகர்த்தான்.

♦கி.மு. 500

பாபல், எகிப்து, சிந்து நதிக்கரை பகுதிகளில் கலாச்சாரப் பண்பாடுகளின் தொடக்கம்.

♦கி.மு. 599 :

ஜைன மதத்தின் நிறுவனரான மஹாவீரின் பிறப்பு. இறப்பு: கி.மு.572

♦கி.மு. 563 :

கௌதம புத்தரின் பிறப்பு. இறப்பு தனது 80 ஆம் வயதில். (கி.மு.483)

♦கி.மு. 415 :

டெல்லி நகரம் புதுப்பிக்கப்பட்டது.

♦கி.மு. 326 :

இந்தியா மீது பெரிய இஸ்கந்தரி (மாவீரர் அலெக்ஸாண்டரி)ன் தாக்குதல். இறப்பு : தனது 33 ஆம் வயதில். (கி.மு.32)

♦கி.மு. 322 - 298 :

சந்திரகுப்தர் பாடலிபுத்திரத்தில் மௌரிய வம்சத்தை நிறுவினார். (பாட்னா)

♦கி.மு. 302 - 298 :

கிரேக்கத் தூதுவர் மெகஸ்தனிஸ் - இந்தியா வருகை.

♦கி.மு. 298 - 273 :

சந்திரகுப்த மௌரியரின் மகன் பிந்துசாரரின் ஆட்சி.

♦கி.மு. 273 - 232 :

பந்தோஸாரின் மகன் அசோகரின் ஆட்சி. இச்சமயம் அமைதி மற்றும் பண்பாட்டின் காலமாக நாடு திகழ்ந்தது.

(கி.பி.) ஆண்டுகளில் நடந்த வரலாற்றுக் குறிப்புகள்

♦கி.பி. 120 - 162 :
மன்னர் கனிஷ்கரின் அரசாட்சி

♦கி.பி. 227 :
ஈரான் நாட்டு முதல் மன்னர் அர்தஷீர்.

♦கி.பி. 249 :
'அஸ்ஹாபுல் கஹ்.ப்' எனப்படும் குகைவாசிகளின் சம்பவம். கி.பி. 549 ஆம் ஆண்டு (சுமார் 300 வருடங்களுக்குப் பின்) மீண்டும் உயிர்பெற்று எழுந்தார்கள்.
(ஹாஷியா - த.ப்ஸீரே ஹக்கானீ - பக்கம் 71)

♦கி.பி. 320 - 330 :
பாடலிபுத்திரத்தில் முதலாம் சந்திர குப்தரின் குப்த சாம்ராஜ்யம்.

♦கி.பி. 320 - 467 :
குப்த குடும்பத்தினரின் சாம்ராஜ்யம்.

♦கி.பி. 330 - 375 :
சந்திரகுப்தரின் மகன் சமுத்திர குப்தரின் சாம்ராஜ்யம். கி.பி. 375 - 413 வரை சமுத்திர குப்தரின் மகனான விக்ரமாதித்தனின் சாம்ராஜ்யம்.

♦கி.பி. 405 - 411 :
சீனச் சுற்றுலா பயணி பாஹியான் - இந்தியா வருகை

♦கி.பி. 450 - 540 :
'ஹூன்' எனும் மங்கோலியக் கூட்டத்தினர் குப்த சாம்ராஜ்யத்தை முடிவுக்கு கொண்டு வருதல்.

♦கி.பி. 540 :
'ஹூன்' எனும் கூட்டத்தினரின் கடைசி ஆட்சியளரான 'மஹ்ரே குல்லின் மறைவு.

♦கி.பி. 622 ஆம் ஆண்டு ஹிஜ்ரி வருடத்தின் தொடக்கம்.

♦கி.பி. 606 - 647 :
ஹர்ஷவர்த்தனின் சாம்ராஜ்யம். தலைமை இடத்தை தானேஸரிலிருந்து கன்னோஜுக்கு மாற்றினார்.

♦கி.பி. 650 - 1200 :
வட மற்றும் தென் இந்தியப் பகுதிகளில் ராஜபுத்தரின் அரசாட்சி. முஸ்லிம்கள் இவர்களில் பல அரசர்களைத் தோற்கடித்தனர்.

♦ஹிஜ்ரி 75 - கி.பி. 694 :
இஸ்லாமிய நாணயம் புழக்கத்தில் விடப்பட்டது. ஹிஜ்ரி இரண்டாம் நூற்றாண்டில் ஸமர்கந்தில் காகித உற்பத்திக்கு அடித்தளமிடப்பட்டது.

♦ஹி. 92 - கி.பி. 711 :
தாரிக் பின் ஸியாத் அவர்கள் 12 ஆயிரம் படையுடன் ஒரு இலட்சம் கிறிஸ்துவர்களை தோற்கடித்து ஸ்பெயினை (உன்துலுஸ்) வெற்றி கொண்டார்கள்.

♦ஹி. 93 - கி.பி. 712 :
பதினேழு வயதான முஹம்மத் பின் காஸிம், அரசர் தாஹிரை தோற்கடித்து சிந்தையும் முல்தானையும் வெற்றிகொண்டார்.

♦ஹி. 391 - கி.பி. 1001 :
மஹ்மூத் கஜ்னவீ. பஞ்சாப் மன்னன் ஜெயபாலை பெஷாவருக்கு அருகாமையில் தோற்கடித்தார்.

♦ஹி. 398 - கி.பி. 1008 :
மஹ்மூத் கஜ்னவீ பெஷாவருக்கு அருகில் மன்னன் அனந்தபாலை தோற்கடித்தார்.

♦ஹி. 399 - கி.பி. 1009 :
நகர் கோட் (கான்கடா) மீது மஹ்மூத் கஜ்னவீயின் வெற்றிகரமான தாக்குதல்.

♦ஹி. 409 - கி.பி. 1018 :
கன்னோஜ் மீது மஹ்மூத் கஜ்னவீயின் தாக்குதல், பால் ராணியைப் பணிய வைத்தது.

♦ஹி. 412 - கி.பி. 1021 :
மஹ்மூத் கஜ்னவீ அனந்த பாலின் மகன் தர்லோசன் பாலை தாக்கி லாஹூரை வெற்றிகொண்டார்.

♦ஹி. 416 - கி.பி. 1025 :
மஹ்மூத் கஜ்னவீ மூலம் காட்டியவாரிலுள்ள சோமநாத் மீது வெற்றிகரமான படையெடுப்பு.

♦ஹி. 588 - கி.பி. 1192 :
மஹ்மூத் கஜ்னவீ பிருத்விராஜ் ராயே பதூராவை வீழ்த்தி டெல்லி மற்றும் அஜ்மீரை வெற்றிகொண்டார்.

♦ஹி. 590 - கி.பி. 1194 :
முஹம்மத் கோரி ஜெயசந்தை தோற்கடித்து கன்னோஜ் மற்றும் பனாரஸை வெற்றிகொண்டார்.

♦ஹி. 903 - கி.பி. 1498 :
மூன்று கப்பல்களில் 120 மாலுமிகளுடன் வாஸ்கோடகாமா ஸ்பெய்னிலிருந்து கோழிக்கோடு (கேரளா) வருகை.

♦ஹி. 932 - கி.பி. 1526 :
பாபருக்கும் இப்ராஹீம் லோடிக்கும் மத்தியில் நடந்த முதலாம் பானிபட் போர்.

♦ஹி. 963 - கி.பி. 1556 :
பாபருக்கும் இப்ராஹீம் லோடிக்கும் மத்தியில் நடந்த இரண்டாம் பானிபட் போர்.

♦ஹி. 976 - கி.பி. 1568 :
∴பத்ஹேபூர்சிக்ரி மஸ்ஜிதின் கட்டுமானத்திற்கு அடித்தளமிடப்பட்டது.. பணி நிறைவு பெற்றது: ஹி. 979 - கி.பி. 1571.

♦ஹி. 981 - கி.பி. 1573 :
ஜோன்பூரில் கோமதி நதியின் பாலம் கட்டப்பட்டது. 'சிராத்துல் முஸ்தகீம்' (நேரான பாதை) என்பது அதன் வரலாற்றுப் பெயர்.

♦ஹி. 983 - கி.பி. 1575 :
டெல்லியில் அப்துன் நபி பள்ளிவாசல் கட்டப்படுதல். ஜம்ஈய்யதே உலமாயே ஹிந்தின் தற்போதைய அலுவலகம் இங்குதான் உள்ளது.

♦ஹி. 984 - கி.பி. 1576 :
அக்பர் மற்றும் ராணா பிரதாபுக்கு மத்தியில் நடந்த ஹல்தீ காடியின் யுத்தம்.

♦ஹி. 1011 - கி.பி. 1602 :
ஹாலந்துவாசிகள் 'டச் ஈஸ்ட் கம்பெனி'யை நிறுவினர்.

♦ஹி. 1017 - கி.பி. 1608 :
மொகலாயப் பேரரசின் போது வில்லியம் ஹாக்கின்ஸின் வருகை.

♦ஹி. 1047 - கி.பி. 1637 :
அஜ்மீர் பள்ளிவாசலின் கட்டட வேலை முடிவடைதல்.
கட்டியவர் : மன்னர் ஷாஜஹான். செலவு : 40,000 ரூபாய்.

♦ஹி. 1048 - கி.பி. 1639 :
டெல்லி செங்கோட்டை கட்டுமானப் பணி தொடக்கம். கட்டியவர் : மன்னர் ஷாஜஹான். முடிவு : ஹி. 1058.

♦ஹி. 1060 - ஹி. 1067 வரை (கி.பி. 1650 - கி.பி. 1657 வரை)
டெல்லி ஜாமிஆ மஸ்ஜிதின் கட்டுமானம். கட்டியவர் : மன்னர் ஷாஜஹான் செலவு : 10 இலட்சம் ரூபாய்.

♦ஹி. 1074 - கி.பி. 1664 :
∴பிரெஞ்ச் ஈஸ்ட் இந்தியா கம்பெனி' நிறுவப்பட்டது.

♦ஹி. 1101 - கி.பி. 1690 :
கல்கத்தா நகரம் உருவாக்கப்பட்டது.

♦ஹி. 1151 - கி.பி. 1739 :
ஈரான் மன்னர் நாதிர் ஷா டெல்லி மீது படையெடுத்தல். எண்ணற்ற செல்வங்களுடன் ஷாஜஹான் மன்னரின் தங்க மயிலாசனம் மற்றும் கோஹினூர் மாணிக்கத்தை கவர்ந்து சென்றார்.

♦ஹி. 1161 - ஹி. 1177 (கி.பி. 1748 - கி.பி. 1764) :
அப்கானிஸ்தான் மன்னர் அஹ்மத் ஷா அப்தாலி, இந்தியாவின் மீது பலமுறை எடுத்த படையெடுப்பு முகலாயப் பேரரசை நலிவடையச் செய்தது.

♦ஹி. 1174 - கி.பி. 1761 :
அஹ்மத் ஷா அப்தாலிக்கும் மராட்டியர்களுக்கும் மத்தியில் ஏற்பட்ட மூன்றாம் பானிபட் போர்.

♦ஹி. 1159 - ஹி. 1161 (கி.பி. 1746 - கி.பி. 1748) :
∴பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் மத்தியில் ஏற்பட்ட முதலாம் கர்நாடகப் போர்.

♦ஹி. 1162 - ஹி. 1168, (கி.பி. 1749 - கி.பி. 1755) :
இரண்டாம் கர்நாடகப் போர்

♦ஹி. 1171 - ஹி. 1176, (கி.பி. 1758 - கி.பி. 1763) :
மூன்றாம் கர்நாடகப் போர், இதில் ஆங்கிலேயர் வெற்றி பெற்றனர்.

♦ஹி. 1367 - கி.பி. 1948 :
கஷ்மீருக்காக இந்தியா - பாகிஸ்தான் இடையே நடந்த முதல் போர்.

♦ஹி. 1382 - கி.பி. 1962 :
இந்தியாவின் மீது சீனா கடும் தாக்குதல் நடத்தி பல்லாயிரக் கணக்கான சதுர கிலோ மீட்டர்கள் கொண்ட நிலப்பரப்பளவை கையகப்படுத்திக் கொண்டது.

♦ஹி. 1385 - கி.பி. 1965 :
கஷ்மீருக்காக இந்தியா - பாகிஸ்தான் இடையே நடந்த இரண்டாம் போர்.

♦ஹி. 1391 - கி.பி. 1971 :
மேற்கு மற்றும் கிழக்குப் பாகிஸ்தானியப் போர். இதில் கிழக்குப் பாகிஸ்தான் பங்களாதேஷாக உருவெடுத்தது.

(கோல்டன் தாரீக் ஹிந்துஸ்தான் மற்றும் பல புத்தகங்கள்)

முக்கியமான வரலாற்றுச் சம்பவங்கள்

❁ஹி. 55 - கி.பி. 675 :
உக்பா பின் நா.ஃபிஉ (ரழி) அவர்கள் ஆப்பிரிக்காவை வெற்றி கொண்டு கைர்வான் நகரத்தையும் கைர்வான் பள்ளிவாசலையும் நிறுவினார்.

❁ஹி. 75 - கி.பி. 694 :
இஸ்லாமிய நாணயம் புழக்கத்தில் விடப்பட்டது. ஹி. 708 (கி.பி. 1308) ஆம் ஆண்டு ஹாஜா அஷ்ர.ஃப் ஜஹாங்கீர் அவர்கள் உர்து மொழியில் முதல் உரைநடை நூலை எழுதினார்.

❁ஹி. 92 - கி.பி. 711 :
தாரிக் பின் ஸியாத் 12 ஆயிரம் நபர்கள் கொண்ட படையுடன் ஒரு இலட்சம் பேர்கள் கொண்ட கிறிஸ்துவப் படையை தோல்வியுறச் செய்து ஸ்பெயினை வெற்றி கொண்டார்.

❁ஹி. 897 - கி.பி. 1491 :
கிறிஸ்துவர்கள் ஸ்பெயினைக் கைப்பற்றி முஸ்லிம்களைக் கொன்று, (மிகப்பெரும்) இஸ்லாமிய நூல் நிலையத்தையும் தீயிட்டுக் கொளுத்தினர்.

❁ஹிஜ்ரி இரண்டாம் நூற்றாண்டில் ஸமர்கந்தில் காகித உற்பத்திக்கு அடித்தளமிடப்பட்டது.

❁ஹி. 852 - கி.பி. 1448 :
ஜோன்பூரில் ஜாமிஆ மஸ்ஜிதின் கட்டுமானம். கட்டியவர் : ஸுல்தான் இப்ராஹீம் ஷர்கீ

❁ஹி. 897 - கி.பி. 1492 :
♦கொலம்பஸ் அமெரிக்காவை கண்டுபிடித்தார்.

❁ஹி. 1041 - கி.பி. 1631 :
ஆக்ராவில் தாஜ்மகாலின் கட்டுமானப் பணி துவக்கம். 22 வருடங்களில் 3 கோடி ரூபாய் செலவில் ஷாஜஹான் மன்னர் இதனைக் கட்டி முடித்தார்.

❁ஹி. 1154 - கி.பி. 1770 :
வங்காளம் மற்றும் பீகாரில் பஞ்சம் தாண்டவமாடியது. பசி பட்டினியால் அங்கு இருந்த மூன்றில் ஒரு பகுதி மக்கள் செத்து மடிந்தனர்.

❁ஹி. 1193 - கி.பி. 1779 :
கல்கத்தாவிற்கு அருகிலிருக்கும் ஸைராம்பூரில் ஆங்கிலேயர்கள் முதல் அச்சகத்தை நிறுவினர்.

❁ஹி. 1205 - கி.பி. 1791 :
லக்னோவில் இமாம் பாடா ஆஸி.ஃபுத்தவுலாவின் கட்டுமானம். இவ்வருடம் பஞ்சம் நிலவியது.

❁ஹி. 1216 - கி.பி. 1801 :
கல்கத்தாவிற்கு அருகிலிருக்கும் ஸைராம்பூரில் மவ்லவீ அக்ரம் அலீ அவர்கள் முதல் உர்து மொழி அச்சகத்தை நிறுவினார்.

❁ஹி. 1222 - கி.பி. 1807 :
கிழக்கு இந்திய இரயில் சேவையின் தொடக்கம்.

❁ஹி. 1237 - கி.பி. 1822 :
முதலாம் இயந்திரப் படகு இந்தியாவிற்கு வருகை.

❁ஹி. 1237 - கி.பி. 1822 :
'ஜாமே ஜஹான் நுமா' எனும் உர்து மொழியின் முதல் தட்டச்சு செய்தித்தாள் கல்கத்தாவிலிருந்து வெளிவந்தது.

❁ஹி. 1252 - கி.பி. 1836 :
உர்து மொழியின் முதல் செய்தித்தாள் டெல்லியில் வெளியாகுதல்.

♦கொலம்பஸுக்கு அமெரிக்காவை கண்டுபிடிக்க உதவியது ஒரு முஸ்லிம் மாலுமி என்பது குறிப்பிடத் தக்கது. (மொ.ஆர்.)

❁ஹி. 1255 - கி.பி. 1840 :
தபால் தலை முதல் முறையாகப் பயன்படுத்தப்பட்டது.

❁ஹி. 1269 - கி.பி. 1853 :
ஜீ.ஐ.பீ. இரயில்வே பம்பாயில் புழக்கத்திற்கு வந்தது. (ஆசியக் கண்டத்தின் முதல் இரயில்)

❁ஹி. 1270 - கி.பி. 1854 :
கங்கை நதியில் பெரும் வெள்ளம்.

❁ஹி. 1274 - கி.பி. 1858 :
தண்ணீர் குழாய் பம்பாயில் புழக்கத்தில் விடப்பட்டது.

❁ஹி. 1278 - கி.பி. 1862 :
சென்னையில் உயர்நீதி மன்றம் நிறுவப்பட்டது.

❁ஹி. 1284 - கி.பி. 1867 :
முதலாளித்துவத்துக்கு எதிராக 'மூலதனம்' (DAS KAPITAL) எனும் நூலை காரல் மார்க்ஸ் வெளியிட்டார்.

❁ஹி. 1286 - கி.பி. 1869 :
சூயஸ் கால்வாய் அமைக்கப்பட்டது. இது மத்திய தரைக் கடல் மற்றும் செங்கடல். ஆகிய இரு கடல்களை இணைக்கின்றது. இதன் நீளம் : 168 கிலோ மீட்டர். அகலம்:90 மீட்டர், ஆழம்:11 மீட்டர். இந்தியாவிற்கு இங்கிலாந்திலிருந்து இவ்வழியாக வருவதில் 7200 கிலோ மீட்டர்கள் மீதமாகின்றது.

❁ஹி. 1287 - கி.பி. 1870 :
கல்கத்தா மற்றும் அதன் சுற்று வட்டாரத்தில் இரயில் விடப்பட்டது.

❁ஹி. 1294 - கி.பி. 1877 :
ரஷியா மற்றும் துருக்கியில் ஏற்பட்ட பயங்கரப் போரின் தொடக்கம்.

❁ஹி. 1296 - கி.பி. 1879 :
இரண்டு பைசா மதிப்புப் பெற்ற தபால் அட்டை புழக்கத்திற்கு வந்தது.

❁ஹி. 1297 - கி.பி. 1880 :
பம்பாயில் 'மதரஸா அன்ஜுமனே இஸ்லாம்' நிறுவப்பட்டது.

❁ஹி. 1298 - கி.பி. 1881 :
மைசூரில் இரயில் நிலையம் அமைக்கப்பட்டது.

❁ஹி. 1299 - கி.பி. 1882 :
கல்கத்தா, பம்பாய், சென்னை ஆகிய இடங்களில் தொலை பேசி அமைக்கப்பட்டது.

❁ஹி. 1323 - கி.பி. 1905 :
கொச்சியில் டிராம் வண்டி புழக்கத்தில் விடப்பட்டது. பம்பாயில் ஐந்தாம் ஜார்ஜ் இளவரசர் அருங்காட்சியகத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

❁ஹி. 1335 - கி.பி. 1917 :
ரஷியப் புரட்சி. இதில் நிகொலஸ் ஜார் ரஷிய சிம்மாசனத்திலிருந்து பதவி நீக்கம் செய்யப்படுதல். பின்பு கம்யூனிஸ ஆட்சி முறை அமைக்கப்பட்டது.

❁ஹி. 1340 - கி.பி. 1922 :
யூனானியர்களை துருக்கியர்கள் தோற்கடித்து ஆசியாவின் எல்லைப்புறத்திலிருந்து அவர்களை வெளியேற்றினர்.

❁ஹி. 1347 - கி.பி. 1928 :
லண்டனில் பல்கலைக் கழகம் நிறுவப்பட்டது.
புத்தர்களின் அட்டூழியத்தால் சீன முஸ்லிம்கள் கிளர்ச்சி செய்தனர்.

❁ஹி. 1348 - கி.பி. 1929 :
கணவன் இறந்ததும் மனைவி தீக்குளிக்கும் (உடன் கட்டை ஏறும்) முறை இந்தியாவில் ஒழிக்கப்பட்டது.

❁ஹி. 1356 - 57 - கி.பி. 1937 - 38 :
இந்தியாவில் ஏற்பட்ட கடுமையான பஞ்ச கால கட்டம். இதில் 8 இலட்சம் பேர் மாண்டனர்.

❁ஹி. 1358 - கி.பி. 1939 :
இந்திய சுதந்திரத்திற்காக அரும்பாடுபட்ட மவ்லானா உபைதுல்லாஹ் சிந்தி (ரஹ்) அவர்கள் இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின் இந்தியாவிற்கு திரும்புதல்.

❁ஹி. 1359 - கி.பி. 1940 :
லண்டன் மீது ஜெர்மனியர்களின் குண்டு வீச்சு.
ரோமாபுரிக்கு எதிராக ஜெர்மனி போர் பிரகடனம்.

❁ஹி. 1360 - கி.பி. 1941 :
ரஷியா - ஜெர்மனி இடையே நட்புறவு ஒப்பந்தம்.

❁ஹி. 1364 - கி.பி. 1945 ஆகஸ்ட் 5 :
ஜப்பானில் ஹிரோஷிமா மீது முதல் அணுகுண்டு வீசப்பட்டது. இதில் 2,40,000 மக்கள் உயிரிழந்தனர்.

❁அ.ஐ.ம்கட்டில் டேனிஸ் நதியில் ஏற்பட்ட பயங்கர வெள்ளப் பிரளயங்கள், ஆண்டு : கி.பி. 1931, 1938, 1955, 1971, 1973, 1976, 1980.

❁ஹி. 1376 - கி.பி. 1957 ஏப்ரல் 1 :
புது நாணயங்கள் இந்தியாவில் புழக்கத்தில் விடப்பட்டது.

❁ஹி. 1378 - கி.பி. 1958 அக்டோபர் 1 :
புதிய 'மெட்ரிக்' நிறுவை புழக்கத்திற்கு வந்தது.

பொது அறிவுச் செய்திகள்

◆ (முதல் மனிதர்) ஆதம் (அலை) அவர்கள் இறக்கும் போது மகன், பேரன், பேத்தி என்று 40,000 பேர்கள் அவர்களுக்கு இருந்தனர்.
(இப்னு கஸீர் - பக்கம் 96)

◆ மூன்று தட்டுகளைக் கொண்ட ஹள்ரத் நூஹ் (அலை) அவர்களின் (நோவா) கப்பலின் நீளம் 300 முழங்களும், அகலம் 50 முழங்களும், உயரம் 30 முழங்களையும் கொண்டதாக இருந்தது. (ஜமல்)

◆ இருபது முழ அகலமும், முப்பது முழ உயரமும் கொண்ட நெருப்புக் குண்டத்தில் நபி இப்ராஹீம் (அலை) அவர்களை நம்ரூத் வீசினான்.
(த.ப்ஸீர் ஜலாலைன் ஓரக்குறிப்பு - பக்கம் 377)

◆ எழுபது குரலில் நபி தாவூத் (அலை) அவர்கள் ஸபூர் வேதத்தை (தாவீதின் தோத்திரப்பாடல்கள்) ராகமிட்டு ஓதிக் கொண்டிருந்தார்கள்.
(அல்பிதாயா - பாகம் 2, பக்கம் 16)

◆ நபி யூஸுப் (அலை) அவர்களுக்கு ஸலீஹா மூலம் அப்ராஸீம் இன்னும் மன்ஷா எனும் இரு ஆண் குழந்தைகள் பிறந்தனர்.
(அல்பிதாயா வன்னிஹாயா, பாகம் 1, பக்கம் 210)

◆ காரூனின் கருவூலங்களின் சாவிகளை எழுபது கோவேறுக் கழுதைகளின் மீது கொண்டு வரப்பட்டது.
(அல்பிதாயா பாகம் 1, பக்கம் 309)

◆ நம்ரூத் நானூறு வருடங்கள் உலகில் ஆட்சி செய்தான்.
(அல்பிதாயா பாகம் 1, பக்கம் 148)

◆ நபி ஸுலைமான் (அலை), ஹள்ரத் துல்கருணைன் (அலை) புக்த நஸர், நம்ரூத் ஆகிய நால்வரும் முழு உலகை ஆட்சி புரிந்தனர்.
(த.ப்ஸீர் ஜலாலைன் ஓரக்குறிப்பு, பக்கம் 40)

◆ துல்கருணைன் (அலை) அவர்கள் துருக்கியில் நூறு மைல் நீளத்தில் ஐம்பது மைல் அகலத்தில் பெரும் சுவரை எழுப்பினார்.
(த.ப்ஸீர் ஜலாலைன் ஓரக்குறிப்பு, பக். 252, ஸாவி - பாகம் 3, பக். : 27)

◆ வஹ்தாத் மூன்று ஆண்டுகளில் சொர்க்கமாளிகை புணைந்தான். 900 ஆண்டு வாழ்ந்தான்.

◆ சீனப் பெரும் சுவரின் நீளம் 2,490 கிலோ மீட்டர், உயரம் 15 மீட்டர், அகலம் 9 மீட்டர். (அல் முன்ஜித் ப்பில் அதபி வல் உலூம் - பக்கம் : 150)

◆ நபிமார்களின் எண்ணிக்கை (சுமார்) 1,24,000. (புதிய வேதம் வழங்கப்பட்ட) ரஸுல்மார்களின் எண்ணிக்கை 313 பேர்கள். (மிஷ்காத் பாகம் 2, பக்கம் : 511)

◆ சுவனத்தில் 33 வயதுடையவர்களாக ஆண்களும், 17 வயதுடையவர்களாக பெண்களும் என்றென்றுமே இருப்பர். (த.ப்ஸீர் அஜீஸீ - பாகம் 30)

◆ வயதுக்கு வராத இணைவைப்பாளர்களின் குழந்தைகள் சொர்க்கவாசிகளுக்கு பணியாட்களாக இருப்பர். (த.ப்ஸீர் மழ்ஹரீ - பாகம் 12, பக்கம் 262)

கண்டங்கள்

பரப்பளவு, மக்கள் தொகை கி.பி. 1991 ஆம் ஆண்டு கணக்கின்படி

கண்டத்தின் பெயர்	பரப்பளவு (சதுர கிலோ மீட்டரில்)	மக்கள் தொகை
ஆசியா	43999000	3162710000
ஐரோப்பா	10498000	588600000
ஆப்பிரிக்கா	30355000	642100000
ஆஸ்திரேலியா	7687000	16900000
வட அமெரிக்கா	25349000	427300000
தென் அமெரிக்கா	17611000	296700000
அண்டார்டிக்கா	5500000	மக்கள் வசிப்பதில்லை

சூரிய மண்டலம்

சூரிய மண்டலம் (Solor System) சூரியனை மையமாகக் கொண்டது. புதன், வெள்ளி, புவி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன், புளூட்டோ ஆகிய ஒன்பது கோள்களையும் அவற்றுக்குரிய இயற்கைத் துணைக்கோள்களான சந்திரன்களையும், குறைந்தபட்சம் 72 நூற்றுக்கணக்கான குறுங்கோள்களையும் (Asteroids) ஆயிரக்கணக்கான வால்விண்மீன்களும் கொண்ட பெருங் குடும்பத்திற்குத் தலைமை தாங்குகிறது சூரியன். நமது உருமண்டல மையத்திலிருந்து சுமார் முப்பது முதல் முப்பத்து மூவாயிரம் ஒளி ஆண்டுகளுக்கு இடைப்பட்ட தொலைவில் இயங்குகிறது சூரிய மண்டலம்.

முதன்முதலாக கண்டறியப்பட்ட கோள்கள் மெர்க்குரி, வீனஸ், மார்ஸ், ஜுபிடர், சாட்டர்ன் என்று ரோமானியக் கடவுள்களின் பெயர்களையே பெற்றன. பின்னர் கண்டுபிடிக்கப்பட்ட யுரேனஸ், நெப்டியூன் மற்றும் புளூட்டோ போன்றவற்றிற்கும் இந்தப் பெயரீட்டு முறையே பின்பற்றப்பட்டது.

சூரியன்

ஆகாயகங்கையில் இது ஒரு விண்மீன். நவீனக் கணிப்புகளின்படி உடுமண்டல மையத்திலிருந்து சுமார் 32,000 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ள சூரியன் தன்னோடு ஒத்துழைத்த விண்மீன்களுடன் நொடிக்கு 250 கி. மீ. வேகத்தில் உடுமண்டல மையத்தைச் சுற்றிப் பயணம் செய்கின்றது. இந்தக் கணக்கில் ஒரு முறை உடுமண்டலத்தைச் சுற்றிவர 25 கோடி ஆண்டுகள் ஆகும். இதுவே ஒரு பிரபஞ்ச வருடம். (Cosmic Year).

சூரியன் பற்றி சில தகவல்கள்

விட்டம் 14,00,000 கி. மீ. பூமியின் விட்டத்தைப் போல் 109 மடங்கு.

வயது 4.5 கோடி ஆண்டுகள். மொத்த ஆயுட்காலம் 1000 கோடி ஆண்டுகள்.

கதிரவனிலிருந்து பூமியின் தூரம் 14,96,00,000 கி.மீ.

சந்திரன்

பூமியின் ஒரே ஒரு துணைக்கோளான சந்திரன் சூரியக்குடும்பத்தின் ஏனையத் துணைக்கோள்களைவிடவும் தனிச்சிறப்பு மிக்கது. பிற துணைக்கோள்கள் தமது தாய்க் கோள்களின் பருமனில் எட்டில் ஒரு பங்கே அளவுடையன. ஆனால் சந்திரனோ பூமியின் பருமனில் நாலில் ஒரு பங்கே கொண்டது.

சந்திரனின் விட்டம் 3475 கி. மீட்டர். பூமியின் விட்டமோ 12,700 கி.மீட்டர். சந்திரனின் புறப் பரப்பளவு அட்லாண்டிக் கடலில் பாதிவரும். நிறை ஈர்ப்பு விசையும் புவி விசையின் ஆறிலொரு பாகமே. நீள்வட்டத்தில் பூமி அருகுப் புள்ளியாக (Perigee) 3,64,000 கி. மீட்டர்கள் தொலைவிலும் சுற்றிவரும் சந்திரன் தன்னச்சில் ஒரு முறை புவி அப்பால் புள்ளியாக (A Pogee)4,06,000 கி.மீட்டர்கள் தொலைவிலும் சுழன்று கொள்ள 27 1/2 நாட்கள் ஆகிறது.

வெறுங்கண்ணுக்குத் தெரியும் சந்திரனின் பிரகாசமான இருண்ட மருக்கள் உண்மையில் சூரிய ஒளிப்பட்டுத் துலங்கும் மலைகளும், பள்ளங்களுமே ஆகும்.

குழிவாகத் தொன்றும் இருண்ட பகுதிகள் ஒரு காலத்தில் கடல்களாக (Marias) இருந்திருக்கலாம். சந்திரனில் தண்ணீர் ஒரு சொட்டு கூடக் கிடையாது. ஆனால் அதிலுள்ள குழிவுகள் (Craters) விண்கற்கள் (Meteros) வந்து மோதியதால் விழுந்த பள்ளங்களாக இருக்கலாம். பூமியில் உள்ளது போலக் கடல்கள் அங்கு இல்லை என்றாலும் சந்திரனில் மலைகளுக்குக் குறைவில்லை. எல்லாமே சுமார் 6000 மீட்டர்கள் உயரச் சிகரங்கள். சந்திரனின் தென்துருவத்திற்கு அருகிலுள்ள 'லிப்னிட்ஸ் மலைகள்) (Liebnity Mountains) எவரெஸ்ட் சிகரத்தைவிடவும் உயரமானது. (10660 மீட்டர்கள்)

சந்திர ஒளி புவி வந்தடைய 1.3 நொடிகளே ஆகின்றது. சூரிய ஒளி வந்து சேரவோ 8 நிமிடம் 16.6 நொடிகள் ஆகின்றது.

அப்போலோ-11 (APOLLO - 11) விண்கலம் ஜூலை 1969 இல் முதன் முறையாகச் சந்திரனில் மனிதர் இருவரை இறக்கியது. விண்வெளி வரலாற்றில் இது ஒரு சகாப்தம்.

புவித்தகவல்கள்

புறப்பரப்பளவு	51,01,00,500 ச.கி.மீ.
நிலப்பரப்பளவு	14,89,50,800 ச.கி.மீ.
நீர்ப்பரப்பளவு	36,11,49,700 ச.கி.மீ.
நிலநடுக்கோட்டின் சுற்றளவு	40,067 கி.மீ.
துருவங்கள் வழிச்சுற்றளவு	40,000 கி.மீ.
நிலநடுக்கோட்டின் விட்டம்	12,754 கி.மீ.
நிலநடுக்கோட்டின் ஆரம்	6,377 கி.மீ.
எடை	5.98 5 10 ^{24} கி.கி.
சூரியனிலிருந்து உள்ள தூரம்	14,94,07,000 கி.மீ. (இதுவே இன்று ஒரு வானவியல் அலகு எனப்படுவது.)
தன்னச்சில் ஒரு முறை சுழல்வதற்கு ஆகும் காலம்	23 மணி 56 நிமிடம் 4.09 நொடிகள்.
சூரியனை ஒரு முறை சுற்றிவர ஆகும் காலம்	365 நாட்கள் 5 மணி 48 நிமிடம் 45.51 நொடிகள்.
சூரியக்கதிர் வீதித்தளத்திலிருந்து (ECLIPTIC) சாய்வுமானம்	23 பாகை 27 நிமிடம் (23 X 27)
ஏவூர்திகளின் (Rockets) வேகம் (புவி ஈர்ப்பு விசையை எதிர்த்து வளி மண்டலத்தினுள் புகுவதற்குத் தேவையான விரைவு),	குறைந்த பட்சம் நொடிக்கு 8 கிலோ மீட்டர்கள்.

முக்கியச் சிகரங்கள்

பெயர்	நாடு	உயரம் (மீ)
எவரெஸ்ட்	நேபாளம் - திபெத்	8,848
காட்வின்	பாகிஸ்தான்	8,611
கஞ்சன்ஜங்கா	நேபாளம் - சிக்கிம்	8,600
லகோட்சி	நேபாளம் - திபெத்	8,501
மகாலு	நேபாளம் - திபெத்	8,475
தௌலாகிரி	நேபாளம்	8,172
மான்சாலு	நேபாளம்	8,156
சோஒள	நேபாளம் - திபெத்	8,153
நங்கபர்வதம்	பாகிஸ்தான்	8,126
அன்னபூர்ணா	நேபாளம்	8,078
காஷர்பிரம்	பாகிஸ்தான்	8,068
பிராட் காஷ்மீர்	-	8,047
கோஸயன்தான்	திபெத்	8,013
நந்தாதேவி	இந்தியா	7,817
ரகாபோஷி	பாகிஸ்தான்	7,787
கமத்	இந்தியா - திபெத்	7,756
நம்சாபார்வா	திபெத்	7,756
குர்லாமண்டதா	திபெத்	7,728
முஸ்தாக்	திபெத்	7,723
கோன்கூர்ஷான்	சீனா	7,719
திரிச்மீர்	பாகிஸ்தான்	7,690
மின்யாகொன்கா	சீனா	7,556
முஸ்தாக் ஆதா	சீனா	7,546
ஸ்கையாங்காங்கிரி	பாகிஸ்தான்	7,690
கம்யூனிச மலை	யு.எஸ்.எஸ்.ஆர்	7,495
ஜோங்சாங் சிகரம்	நேபாளம்	7,459
போபேதி	யு.எஸ்.எஸ்.ஆர் - சீனா	7,439
சோமாலஹரி	பூடான் - திபெத்	7,313

மிக நீளமான ஆறுகள்

பெயர்	நாடு	நீளம் (கி.மீ.)
நைல்	எகிப்து	6,695
அமேசான்	தென் அமெரிக்கா	6,437
சாங் ஜிங்	சீனா	6,379
மிசிசிபி-மிசௌரி	அமெரிக்கா	6,019
ஓப்-இர்திஷ்	ருஷ்யா	5,410
ஹவாங் (மஞ்சள்)	சீனா	4,672
சாயிர் (காங்கோ)	ஆப்பிரிக்கா	4,667

அமூர்	ஆசியா	4,416
லேனா	ருஷ்யா	4,400
மக்கென்சி	கனடா	4,420
மெக்காங்	ஆசியா	4,184
நைஜர்	ஆப்பிரிக்கா	4,168
யெனிச்	ருஷ்யா	4,092
பரானா	தென் அமெரிக்கா	3,999
முர்ரெடார்லிங்	ஆஸ்திரேலியா	3,717
வோல்கா	ருஷ்யா	3,531
புருஸ்	தென் அமெரிக்கா	3,379
மடெ ரியா	தென் அமெரிக்கா	3,239
சாவோ பிரான்சிஸ்கோ	தென் அமெரிக்கா	3,199
யுகோன்	அமெரிக்கா - மெக்சிக்கோ	3,033
பிரம்மபுத்திரா	ஆசியா	2,897
இந்தூஸ்	ஆசியா	2,897
தான்றுப்	ஐரோப்பா	2,858
ஓரினோகோ	தென் அமெரிக்கா	2,575
சால்வீன்	பர்மா - சீனா	2,414
சென்ட் லாரன்ஸ்	கனடா - அமெரிக்கா	1,287

முக்கிய கடல்கள்

கடல்	பரப்பு ச.கி.மீ.	சராசரி ஆழம் மீட்டரில்
பசிபிக்	16,62,41,000	10,915
அட்லாண்டிக்	8,65,58,000	8,605
இந்தியன்	7,34,27,000	7,125
ஆர்டிக்	1,32,21,950	5,450
தெற்கு சீனக்கடல்	29,74,615	5,514
கரீபியன் கடல்	25,15,926	7,680
மெடிட்டரேனியன் கடல்	25,09,970	5,150
பெர்ரிங்கடல்	22,61,070	5,121
மெக்சிக்கோ வளைகுடா	15,07,640	4,377
ஒக்கோத்ஸ்க் கடல்	13,92,125	3,475
ஜப்பான் கடல்	10,12,690	4,000
ஹட்சன் விரிகுடா	7,30,120	259
கிழக்கு சீனக் கடல்	6,64,590	3,000
அந்தமான் கடல்	5,64,880	4,450
கருப்புக் கடல்	5,07,900	2,243
சிவப்புக் கடல்	4,52,990	2,246
வடக்குக் கடல்	4,27,090	661
பால்டிக் கடல்	4,14,400	439

பெரும்பாலை நிலங்கள்

பெயர்	நாடு	பரப்பளவு (ச.கி.மீ.)
சஹாரா	வடஆப்பிரிக்கா	84,17,500
கிரேட் ஆஸ்திரேலியன்	ஆஸ்திரேலியா	25,90,000
கிரேட் அரேபியன்	அரேபியா	23,31,000
கோபி	மத்திய ஆசியா	12,95,000
தாக்ளா மக்கான்	சீனா	3,23,750
நமீப்	தெ. மே. ஆப்பிரிக்கா	3,10,800
சொனோரா	அமெரிக்கா, மெக்சிக்கோ	3,10,800
காராகும்	யு.எஸ்.எஸ்.ஆர்.	3,00,440
கிசில்கும்	யு.எஸ்.எஸ்.ஆர்.	2,97,850

உலகத் தீவுகள்

தீவு பெயர்	இருப்பிடம்	பரப்பு கி.மீ.
கிரீன்லாந்து	-	21,75,000
நியூகினியா	பசிபிக்கடல்	7,89,900
போர்னியோ	இந்தோனேஷியா	7,51,000
மடகாஸ்கர்	இந்தியன் கடல்	5,89,900
பேஃபின் தீவு	கனடா	4,76,068
சுமத்ரா	இந்தோனேஷியா	4,22,200
ஹோன்ஷு	ஜப்பான்	2,30,092
பிரிட்டன்	-	2,30,092
விக்டோரியா தீவு	கனடா	2,08,081
எலியஸ்மியர் தீவு	கனடா	2,00,445
சுலாவெஸி	இந்தோனேஷியா	1,78,700
தென் தீவு	நியூசிலாந்து	1,50,460
ஜாவா	இந்தோனேஷியா	1,26,501
நியூஃபௌலாந்து	கனடா	1,10,681
வட தீவு	நியூசிலாந்து	1,09,345
கியூபா	-	1,07,832
லூசான்	பிலிப்பைன்ஸ்	1,04,711

முக்கிய நீர்வீழ்ச்சிகள்

பெயர்	நாடு	உயரம் (மீ.)
ஏஞ்சல்	வெனிசுவேலா	979
யோசிமிட்	அமெரிக்கா	739
தென்மர்டால்சபோசன்	நார்வே	655

துகேலா	தென் ஆப்பிரிக்கா	614
குகேனன்	வெனிசுவேலா	610
சதர்லாந்து	நியூசிலாந்து	580
ரிப்பன்	அமெரிக்கா	491
கிரேட் சமரங்	கயானா	488
வ.மர்டால்சபோசன்	நார்வே	468
டெலா	கனடா	440
காவர்னீ	பிரான்சு	422
ஸ்கேகேகு ல்	நார்வே	420
கிளாஸ்	பிரேசில்	404

நமது அண்டவெளி

சூரியன் (Sun)

விட்டம் : 13,84,000 கி.மீ. வயது : 450 கோடி ஆண்டுகள். கோள்கள் : ஒன்பது. வெப்ப நிலை 270 இலட்சம் °C.

புதன் (Mercury)

விட்டம் : 4,849.6 கி.மீ. சந்திரன்கள் : இல்லை. சூரியனிலிருந்து சராசரி தூரம் : 5.76 மிலி.கி.மீ. ஒருமுறை சூரியனைச் சுற்ற 88 நாட்கள்.

வெள்ளி (Venus)

விட்டம் : 12,032 கி.மீ. சந்திரன்கள் இல்லை. சூரியனிலிருந்து சராசரி தூரம் : 107.52 மிலி.கி.மீ. ஒரு முறை சூரியனைச் சுற்ற 225 நாட்கள்.

புவி (Earth)

விட்டம் : 12,739.2 கி.மீ. சந்திரன்கள் : ஒன்று. சூரியனிலிருந்து சராசரி தூரம் : 148.8 மிலி.கி.மீ. ஒருமுறை சூரியனைச் சுற்ற 365 நாட்கள்.

செவ்வாய் (Mars)

விட்டம் : 6,755.2 கி.மீ சந்திரன்கள் : இரண்டு. சூரியனிலிருந்து சராசரி தூரம் : 225.6 மிலி.கி.மீ. ஒரு முறை சூரியனைச் சுற்ற 687 நாட்கள். செவ்வாய்த் தரை செம்மண்ணும் பாறைகளும் கொண்ட தரிசு நிலமாகும். முன்னொரு காலத்தில் இங்கு எரிமலைகளும், நீரோடைகளும் விளங்கியதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

வியாழன் (Jupiter)

விட்டம் : 1,41,968 கி.மீ. சந்திரன்கள் : 16. சூரியனிலிருந்து சராசரி தூரம் : 772.8 மிலி.கி.மீ. இது சூரிய மண்டலத்திலேயே மிகப் பெரியது.

சனி (Saturn)

விட்டம் : 1,19,296 கி.மீ. சந்திரன்கள் : 20க்கும் அதிகம். சூரியனிலிருந்து சராசரி தூரம் : 1,417.6 மிலி.கி.மீ. ஒரு முறை சூரியனைச் சுற்ற 29.5 ஆண்டுகள். இதன் 'டைட்டன்' எனும் சந்திரனில் உயிரினங்கள் உருவாக்கத்திற்குரிய நைட்ரஜன் மற்றும் ஹைடிரோகார்பன்கள் நிறைந்த வளி மண்டலம் சூழ்ந்திருந்தாலும், 'டைட்டன் வாசிகள்' யாரும் அங்கு இருப்பதாகத் தெரியவில்லை.

யூரேனஸ் (Uranus)

விட்டம் : 52,096 கி.மீ. சந்திரன்கள் : பதினைந்து. சூரியனிலிருந்து சராசரி தூரம் : 2,852.8 மிலி.கி.மீ. ஒரு முறை சூரியனைச் சுற்ற 84 ஆண்டுகள் சூரியனை நோக்கி அச்சு சரிந்து கிடையாகவே சுழலுகிறது.

நெப்டியூன் (Neptune)

நெப்டியூன் ஐந்து வளையங்களும் வெளி வளையம். பனிமயச் சந்திரத் துணுக்குகள் நெருங்கியது. ஒரு உள் வளையம் மெலிந்த திடப் பொருளாலானது. சந்திரன்கள் : எட்டு.

புளுட்டோ (Pluto)

விட்டம் : 3,040 கி.மீ. சந்திரன்கள் : ஒன்று (காரோன்) சூரியனிலிருந்து சராசரி தூரம் : 5,865.6 மிலி.கி.மீ. ஒரு முறை சூரியனைச் சுற்ற 248 ஆண்டுகள். புதிரான புளுட்டோ தண்ணீரும், மீத்தேன் வளிமமும் ஒன்று திரண்ட பனிப்பந்து போன்றது.

(ம.ம. இயர் புக் - 1998)

◆ 'ஹிரா' குகையின் நீளம் பன்னிரண்டு அடி, அகலம் ஆறடி (ஒரு கஜம் என்பது 36 இன்ச்) (தஹ்ரீயே மஅலூமாத், பக்கம் - 34)

◆ உலகத்தில் 3064 மொழிகள் பேசப்படுகின்றன. (தஹ்ரீயே மஅலூமாத், பாகம் 1, பக்கம் - 7)

◆ (இறையில்லம் கஅபாவை இடிக்க வந்த) ஆப்ரஹாவின் படையினரின் எண்ணிக்கை அறுபது ஆயிரமாகும். (ஸீரத் இப்னு ஹிஷாம் மொழியாக்கம், பக்கம் 87)

◆ லண்டன் மற்றும் ∴பாரிஸ் நகரங்களின் உயர் குலத்தை சேர்ந்த குடும்பப் பெண்கள் இந்தியாவில் நெய்யப்பட்ட உடல் தெரியும் படியான மெல்லிய ஆடைகளை அணியக் கூடியவர்களாக இருந்தனர்.

◆ அபூ முஸ்லிம் ஹவ்லானி (ரஹ்) அவர்கள் மகாபொய்யன் முஸைலிமாவை இறைத்தூதராக ஏற்கவில்லை. அதன் காரணமாக அவர்களை முஸைலிமா

நெருப்பில் எறிந்தான். அபூ முஸ்லிம் (ரஹ்) அவர்கள் நெருப்பிலிருந்து வெளிவந்து யமனிலிருந்து மதீனாவிற்குச் சென்றார்கள். அங்கு அவர்களை ஹள்ரத் உமர் (ரழி) அவர்கள் கட்டித் தழுவி ஆலிங்கனம் செய்தார்கள். பின்பு கூறினார்கள்: 'அல்லாஹ்வின் உற்ற நண்பரான ஹள்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு நிகழ்ந்ததுபோன்ற நிகழ்ச்சி நடந்த ஒரு மனிதரை நான் பார்த்தேன்.' (கஷ்குல் பாதின் - பக்கம் 102)

◆ ஹிஜ்ரத் நடந்து ஐந்து மாதங்களுக்குப் பின் நபித்தோழர் அனஸ் (ரழி) அவர்களின் வீட்டில் 45 முஹாஜிர்களுக்கும் 45 அன்ஸாரிகளுக்குமிடையில் சகோதரத்துவ உறவு உருவானது. (∴பத்ஹுல் பாரி - பாகம் 7, பக்கம் 21)

◆ பேரறிஞர் இஸ்மஈ (ரஹ்) அவர்கள் (மரணம் : ஹிஜ்ரி 213) மூன்று தினங்களில் திருக்குர்ஆன் முழுவதையும் மனனமிட்டார்கள். அவர்களுக்கு போர்க்களத்தில் பாடும் யாப்பு வகை கவிகள் மாத்திரம் 12,000 மனனமாக இருந்தது. (தாரீஹுல் ஹதீஸ்)

◆ ஹம்மாத் ராவியா அவர்கள் (மரணம் : ஹிஜ்ரி : 155) ஒரு சபையில் 2,900 அரபுப் பாடல் (கஸீதாக்)களை பாடினார்கள்.

◆ அபூ தமாம் (மரணம் : ஹிஜ்ரி : 231) மற்றும் முதனப்பீ (மரணம் : ஹிஜ்ரி : 354) ஆகியோருக்கு ஓர் இலட்சத்தை விட அதிகமான கவிதைகள் மனனமாக இருந்தது. (தாரீஹுல் ஹதீஸ்)

◆ நபி (ஸல்) அவர்களை சந்தித்தவர்களில், 13,000 பேர்களின் வாழ்க்கை வரலாறு பதியப்பட்டுள்ளது. (ஸீரத்துன் நபி)

◆ ஹதீஸ்களின் அறிவிப்பாளர்களின் விபரங்களடங்கிய (அஸ்மாவுர் ரிஜால்) கலையில் ஐந்து இலட்சம் நபர்களின் விபரங்கள் பதியப்பட்டுள்ளன. (தாரீகுல் ஹதீஸ்)

◆ மன்னர் மாமூன் ரஷீத் அவர்கள் (மரணம் : ஹிஜ்ரி 218) பக்தாதில் முதல் முதலாக 'பைத்துல் ஹிக்மத்' எனும் பெயரில் ஒரு நூல் நிலையமும் ஆராய்ச்சி நிலையமும் நிறுவினார். இதில் இருந்த புத்தகங்களின் எண்ணிக்கை பத்து இலட்சங்களாகும். இது தவிர பக்தாதில் 36 நூல் நிலையங்கள் இருந்தன. ஹிலாகூ (Hulagu) என்பவன் (இறப்பு : ஹிஜ்ரி 663) அங்கிருந்த நூல்களை தஜ்லா நதியில் இட்டதும் நதியில் பாலம் உருவாகி ஏழு தினங்கள் வரை நதி நீரின் நிறம் மாறிவிட்டிருந்தது.

◆ மன்னர் ஹாரூன் ரஷீதின் மனைவி ஜுபைதா அம்மையார் அவர்கள் ஒரு கோடியே ஏழு இலட்சம் மிஸ்கால் தங்கம் செலவிட்டு மலைகளைத் தகர்த்து 'நஹ்ரெ ஜுபைதா' (ஜுபைதா நதி) எனும் நதியை ஹுனைனிலிருந்து மக்கா வரை உருவாக்கினார்.

உலக நாடுகள் (பரப்பளவு, மக்கள் தொகை, மதம்)

நாடு	தலைநகரம்	பரப்பளவு சதுர கி.மீ.	மக்கள் தொகை	மொழி	மதம், மார்க்கம்
அப்கானிஸ்தான்	காபூல்	650090	15090000	புஷ்து, பார்சீ	இஸ்லாம்
பங்களாதேஷ்	டாக்கா	142776	109579000	வங்காளி	"
பாகிஸ்தான்	இஸ்லாமாபாத்	803943	114939000	உர்து	"
ஈரான்	டெஹ்ரான்	1684180	53126000	பார்சீ	"
இராக்	பக்தாது	445480	17656000	அரபீ	", கிறிஸ்துவம்
குவைத்	குவைத்	20150	1938000	அரபீ	இஸ்லாம்
ஸவூதி அரேபியா	ரியாத்	2261070	13070000	அரபீ	"
எகிப்து	கெய்ரோ	1001998	51453000	அரபீ	"
எத்தியோப்பியா	அடிஸ் அபாபா	1183998	44727000	அரபீ	", கிறிஸ்துவம்
பஹ்ரைன்	மனாமா	622	481000	அரபீ	இஸ்லாம்
துருக்கி	அங்காரா	780576	53536000	துருக்கி, பல்கேரியன்	"
துனீஷியா	துனிஸ்	164152	7809000	"	"
ஜோர்தான் (அர்தன்)	அம்மான்	96599	3943000	அரபீ	"
சிலீ (Chile)	சான்டியாகோ	741766	12748000	ஸ்பானிஷ்	".ரோமன்கததோலிக்
சூடான்	கார்டோம்	2505802	23797000	அரபீ	இஸ்லாம்
சிரியா	டமாஸ்கஸ்	185180	11638000	அரபீ	"
மலேஷியா	கோலாலம்பூர்	332370	16573000	மலாய்	", புத்தம்

மொராக்கோ	ரபாத்	445358	23910000	அரபீ, ஸ்பானிஷ்	இஸ்லாம்
நைஜீரியா	லாகோஸ் (அபுஜா)	923853	105471000		", கிறிஸ்துவம்
லெபனான்	பெய்ரூட்	10400	2827000	அரபீ,பிரான்ஸி	", கிறிஸ்துவம்
லிபியா	திரிபோலி	1759998	4232000	அரபீ	இஸ்லாம்
கானா	அக்ரா	238537	14130000	ஆங்கிலம்	", கிறிஸ்துவம்
இந்தோனேஷியா	ஜகர்த்தா	1904344	174951000	டச்சு	", புத்தம்
அல்ஜீரியா	அல்ஜீயர்ஸ்	2382673	23841000	ஆங்கிலம்	", கிறிஸ்துவம்
பல்கேரியா	ஸோ.பியா	110912	8995000	துருக்கி பல்கேரியன்	", ஆர்தோடக்ஸ்
பிலிப்பைன்ஸ்	மணிலா	299681	59456000	ஆங்கிலம் ஸ்பானிஷ்	", ரோமன்
சீனா	பெய்ஜிங்	9561000	1103983000	சீனம்	
செகோஸ்லோவெகியா	பிராக்	127877	15597000	ஜெர்மன் போலிஷ்	புத்தம்
ரஷ்யா	மாஸ்கோ	22402200	283682000	ருஷ்யன்	
கிரீஸ்	ஏதென்ஸ்	130917	10013000	கிரேக்கம், துருக்கி	ரோமன் கத்தோலிக்
சிங்கப்பூர்	சிங்கப்பூர்	616	2645000	சீனம், ஆங்கிலம்	புத்தம்
பிரிட்டன்	இலண்டன்	244108	56799000	ஆங்கிலம்	ரோ. கத்தோலிக்
நேபாளம்	காத்மண்டு	140797	18234000	நேபாளி	இந்து
நியூசிலாந்து	வெல்லிங்டன்	268676	3327000	ஆங்கிலம்	ரோ. கத்தோலிக்
நெதர்லாந்து	ஆம்ஸ்டர்டாம்	36175	14648000	டச்சு	"
பர்மா (மியான்மர்)	ரங்கூன் (யாங்கூன்)	678036	39966000	பர்மிஸ்	புத்தம்
பிரேசில்	பிரேசீலியா	8511957	144427000	போர்ச்சுக்கீஸ்	ரோ. கத்தோலிக்
பிரான்ஸ்	பாரிஸ்	551600	55789000	பிரெஞ்சு	
பனாமா	பனாமா நகரம்	75903	2322000	ஸ்பானிஷ்	ரோ. கத்தோலிக்
மெக்ஸிகோ	மெக்ஸிகோ நகர்	1972547	84884000	ஆங்கிலம், ஸ்பானிஷ்	

போர்ச்சுக்கல்	லிஸ்பன்	91551	10246000	போர்ச்சுக்கீஸ்	
அமெரிக்கா	வாஷிங்டன்	9363123	245414000	ஆங்கிலம்	கிறிஸ்துவம்
தென்னாப்பிரிக்கா	கேப்டவுன்	834135	33747000	ஆங்கிலம், ஆப்பிரிக்க மொழிகள்	டச், சர்ச்
இலங்கை	கொழும்பு	65610	16779000	சிங்களம்,தமிழ், ஆங்கிலம்	புத்தம், இஸ்லாம்
பூடான்	திம்பு	49421	1451000	பூடானி	புத்தம், இந்து

◆ அலப் அர்ஸலான் உடைய அமைச்சர் தூஸீ (மரணம் : ஹிஜ்ரி 485) என்பவர் பக்தாதிலுள்ள மதரஸா நிஜாமிய்யாவின் கட்டுமானப் பணிக்கு ஹிஜ்ரி 457 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். ஹிஜ்ரி 459 (கி.பி. 1067) துல்கஅதா மாதம் மதரஸா திறக்கப்பட்டது. அதன் வருடாந்திரச் செலவு ஆறு அல்லது ஏழு இலட்சம் தீனார்களாகும். அல்லாமா ஸஅதீ ஷீராஸீ (ரஹ்) இங்கு கல்வி பயின்றவர்களே!

◆ அரபிக் கல்லூரிகளின் நிஜாமிய்யா பாடத்திட்டத்தை முல்லா நிஜாமுத்தீன் பின் குத்புத்தீன் ஸஹாலவீ ஃபரங்கீ மஹல்லீ (ரஹ்) அவர்கள் (இறப்பு : ஹிஜ்ரி 1161 - கி.பி. 1748) அமைத்தார்கள்.

கி.பி. 1914 முதல் கி.பி 1918 வரை நடைபெற்ற உலக மகா யுத்தத்தில் கொல்லப்பட்டவர்கள்

- ரஷியா - 17 இலட்சம்
- ஃபிரான்ஸ் - 13 இலட்சம் 70 ஆயிரம்
- ஆஸ்திரியா - 8 இலட்சம்
- துருக்கி - 2 இலட்சம் 50 ஆயிரம்
- பல்கேரியா - 1 இலட்சம்
- ஸர்பியா, நைஜர், மால்டா - 1 இலட்சம்
- ஜெர்மனி - 16 இலட்சம்
- இத்தாலி - 4 இலட்சம் 60 ஆயிரம்
- பிரிட்டன் - 7 இலட்சம் 6 ஆயிரம்
- பெல்ஜியம் - 1 இலட்சம் 2 ஆயிரம்
- ரோமானியா - 1 இலட்சம்
- அமெரிக்கா - 50 ஆயிரம்

- உலக மகா யுத்தத்தில் இறந்தவர்கள் : 73 இலட்சத்து 38 ஆயிரம். காயமுற்றோர், கைதிகள் மற்றும் காணாமல் போனவர்களின் எண்ணிக்கை இவைகளை தவிர்த்ததாகும். (ரஹ்மதுன் லில் ஆலமீன், பாகம் 2, பக்கம் 228)
- மகாபாரதப் போரில் இறந்தவர்களின் எண்ணிக்கை பல கோடிகள்.
- ஹஜ்ரி 2 முதல் ஹிஜ்ரி 9 ஆம் ஆண்டு வரை நிகழ்ந்த அனைத்து இஸ்லாமிய யுத்தங்கள் மற்றும் 'சராயா' (படைப்பிரிவுகள்) எனப்படும் சிறு யுத்தங்களின் மூலம் இறந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 1018 பேர்கள். (ரஹ்மதுன் லில் ஆலமீன் - பாகம் 2, பக்கம் 228)

- ஒளியின் வேகம் ஒரு வினாடிக்கு மூன்று இலட்சம் கிலோ மீட்டர்கள்.
- சூரியனிலிருந்து உலகுக்கு: 15,42,14,000 கிலோ மீட்டர்கள்.
- மனித உடலில் 206 எலும்புகளும் 500 நரம்புகளும் இருக்கின்றது. (மக்ஸனுல் மஅலூமாத் - பக்கம் 322)

உலகின் தொடக்கம்

உலகம் உருவானதிலிருந்து இதுவரை 1955805103 சூரிய வருடங்கள் கழிந்துள்ளன. (கியாஸுல் ஹ.காத்)

உலகம்

- உலகின் பரப்பளவு : 32693870 சதுர கிலோ மீட்டர்கள்.
- உலகின் ஒரு பகுதி தண்ணீரைக் கொண்டு சூழ்ந்துள்ளது.
- உலகின் வட்டம் 48 ஆயிரம் மைல்கள் கொண்டது. கிழக்கிலிருந்து மேற்கு வரை 24 ஆயிரம் மைல்கள் மற்றும் அகலம் 12 ஆயிரம் மைல்களைக் கொண்டது.
- உலகின் மொத்த மக்கள் தொகை : 600 கோடியாகும் (1999 அக்டோபருக்கு)
- உலக நாடுகளின் எண்ணிக்கை : 181 (ஆஸான் அல்லஸ் - டெல்லி)
- உலகில் மக்களால் பேசப்படும் மொழிகளின் எண்ணிக்கை 3064 (தகீரயே மஅலூமாத் - பக்கம் 72)

இஸ்லாமிய உலகம்

உலகில் தற்போது 228 நாடுகள் இருக்கின்றன. அவற்றில் 171 நாடுகள் சுதந்திரமானவை. 59 நாடுகள் இஸ்லாமிய நாடுகள். இவற்றில் 43 நாடுகள் சுதந்திரமானவை. ஆப்பிரிக்க கண்டத்தில் இஸ்லாமிய நாடுகள் 35ம், ஆசியா கண்டத்தில் 21ம், ஆஸ்திரேலியாவில் இரு நாடுகளும், ஐரோப்பா கண்டத்தில் ஒரு நாடும் இருக்கின்றது.

உலகிலிருக்கும் அனைத்து நாடுகளின் பரப்பளவு பதினான்கு கோடி சதுர கிலோ மீட்டர்கள். இவற்றில் அடங்கும் அனைத்து இஸ்லாமிய நாடுகளின் மொத்த பரப்பளவு மூன்று கோடி கிலோ மீட்டர்களை விட கூடுதலாகும். கி.பி. 1991 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி உலகின் மொத்த மக்கள்தொகை ஐநூற்றி எட்டு கோடிகளாகும். அவற்றில் முஸ்லிம்களின் மக்கள்தொகை நூற்றிப் பதினேழு கோடிகளாகும்.

ஆசியா கண்டத்தில் 80 கோடியும், ஆப்பிரிக்கா கண்டத்தில் 30 கோடியும், ஆஸ்திரேலியா, அமெரிக்கா, ஐரோப்பாவில் 7 கோடியும் முஸ்லிம்கள் இருக்கின்றனர்.

பரப்பளவில் மிகப்பெரும் இஸ்லாமிய நாடு சூடானாகும். இந்நாட்டின் பரப்பளவு 25 இலட்சம் சதுர கிலோ மீட்டர்களைக் கொண்டதாகும்.

மக்கள்தொகைக் கொண்ட மிகப்பெரும் இஸ்லாமிய நாடு இந்தோனேஷியாவாகும். இங்கு 16 கோடி முஸ்லிம்கள் வாழ்கின்றனர்.

மக்கள்தொகை மிக்க மிகப் பெரும் இஸ்லாமிய நகரம் கராச்சியாகும். இங்கு 75 இலட்சம் முஸ்லிம்கள் குடியிருக்கின்றனர். பரப்பளவில் மிகப்பெரும் இஸ்லாமிய நகரம் கைரோவாகும்.

ஐரோப்பா கண்டத்தில் இருக்கும் ஒரே இஸ்லாமிய நாடான துருக்கியில் முஸ்லிம்களின் மக்கள்தொகை 75 சதவிகிதமாகும்.

ஐரோப்பா, ஆசியா ஆகிய இரு கண்டங்களையும் இணைக்கும் ஒரு நாடு துருக்கியாகும்.

உலகிலிருக்கும் மிகப்பெரும் பள்ளிவாசல் மஸ்ஜிதுல் ஹரமாகும். அது இரண்டு இலட்சம் சதுர கிலோ மீட்டர்களைக் கொண்டதாகும். நான்கு இலட்சம் நபர்கள் அதில் தொழ முடியும்.

நிவுகினி எனும் ஆஸ்திரேலிய இஸ்லாமிய நாட்டின் முஸ்லிம்களின் மக்கள்தொகை 95 சதவிகிதமாகும். ஆஸ்திரேலியாவின் மற்றொரு இஸ்லாமிய நாட்டான பாப்வாவில் முஸ்லிம்களின் மக்கள்தொகை 90 சதவிகிதமாகும்.

(மிப்தாஹீ ஜன்தரீ - கி.பி. 1996)

இந்தியா மற்றும் அதன் மாநிலங்கள்

மாநிலம்	தலைநகரம்	பரப்பளவு சதுர கி.மீ.	மக்கள்தொகை (கி.பி.1991)	மொழி
ஆந்திரப் பிரதேசம்	ஹைதராபாத்	275068	66354559	உர்து, தெலுங்கு
மத்தியப் பிரதேசம்	போபால்	443446	66135862	இந்தி, உர்து
உத்திரப் பிரதேசம்	லக்னோ	294411	139031130	இந்தி, உர்து
பீகார்	பாட்னா	173877	86338853	இந்தி, உர்து
ஜம்மு - கஷ்மீர்	ஸ்ரீநகர் - ஜம்மு	222236	7718700	உர்து, கஷ்மீரி, டோஹ்ரி மலைப் பாஷை
ஹிமாச்சலப் பிரதேசம்	சிம்லா	55673	5111079	இந்தி, மலைவாசி மொழி
பஞ்சாப்	சண்டிகர்	50362	20190795	பஞ்சாபி
ஹரியானா	சண்டிகர்	44212	16317715	"
டெல்லி	டெல்லி	1485	9370475	உர்து, இந்தி, பஞ்சாபி
ராஜஸ்தான்	ஜெய்ப்பூர்	342239	43880640	ராஜஸ்தானி, இந்தி
மேற்கு வங்காளம்	கல்கத்தா	88752	67982732	வங்காளி
அசாம்	திஸ்பூர்	78438	22294563	அசாமி, வங்காளி
ஒரிசா	புவனேஷ்வர்	155782	31512070	ஒடியா
குஜராத்	அகமதாபாத், காந்திநகர்	196024	41174343	குஜராத்தி
மகாராஷ்டிரம்	மும்பை	307690	78448215	மராத்தி
கர்நாடகம்	பெங்களூர்	191791	44806468	கன்னடம்
தமிழ்நாடு	சென்னை	130058	55638318	தமிழ்
கேரளா	திருவனந்தபுரம்	38863	29032828	மலையாளம்
அருணாச்சலப் பிரதேசம்	இடாநகர்	83743	858392	அடி, வாஞ்சோ, நிஷி, நோக்டே

நாகலாந்து	கோஹிமா	16[illegible]9	215573	ஆவு, கொன்யாக், ஆங்கிலம், ஸ்மா
மணிப்பூர்	இம்பால்	2[illegible]7	1826714	மணிப்பூரி, ஆங்கிலம்
திரிபுரா	அகர்த்தலா	10486	2744827	வங்காளி, திருப்பூரி
மேகாலயா	ஷில்லாங்	22429	1760626	காஸி, காரோ
மிசோரம்	அய்ஸ்வால்	21027	686217	மிசோ
சிக்கிம்	காங்டாக்	7299	405505	நேபாளி
தாதாரா நகர் ஹவேலி	சில்வஸா	491	123677	மராத்தி
டாமன் டையூ	டாமன்	112	101461	மராத்தி, குஜராத்தி
பாண்டிச்சேரி	புதுச்சேரி	492	807045	தமிழ், பிரெஞ்ச்
கோவா	பனாஜீ	3702	1168622	கொகனி, மராத்தீ
அந்தமான் நிக்கோபார் தீவுகள்	போர்ட் பிளேயர்	8249	279111	நிக்கோபாரிஸ், தமிழ், மலையாளம், வங்காளி
இலட்சத் தீவுகள்	கவரத்தீ	32	51681	மலையாளம்

மக்காவில் இரவு 9.00 மணிக்கு ஏனைய இடங்களின் நேரம்

இடத்தின் பெயர்	நேரம்	மணி	இடத்தின் பெயர்	நேரம்	மணி
●இந்தியா	இரவு	12.50	●மொரீஷியஸ்	இரவு	11.20
●மத்திய பிரேசில், சிலீ	பகல்	02.20	●ஐஸ்லாந்து, மடீரியா	மாலை	05.20
●கொலம்பியா, பிரிட்டன்	காலை	10.20	●வடலாந்து, மடகாஸ்கர்	இரவு	10.30
●ருமேனியா, பல்கேரியா, துருக்கி, கிரீஸ், ஜெர்மனி, சுவீடன், லக்ஸம்பர்க், டென்மார்க்	காலை	08.20	●அல்ஜஸாயிர், ஸன்டோர்க்	மாலை	07.50
			●கிழக்கத்திய பிரேசில், மலாய், (இன்னும் அதன் மாநிலங்கள்)	இரவு	02.30
●இங்கிலாந்து, அயர்லாந்து, ஃபிரான்ஸ், பெல்ஜியம், ஸ்பெயின், புருதுகால், ஜபலே தாரிக், (Strait of Gibraltor) அல்ஜீரியா	மாலை	06.00	●பர்மா	இரவு	01.50
			●கோலோன்	காலை	09.24
			●நியூசிலாந்து	மாலை	06.50
			●தெற்கு ஆஸ்திரேலியா	காலை	04.50
			●ஜப்பான், கொரியா	மாலை	04.20
●தஸ்மானியா, விக்டோரியா, நிவு ஸாவுத்	காலை	05.22	மேற்கு ஆஸ்திரேலியா, வடக்கு போர்னியோ, ●பிலிப்பைன்ஸ், ஹாங்காங்	மாலை	03.20
●பாமன், அமெரிக்கா, ஜமைக்கா	நள்ளிரவு	1.20			

டெல்லியில் மதியம் 12.00 மணிக்கு ஏனைய இடங்களின் நேரம்

●கெனடா, அட்லாண்டிக்	காலை	03.00	●பிரிட்டன்	காலை	04.30
●கிழக்கு பிரேசில், அர்ஜென்டினா	காலை	03.30	●தாய்லாந்து	மதியம்	11.30
●அயர்லாந்து, புருதுகால், நியுசீலாந்து, ஸ்பெயின், ஜபலே தாரிக்	காலை	06.30	●ஜப்பான், டோக்கியோ	மதியம்	03.30
			●பங்களாதேஷ், கஷ்மீர், பாகிஸ்தான்	மதியம்	12.30
●இந்தோனேஷியா, ஸுமாத்ரா, பர்மா	மதியம்	01.00	●ஜாவா, போர்னியோ மலேஷியா	மதியம்	02.00

●இத்தாலி, ஆஸ்திரேலியா, அல்ஜீயர்ஸ் (அல்ஜஸாயிர்), பெல்ஜியம், போலாந்து, துனீஷியா, செக்கோஸ்லோவியா, ஜெர்மனி, டென்மார்க், சுவிட்சர்லாந்து, சுவீடன், ஃபிரான்ஸ், மால்டா, லக்ஸம்பர்க்	காலை	07.30
●ஜோர்தான், தென்னாப்பிரிக்கா, குடான், துருக்கி, பின்லாந்து, லெபனான், எகிப்து, கிப்ரிஸ், கிரீஸ், குஸ்துன்தீனியா	காலை	08.30
●கிழக்கு அமெரிக்கா, கனடா (கிழக்கு)	இரவு	01.30
●அப்கானிஸ்தான், பஹ்ரைன், கியூபா, கனடாவின் ஓரப்பகுதி	காலை	10.30
●பிலிப்பைன்ஸ், ஹாங்காங், ஆஸ்திரேலியா (மேற்கு)	மதியம்	02.30
●தென் இன்னும் வட ஆஸ்திரேலியா	மாலை	04.30
●இலங்கை	மதியம்	12.00
●லிபியா, மொராக்கோ, நார்வே, நைஜீரியா, ஹங்கேரி, நெதர்லாந்து, வாடிகன் நகரம், யூகோஸ்லாவியா, ரோம்	காலை	07.30
●மாஸ்கோ, ஜன்ஜிபார், சவுதி அரேபியா, அத்ன், ஈரர்க்	காலை	09.30
●அமெரிக்காவின் மத்தியஸ்தலம் மெக்ஸிகோ, சிக்காகோ	இரவு	12.30
●வெனுசுவேலா	இரவு	02.00
●ஈரான்	காலை	10.00
●சீனாவின் மத்தியஸ்தலம்	இரவு	02.30
●மேற்கு கிரீன்லாந்து	இரவு	03.30

24184

கொழும்பு தமிழ்ச் சங்கம்

காலண்டர்கள்

மதம் மற்றும் வாழ்க்கைத் தேவைகளை முன்வைத்து நாட்கள், கிழமைகள், மாதங்கள், வருடங்கள் ஆகியவற்றை ஒன்று சேர்க்கப்படும் முறைகளுக்கு காலண்டர் என்று சொல்லப்படும். சூரிய உச்சம் முதல் மறு உச்சம் வரை நட்சத்திரங்களைக் கொண்டு கணக்கு பார்ப்பவர்களும், சூரிய அஸ்தமம் முதல் மறு அஸ்தமம் வரை முஸ்லிம்களும், சூரிய உதயம் முதல் மறு உதயம் வரை இந்துக்களும் அதற்கு இடைப்பட்ட நேரத்தை ஒரு நாள் என கணித்துக் கொள்கின்றனர். மற்றும் தமது நகர்ப்புற வேலைகளுக்கு நடு இரவிலிருந்து மறுநாளின் நடு இரவுவரை இருக்கும் அதற்கு இடைப்பட்ட கால நேரத்தை ஒரு நாள் என ஏற்கின்றனர். சூரிய சந்திர ஒளிமிக்க காலத்தை சூரிய நாள் மற்றும் சந்திர மாதம் என பெயரிடப்பட்டுள்ளது. காலண்டரை விளங்குவதில் சிரமம் ஏற்படுவதற்குண்டான காரணம் பருவ நிலைமைகள் மாறுபடுவதாகும்.

எகிப்துக் காலண்டர்

பழைமையான காலத்திலிருந்து எகிப்தியரின் வருடம் 12 மாதங்களைக் கொண்டதாகவே இருந்தது. ஒவ்வொரு மாதமும் முப்பது நாட்களைக் கொண்டதாக இருந்தது. ஒவ்வொரு வருட இறுதியிலும் ஐந்து நாட்களை அதிகப்படியாகச் சேர்த்து ஆண்டின் மொத்த நாட்கள் 365 என அமைத்துக் கொள்வர். மாதத்திற்கு முப்பது நாட்கள் என நிர்ணயித்துக் கொள்வதின் பயன் யாதெனில், சிற்சில சமயத்தில் சந்திர மாதங்களுடன் சூரிய மாதங்கள் ஒப்பாகின்றது. 365 நாட்களை கொண்டதாக வருடத்தை நிர்ணயிப்பதில் சூரிய ஆண்டுடன் ஒரு தொடர்பும் உண்டாகி விடுகின்றது.

எனவே இதில் சூரிய சந்திரனின் ஒழுங்கை கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன. எகிப்தின் ஒவ்வொரு மாதமும் ஏதேனும் ஒரு திருவிழாவின் பெயரைக் கொண்டு அமைக்கப்பட்டிருந்தது. இந்த காலண்டரில் ஏதேனும் நிரந்தரமான ஒரு ஆண்டின் வழமை இருக்க வில்லை. இக்குறைவு பெத்லமோஸின் கால கட்டத்தில் நீக்கப்பட்டது. ஜூலியஸ் சீசர் ரோமானியக் காலண்டரில் மாற்றங்கள் ஏதும் செய்யாமலிருந்த காலம் வரை அதாவது கி.மு. 46 ஆம் ஆண்டு வரை எகிப்திய காலண்டர் அதிகாரப்பூர்வமாக புழக்கத்தில் இருந்தது.

பாபல் காலண்டர்

கிறிஸ்துவுக்கு மூவாயிரம் வருடங்களுக்கு முன்பே பாபல் காலண்டரின் அடிப்படைகள் கோர்வை செய்யப்பட்டுவிட்டன. பன்னிரண்டு மாதங்கள் கொண்டதாக ஒரு வருடமும் ஒவ்வொரு மாதமும் பிறை தென்படுவதை

முன்னிட்டே தொடக்கப்பெறும், 'நைஸானோ' என்று முதல் மாதமும், 'அதாரோ' என்று கடைசி மாதமும் பெயர் பெற்றிருந்தது. ஒவ்வொரு மாதமும் அதற்குரிய காலகட்டத்தில் நிகழ வேண்டும் என்பதற்காக ஏனைய சந்திரக் காலண்டர்களைப் போன்று இதிலும் கடைசி மாதத்தை பொதுவாக இரு முறைகள் வருமாறு ஆக்கப்பட்டது.

கி.மு. 747 இல் இருந்த முதலாம் புக்த நஸரின் ஆட்சியின் காலகட்டத்திலிருந்து ஒவ்வொரு மாதத்தையும் பார்ப்பது இன்னும் மாதங்களின் கூடுதலான நாட்களையும் கணக்கெடுக்கப்பட்டது.

கிரேக்கத்திய காலண்டர்

ரோமப் பேரரசுக்கு முன்பு அனைத்து கிரேக்கத்திய காலண்டர்களும் சந்திர காலண்டர்களாகவே இருந்தன. ஒவ்வொரு சமூகத்தாரிடமும் அவரவருக்கென தனித்தனி காலண்டர்கள் புழக்கத்தில் இருந்தன. இதன் காரணமாக பாஸக்வம் என்பவர் நூறு கிரேக்கத்திய காலண்டர்களின் ஒரு பட்டியலை முன்வைத்து ஆய்வு செய்தார்.

காலண்டர்களின் வேற்றுமையின் போது தேவைக்கேற்ப பதிமூன்றாம் ஒரு மாதத்தையும் அதிகப்படுத்தி காலத்திற்கு தோதுவாக அமைத்துக் கொள்ளக் கூடியவர்களாக இருந்தார்கள். மாதத்தின் நீளத்தை நிர்ணயிப்பது, அதனை ரத்துச் செய்வது, அல்லது மாற்றுவது ஆட்சி செலுத்தும் ஆளுநர்களின் கையில் இருந்தது. பேரரசர் அலெக்ஸாண்டரின் வெற்றிகளை முன்னிட்டு கிரேக்கத்திய காலண்டரின் புழக்கம் மேற்கத்திய ஆசியா மற்றும் எகிப்து வரையிலும் பரவியது என்றாலும் ஆசியாவின் கிரேக்கத்திய காலண்டர்கள் வெறுமனே சூரிய கணக்கின் பிரகாரம் மட்டும் அமைந்ததாகவே இருந்தது.

ரோமானியக் காலண்டர்

இன்று உலகில் ரோமானியக் காலண்டரே புழக்கத்தில் இருக்கின்றது. இந்த காலண்டரின் அடிப்படை ரோம் நகரத்தின் தேதியையொட்டி அமைந்ததாகும். தொடக்கத்தில் மாதங்கள் பத்தென்றும், வருடத்தின் நாட்கள் 304 என்றும் இருந்தது. வருடத்தின் துவக்கமோ மார்ச் மாதத்தை கொண்டதாக இருந்தது. 'நவ்மா' என்பவர் ஜனவரி, பிப்ரவரி ஆகிய இரு மாதங்களை கூடுதலாக இதில் சேர்த்தார். முதலில் ரோம் மாதங்கள் சந்திர கணக்கின் பிரகாரம் இருந்தது. கூட்டாட்சியின் காலத்தில் நடுத்தர வருடத்தின் சராசரி அளவு 355 நாட்களாக இருந்தது.

மே, ஜூலை, அக்டோபர் ஆகிய மாதங்கள் முப்பத்தொரு நாட்களைக் கொண்டதாக இருந்தன. ஏப்ரல், ஜூன், ஆகஸ்ட், செப்டம்பர், நவம்பர், டிசம்பர், ஜனவரி ஆகிய மாதங்கள் 29 நாட்களைக் கொண்டதாக இருந்தன என்றாலும் ரோமானியக் காலண்டர் சந்திரக் கணக்குடன் பூரணமான பொருத்தம் ஏற்படாததால் அக்காலண்டரில் சந்திரக் கணக்கினை மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது. இம்மாற்றம் கிறிஸ்துக்கு 400 வருடங்களுக்கு முன்பே ஏற்பட்டு விட்டது.

ஈஸவீ ஜூலியன் காலண்டர்

கி.மு. 63 இல் ஜூலியஸ் சீசர் பெரிய மதபோதகர் ஆனார். ரோம் நகரம் நிர்மாணிக்கப்பட்டு 708 ஆண்டுகள் கழிந்த நிலையில் கி.மு. 46 ஜனவரி மாதம் முதல் தேதியன்று அன்றைய ரோம் சாம்ராஜ்ய அரசரான ஜூலியஸ் சீசரின் பெயரால் சூரிய கணக்கின் பிரகாரம் அமைக்கப்பட்ட காலண்டரின் துவக்கம் ஏற்பட்டது. அதை உருவாக்கியவர் இஸ்கன்தரீயாவின் பிரஜையான ஸோஸி ஜீன்ஸ் எனும் வானவியலார் ஆவார். அக்காலண்டரில் வருடத்தின் சிறியதும் பெரியதுமான ஒவ்வொரு நாளும் அதற்குரிய சரியான இடத்தில் நிகழ வேண்டும் என்பதற்காக மூன்று வருடங்கள் தொடராக 365 நாட்களைக் கொண்டதாகவும் நான்காம் ஆண்டு 366 நாட்களைக் கொண்டதாகவும் நிர்ணயிக்கப்பட்டது.

ஜூலியஸ் சீசரின் திருத்தத்திற்கு முன்பு எகிப்துக் காலண்டர் அரசியல் அமைப்பில் புழக்கத்தில் இருந்தது. கிறிஸ்துவ மாதங்களின் விபரம் :

31 நாள் உள்ள மாதங்கள் 7:

ஜனவரி, மார்ச், மே, ஜூலை, ஆகஸ்ட், அக்டோபர், டிசம்பர்.

30 நாள் உள்ள மாதங்கள் 4:

ஏப்ரல், ஜூன், செப்டம்பர், நவம்பர்

ஒரு வருடம் நான்கில் வகுக்கப்படும் என்றிருந்தால் அந்த வருடத்தின் பிப்ரவரி மாதம் 29 நாட்களைக் கொண்டதாக இருக்கும். அவ்வாறு அது 4 என்ற எண்ணில் வகுக்கப்படவில்லையென்றால் அந்த வருடத்தின் பிப்ரவரி மாதம் 28 நாட்களைக் கொண்டதாக இருக்கும்.

ஜூலியக் காலண்டரின் வருடத்தின் நீளம் 11 நிமிடங்களும் 14 வினாடித் துளிகளும் அதிகமாகின்றது.

இதன் காரணமாக 11,000 ஆண்டுகள் கழிய ஜனவரி மாதம் குளிர்

காலத்தை விட்டு விலகிச் சென்று விடுகின்றது. ஏனெனில் 400 வருடங்களுக்கு மூன்று நாட்களின் வித்தியாசம் ஏற்படுகின்றது. இதன் சீரமைப்பை கிரிகோரியன் காலண்டரில் செய்யப்பட்டுள்ளது.

ஆங்கிலேய கிரிகோரியன் காலண்டர்

கிறிஸ்துவர்களின் பதிமூன்றாம் போப் - கிரிகோரி 14 ஆம் கிறிஸ்துவ நூற்றாண்டில் பத்து நாட்களைக் குறைக்க ஆணை பிறப்பித்தார். கி.பி. 1582 அக்டோபர் 4 ஆம் தேதிக்குப் பதிலாக அக்டோபர் 15 ஆம் தேதி என கணக்கெடுத்தார்.

இங்கிலாந்தில் கி.பி. 1752 செப்டம்பர் 2 ஆம் தேதி (ஹிஜ்ரி 1165 துல்கஅதா பிறை 4) வரை ஜூலியக் காலண்டர் புழக்கத்தில் இருந்தது. இதற்கு பிறகு வரக்கூடிய நாளின் மீது 11 நாட்களை அதிகப்படியாக்கி செப்டம்பர் 3 ஆம் தேதி என்பதற்குப் பதிலாக செப்டம்பர் 14 (துல்கஅதா 16) ஆம் தேதி என தேர்வு செய்து கொள்ளப்பட்டது.

லீஃப் ஆண்டு (கபீஸா)

வருடத்தின் 1 முதல் 9 வரை உள்ள ஒரு இலக்கம் கொண்ட எண்களையும் மற்றும் 10 முதல் 99 வரை இருக்கும் இரட்டை இலக்கம் கொண்ட எண்களையும் நான்கின் மீது வகுக்கப்பட்டு ஏதும் மீதமாகவில்லை என்றிருப்பின் அத்தகைய ஆண்டிற்கு லீ.ப் (கபீஸா) ஆண்டு எனக் கூறப்படும். அவ்வாறில்லை என்றிருப்பின் அது சாதாரண வருடமாகவே கணிக்கப்படும். ஆனால் பூஜியங்களை கவனிக்கப்பட்டு நான்கின் மீது மீதம் வராமல் முழுமையாக வகுபடுமாயின் அத்தகைய நூற்றாண்டிற்கும் லீ.ப் (கபீஸா) நூற்றாண்டு எனக்கூறப்படும்.

யூதக் காலண்டர்

பழமையான யூதக் காலண்டர்கள் சாதாரண அமைப்பில் சந்திர ஆண்டு காலண்டராகவே இருந்தது. மாதத்தின் துவக்கத்தை பிறை தென்படுவதைக் கொண்டே கணிக்கப்பட்டது. தேவைக்கேற்ப பன்னிரண்டாம் மாதத்தை மீட்டிக் கொள்வர். அம்மாதம் இதார் எனும் பெயரைப் பெற்றதாக இருந்தது. ஆரம்பத்தில் காலண்டரை மாற்றியமைக்கும் உரிமை ஆளுநர்களுக்கு மட்டும் இருந்தது. அதன் பிறகு கிறிஸ்துவ நூற்றாண்டுகளின் ஆரம்பத்தில் அவ்வுரிமை பைத்துல் முகத்தஸின் 'தீனி மஜ்லிஸ் உஜ்மா' சபையினரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. யூதர்களிடம் தற்போது புழக்கத்தில் இருக்கும் காலண்டர் கி.மு. 3761 அக்டோபர் 7 ஆம் தேதி உலக துவக்க நாள் என்பதை முன்னிட்டு கணக்கெடுக்கப்பட்டு உருவாக்கிய காலண்டராகும்.

இந்திய அல்லது ஷக் காலண்டர்

கி.பி. 1957 மார்ச் 22 ஆம் தேதி 1879 ஆம் சீத் (இந்துக்களின் வருட கணிப்பில் 12 ஆம் மாதம்) மாதத்திலிருந்து இந்திய அரசாங்கம் இந்த ஷக் காலண்டரை அகில இந்தியாவில் புழக்கத்திற்கு கொண்டு வந்தது. இக்காலண்டரின் அடிப்படைகள் கிரிகோரியன் காலண்டரின் அடிப்படைகளைக் கொண்டதாக இருந்தது. குறைந்த நாட்கள் உடைய ஆண்டாக 365 நாட்கள் கொண்ட வருடத்தையும், முழுமையான ஆண்டாக 366 நாட்கள் கொண்ட வருடத்தையும் கணிக்கப்பட்டது. தொடராக வரக்கூடிய மூன்று வருடங்களும் குறைவான நாட்கள் உடைய வருடமாகவும் (அதாவது சாதாரண வருடமாகவும்) அதன் பிறகு வரக்கூடிய நான்காம் வருடம் லீப் ஆண்டாகவும் கணக்கிடப்பட்டது. இக்காலண்டர் கி.பி. 78 மார்ச் 22 ஆம் தேதி புதன் கிழமை நாளைக் கொண்டு துவக்கப்பெற்றது. ஷக் காலண்டரை கிறிஸ்துவக் காலண்டருடன் ஒப்பிட்டுப் பார்க்க நாடினால் ஷக் வருடத்துடன் 78 என்ற எண்ணை அதிகப்படுத்த வேண்டும். அப்போது கிறிஸ்துவ ஆண்டு கிடைத்து விடும். அதைப் போன்று கிறிஸ்துவ ஆண்டிலிருந்து 78 ஐ கழித்து விட்டால் ஷக் வருடம் கிடைத்து விடும்.

இஸ்லாமிய ஹிஜ்ரி காலண்டர்

நபிகளார் முஹம்மத் (ஸல்) அவர்கள் பகைவர்களின் தொல்லையால் மக்காவை விட்டு மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்தார்கள். அதை நினைவு படுத்தக் கூடியதாக இஸ்லாமிய காலண்டர் அமைந்திருக்கின்றது. அதன் தொடக்கமாக யமன் நாட்டு கவர்னர் ஹள்ரத் அபூ மூஸா அஷ்அரீ (ரழி) அவர்கள், 'உங்கள் கடிதங்களில் தேதி குறிப்பிடப்படவில்லை. எனவே இனி வரக்கூடிய கடிதங்களில் தேதியையும் குறிப்பிடுக' என ஹள்ரத் உமர் (ரழி) அவர்களிடம் வேண்டிக் கொண்டார்கள். ஹள்ரத் உமர் (ரழி) அவர்கள் நபித்தோழர்களுடன் ஆலோசனை செய்தார்கள். சிலர் நபிகளாரின் மறைவு ஏற்பட்ட தினத்தை வைத்தும், சிலர் நபிகளாருக்கு நபித்துவம் கிடைத்த தினத்தை முன்னிட்டும் வருடத்தை துவக்கலாம் என ஆலோசனை வழங்கினர். ஆனால் ஹள்ரத் உமர் (ரழி) அவர்கள் அவற்றை ஏற்றுக் கொள்ளவில்லை. நபிகளாரின் மறைவைக் கொண்டு பல சிரமங்கள் ஏற்பட்டன. அன்னாருக்கு நபித்துவம் கிடைக்கும் போது நாம் வழிகேட்டில் இருந்தோம். எனவே அவற்றை முன்னிட்டு தேதியை தொடங்குவது நல்லதல்ல என்றார்கள்.

ஹள்ரத் அலீ (ரழி) அவர்கள் நபிகளாரின் ஹிஜ்ரத்தை முன்னிட்டு தொடங்கலாம் என ஆலோசனை வழங்கினார்கள். ஏனெனில் அண்ணலாரின் ஹிஜ்ரத்தை முன்னிட்டே இஸ்லாமிய வெற்றிகளின் கதவுகள் திறக்கப்பட்டது.

ஹள்ரத் அலீ (ரழி) அவர்களும் அவ்வாலோசனையை ஏற்றுக் கொண்டார்கள். ஹிஜ்ரத்திற்கு 17 வருடங்களுக்குப் பின்பு ஹிஜ்ரி 17 ஜுமாதுல் ஆகிர் பிறை 20 (கி.பி. 638 ஜூலை 9) இல் ஹிஜ்ரிக் காலண்டருக்கு அடித்தளமிடப்பட்டது. ஹள்ரத் உஸ்மான் (ரழி) அவர்களின் ஆலோசனையின் பிரகாரம் வருடத்தின் முதல் மாதமாக முஹர்ரம் மாதம் நிர்ணயிக்கப்பட்டது. ஹிஜ்ரி வருடத்தின் துவக்கம் - ஹிஜ்ரி 1 முஹர்ரம் பிறை 1 ஜுமுஆ நாளைக் கொண்டு (கி.பி. 622 ஜூலை 16 -ஷக் வருடம் 544 அஸாடா அதாவது இந்துக்களின் நான்காம் மாதத்தில்) ஏற்பட்டது.

அரபிகள் முதல் பிறையை 'சுர்ரா' என்றும் கடைசி பிறையை 'ஸலஹ்' என்றும் கூறுவர். மாதத்தின் துவக்கம் பிறை தென்பட்டதிலிருந்து மீண்டும் தென்படும் வரை 29 அல்லது 30 நாட்களைக் கொண்டதாக இருக்கும். தொடர்ச்சியாக மூன்று மாதங்கள் 29 நாட்களைக் கொண்டதாகவும், சில சமயத்தில் நான்கு மாதங்கள் தொடர்ச்சியாக 30 நாட்களைக் கொண்டதாகவும் அமையலாம். 29 நாட்களைக் கொண்ட மாதம் 'நாகிஸ்' (குறைவான நாட்களுடைய மாதம்) எனவும், 30 நாட்களைக் கொண்ட மாதம் 'காமில்' (முழுமைப் பெற்ற மாதம்) எனவும் கணக்கிட்டுச் சொல்லப்படும்.

354 நாட்களைக் கொண்ட வருடத்திற்கு 'நாகிஸ்' எனவும், 355 நாட்களைக் கொண்ட வருடத்தை காமில் - கபீஸா எனவும் கணக்கெடுக்கப்படும். ஹிஜ்ரி மாதம் 33 சூரிய வருடங்களில் தனது சுற்றை முழுமைப்படுத்திக் கொள்கிறது.

(மிப்தாஹுத் தக்வீம்)

யானைப் படையினரின் சம்பவம்

கி.பி. 529 ஆம் ஆண்டில் யமனின் மீது ஹபஷிகளின் தாக்குதல் ஏற்பட்டது. நஜ்ஜாஷியின் படைத்தளபதி அர்யாத் என்பவன் யமன் தேசத்துக்கு முதல் மன்னன் ஆனான். கி.பி. 529 ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 601 வரை யமனில் ஹபஷி மன்னர்களின் ஆளுமை இருந்தது.

அர்யாத்தின் சிறிய தந்தை மகன் அப்ரஹத்துல் அஷ்ரம் யமன் நாட்டின் இரண்டாம் அரசனானான். இவனின் அரசாட்சி கி.பி. 549 ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 571 வரை இருந்தது. கிறிஸ்துவத்தின் மீது மிகவும் சினம் கொண்ட

வெறியனாக இருந்தான். கஅபாவை வலம் வந்து கொண்டிருக்கும் [illegible] அதை விட்டு விட்டு தான் நிறுவிய வணக்கத்தலத்தை வலம் வரவேண்டும் என்பதற்காக இவன், யமன் நாட்டு தலை நகரமாகிய 'ஸன்ஆ'வில் மிகவும் அழகுமிக்க வணக்கத்தலம் ஒன்றை நிறுவினான். அரபுக்கு இத்திப்பு ஏற்பட்டதால் கினானா எனப்படும் கோத்திரத்தைச் சேர்ந்த ஒருவன் அங்கு [illegible] கழித்து விட்டான். வேறு சிலர் கூறுகின்றனர்: அரபிகளில் சிலர் அங்கு சென்று அவ்வணக்கத்தலத்திற்கு தீ வைத்து விட்டனர். அச்சமயத்தில் காற்றினால் பரவிய தீயினால் அது முற்றிலுமாக எரிந்து நாசமாகிவிட்டது. இதனால் வெகு சினம் கொண்ட அப்ரஹா கஅபாவை இடித்து விடுவதாக சத்தியம் செய்து கொண்டான். யானைகளுடன் மக்கமா நகரத்தின் மீது படையெடுத்தான். இடையில் எதிர்த்த கோத்திரத்தார்களை வாளால் [illegible] கொன்றான்.

மக்காவின் சுற்று வட்டாரங்களில் கண்ட கால்நடைகளைப் பிடித்துக் கொண்டான். இதில் அப்துல் முத்தலிபுக்குச் சொந்தமான இருநூறு ஒட்டகங்களும் அடங்கும்.

அப்துல் முத்தலிப் சில குறைஷி தலைவர்களுடன் அப்ரஹாவிடம் சென்றார். இவர்கள் செல்வாக்கு மிக்க குறைஷி தலைவராக இருந்தார்கள். இவர்களை கண்ணுற்ற அப்ரஹா பயந்து விட்டான். நல்ல முறையில் வரவேற்றான். அரியணையிலிருந்து இறங்கி கீழே விரிக்கப்பட்டிருந்த விரிப்பில் தன்னுடன் அமர வைத்தான். அப்துல் முத்தலிப் தம் ஒட்டகங்களைத் திருமாறு வேண்டிக் கொண்டார். இதைச் செவியுற்ற அப்ரஹா கூறலானான்: "பெரும் ஆச்சரியமாக இருக்கின்றதே! நீங்கள் உங்கள் ஒட்டகங்களைப் பற்றித்தான் கேட்கின்றீர்கள். கஅபாவை பற்றி ஏதும் கூறவில்லையே?" அதற்கு அப்துல் முத்தலிப் அவர்கள்:

'நானோ ஒட்டகத்தின் சொந்தக்காரன். ஆனால் கஅபாவிற்குச் சொந்தக்காரன் அல்லாஹ்! எனவே அவன் அதைப் பார்த்துக் கொள்வான்' என்றார்கள்.

அவர்களின் ஒட்டகங்களை அப்ரஹா மன்னன் திருப்பிக் கொடுத்தான். அப்துல் முத்தலிப் அவர்கள் தம் ஒட்டகங்கள் அனைத்தையும் கஅபாவிற்காக நேர்ச்சை செய்தார். குறைஷிகளிடம் மக்காவை விட்டும் ஒதுங்கிவிடுமாறு எனவும் வேண்டிக் கொண்டார். அவர்கள் சிலருடன் கஅபாவிற்குச் சென்று அதன் வாசலருகில் நின்று மனம் உருகி பிரார்த்தித்தார்கள்.

அடியான் தனது வீட்டைப் பாதுகாத்துக் கொள்கிறான். யா அல்லாஹ்! நீ உன் வீட்டைப் பாதுகாத்துக் கொள்வாயாக! எனவும் வேண்டிக் கொண்டார். பிறகு உடனிருந்தவர்களுடன் மலை மீது ஏறிக் கொண்டார்கள். அப்ரஹா மன்னன் அறுபதாயிரம் படையுடன் கஅபாவை உடைத்தெறிவதற்காக முன்னேறினான். மக்காவிற்கு அருகிலிருக்கும் 'முஅம்மல்' எனும் மைதானத்தில் அப்ரஹாவின் படை தங்கியிருந்தது. யானைகளை முன்னேறச் செய்தான். ஆனால், அனைத்து யானைகளும் அங்கேயே உட்கார்ந்து விட்டன. சிறிதளவும் முன்னேறிச் செல்லவில்லை.

அச்சமயம் திடீரென கடற்பகுதியிலிருந்து சிறு சிறு பறவைகள் தத்தம் அலகுகளிலும், கால்களிலும் பொடிக் கற்களைச் சுமந்து வந்து கூட்டத்தினர் மீது கல்மாரி பொழிந்தது. கற்கள் தலைமேல் விழ அது கீழ்ப்பகுதியில் வெளியாகி அனைவரும் செத்து மடிந்தனர். இவ்வாறு முழுப் பட்டாளமும் அழிந்து நாசமாகிப் போனது.

அப்ரஹாவின் உடல் அழுகியது. சீளும் இரத்தமும் ஓடியது. அவனது உறுப்புகள் வெட்டப்பட்டு கீழே விழுந்தன. நெஞ்சு வெடித்தது. இதயம் வெளியே வந்தது.

அனைவரும் இறந்துவிட்ட பின் அல்லாஹ் தஆலா ஒரு வெள்ளத்தை அனுப்பினான். அனைவரையும் அவ்வெள்ளம் கடலுக்கு இழுத்துச் சென்றது. இந்நிகழ்ச்சி ஏற்பட்ட இந்த ஆண்டுக்கு 'ஆமுல் .ீபீல்' (யானை ஆண்டு) எனக் குறிக்கப்பட்டது. முஹர்ரம் மாதம் 17 ஆம் தேதி சனிக்கிழமை அதாவது கி.பி 571 ஆம் ஆண்டு மார்ச் 2 ஆம் தேதி இந்நிகழ்ச்சி நடந்தது. இதற்கு 50 அல்லது 55 நாட்களுக்குப் பின்னர் நபிகளார் முஹம்மத் (ஸல்) அவர்கள் பிறந்தார்கள்.

(ஸ்கானீ பாகம் - 1, பக்கம் 383, இப்னு ஹிஷாம் பக்கம் - 87, த.்ப்ஸீரே தப்ரீ பாகம் 30, பக்கம் - 149, த.்ப்ஸீர் இப்னு கஸீர் பாகம் 4, பக்கம் 875)

நபிகளாரின் பிறப்பு

● நபிகளாரின் தந்தை அப்துல்லாஹ் அவர்கள் கி.பி. 547 ஆம் ஆண்டு பிறந்தார்கள். நபியவர்கள் பிறப்பதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு அதாவது கி.பி. 571 ஆம் ஆண்டு தம் 24 ஆம் வயதில் இறந்தார்கள்.

● யானைத் தோழர்களின் சம்பவம் முஹர்ரம் மாதம் 17 ஆம் தேதி சனிக்கிழமை நிகழ்ந்தது. அதாவது கி.பி. 571 ஆம் ஆண்டு மார்ச் 2 ஆம் தேதி.

● நபிகளாரின் பிறப்பு, யானை ஆண்டு ரபிஉல் அவ்வல் மாதம் 9 ஆம் தேதி திங்கட்கிழமை அதாவது கி.பி. 571 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம் தேதி (பக்ரமீ ஷம்ஸீ எனும் ஆண்டின் பிரகாரம் 628)

● யானைத் தோழர்களின் சம்பவத்திற்கு 50 நாட்களுக்குப் பிறகு நபியவர்கள் பிறந்தார்கள். ஹள்ரத் ஆமினா அம்மையார் ஏழு நாட்கள் பாலூட்டினார்கள். அதன் பிறகு அபூ லஹபினால் அடிமைத்தளையிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்த 'துவைபா' எனும் அடிமைப் பெண்மணி ஏழு நாள் பாலூட்டினார்கள். நபிகளாரின் தந்தையின் சகோதரர் ஹள்ரத் ஹம்ஸா (ரழி) அவர்களுக்கும் துவைபாவே பாலூட்டியிருந்தார்கள். அதற்குப் பின் ஹலீமா ஸஅதீயா (ரழி) அவர்கள் நபிகளாருக்கு பாலூட்டினார்கள். இன்னும் ஹவாஸின் கோத்திரத்தில் கி.பி. 576 ஆம் ஆண்டு வரை ஐந்து வருடங்கள் வாழ்ந்தார்கள். அதன் பிறகு அவர்களை ஒரு வருடமும், இரண்டு மாதமும், பத்து நாட்களும் அருமைத் தாயார் வளர்த்தார்கள். கி.பி. 577 ஆம் ஆண்டில் தாயாரின் மறைவுக்குப் பின் அவர்களின் பாட்டனார் அப்துல் முத்தலிப் அவர்களின் அரவணைப்பில் வளர்ந்தார்கள். அப்போது நபியவர்களின் வயது ஆறாகும். இரு வருடங்கள் பாட்டனாரின் அரவணைப்பில் இருந்த நபியவர்களுக்கு எட்டு வயது, இரண்டு மாதம், பத்து நாட்கள் ஆகியதும் அதாவது சரியான தகவலின்படி, கி.பி. 579 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பாட்டனார் அவர்களும் தனது 82 ஆம் வயதில் காலமானார்கள். அதன் பிறகு தன் தந்தையின் சகோதரர் அபூதாலிப் அவர்களின் அரவணைப்பில் வளர்ந்தார்கள். தனது 9 - 10 வயதில் அதாவது கி.பி. 580 இன்னும் 581 ஆம் ஆண்டுகளில் நபியவர்கள் மக்களுக்குத் தொண்டு புரிய ஆரம்பித்தார்கள்.

● கி.பி. 583 ஆம் ஆண்டு தம் பன்னிரண்டாம் வயதில் தம் பெரிய தந்தை அபூ தாலிப் அவர்களுடன் ஷாமிற்கு வியாபாரத்தை முன்னிட்டு பயணமானார்கள். 'தைமா' எனும் இடத்தில் புஹைரா எனும் துறவி நபிகளாரைக் கண்ணுற்று 'இவர் ஒரு நபி ஆவார்' என சாட்சி பகர்ந்தார்.

● நபிகளாருக்கு இருபது வயதிருக்க 'உக்காழ்' எனும் சந்தையில் இரு கோத்திரங்களுக்கு மத்தியில் 'ஹர்புல் .புஜ்ஜார்' எனும் சண்டை ஏற்பட்டது. அதே வருடம் ஷவ்வால் மாதத்தில் இச்சண்டை முடிவுக்கு வந்தது. கி.பி. 590 ஆம் ஆண்டில் சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டது. இதில் நபியவர்களும் பங்கு பெற்றார்கள்.

● கி.பி. 591 ஆம் ஆண்டு முதல் 596 ஆம் ஆண்டு வரை நபியவர்கள் வியாபாரத்தில் ஈடுபட்டார்கள். 'ஸாதிக்' (உண்மையாளர்), அமீன் (நம்பிக்கைக்குரியவர்) எனும் பெயர்கள் மக்கள் மத்தியில் அன்னாருக்கு ஏற்பட்டன.

● நபிகளாருக்கு 25 வயதிருக்கும் போது ஹள்ரத் கதீஜா (ரழி) அவர்களின் வியாபாரச் சரக்குகளுடன் அன்னார் ஷாமிற்கு இரண்டாம் முறை சென்றார்கள். இப்பயணத்தில் 'புஸ்ரா' எனுமிடத்தில் 'நஸ்தூரா' எனும் துறவி நபிகளாரைக் கண்ணுற்று 'இவர் ஒரு நபிதான்' என சாட்சி பகர்ந்தார்.

● கி.பி. 596 ஆம் ஆண்டு நபிகளாருக்கு இருபத்தைந்து வயதும் இரு மாதங்களும் பத்து நாட்களும் இருக்கும் சமயத்தில் ஹள்ரத் கதீஜா (ரழி) அவர்களுடன் அண்ணலாருக்கு திருமணம் நடந்தது. அப்போது கதீஜா அம்மையாருக்கு நாற்பது வயது.

● கி.பி. 598 ஆம் ஆண்டு நபிகளாரின் புதல்வர் ஹள்ரத் காஸிம் (ரழி) அவர்களின் பிறப்பு.

● கி.பி. 600 ஆம் ஆண்டு ஹள்ரத் ஜைனப் (ரழி) அவர்களின் பிறப்பு, மற்றும் ஹள்ரத் காஸிம் (ரழி) அவர்களின் மறைவு.

● கி.பி. 603 ஆம் ஆண்டு ஹள்ரத் ருகையா (ரழி) அவர்களின் பிறப்பு.

● நபிகளாரின் முப்பத்தைந்தாம் வயதில் அதாவது கி.பி. 605 ஆம் ஆண்டு கஅபாவின் புனர்நிர்மாணம். மற்றும் 'ஹஜருல் அஸ்வத்' கல்லை இரு இட்த்தில் வைத்து அதன் மூலம் ஏற்படவிருந்த உள்நாட்டுக் குழப்பத்தை தீர்த்து வைத்தல்.

● கி.பி. 606 ஆம் ஆண்டு முதல் கி.பி. 609 - 'ஜாஹிலியய்யா' எனப்படும். அறியாமையின் பழக்க வழக்கங்களை அண்ணலார் அவர்கள் வெறுத்தல். இன்னும் ஹிரா குகையில் இறை சிந்தனையில் தம்மை முழுமையாக அற்பணித்துக் கொள்ளல்.

● கி.பி. 609 ஆம் ஆண்டு அதிகமாக உண்மைக் கனவுகள் அண்ணலாருக்கு வெளிப்படுதல்.

நபித்துவத்தின் தொடக்கம்

● நபியவர்களுக்கு நாற்பது வயது முழுமை பெற்று நாற்பத்தியொராவது வயதை அன்னார் அடைந்திருந்தபோது அதாவது கி.பி. 610 பிப்ரவரி மாதம் 9 ஆம் தேதி அண்ணலார் அவர்களுக்கு நபித்துவம் வழங்கப்பட்டது.

● நபி (ஸல்) அவர்கள் பிறந்து 41வது ஆண்டில் நபித்துவத்தின் முதலாம் ஆண்டில் அதாவது ரபிஉல் அவ்வல் மாதம் 9 ஆம் தேதி திங்கட்கிழமை அன்னாருக்கு நபித்துவம் வழங்கப்பட்டது. நபியவர்களுக்கு உலூ (அங்கசுத்தி), பஜ்ர், இன்னும் லுஹர் தொழுகைகளுக்கான சட்டம் பிறப்பிக்கப்பட்டது. மற்றொரு கருத்துப்படி நபிகளாருக்கு 40 வயதும், 6 மாதமும் இருக்க ரமளான் மாதம் 17 ஆம் பிறையில் அதாவது கி.பி. 610 ஆகஸ்ட் மாதம் 13 ஆம் தேதி ஹிரா குகையில் அன்னாருக்கு நபித்துவம் கிடைத்தது.

நபித்துவத்தின் முதலாம் ஆண்டு

● கி.பி. 610 திருக்குர்ஆன் அருளப்பெறுவது ஆரம்பமாகுதல். ● ஹள்ரத் கதீஜா (ரழி), ஹள்ரத் அபூ பக்ர் (ரழி), ஹள்ரத் அலீ (ரழி), ஹள்ரத் ஜைத் பின் ஹாரிஸா (ரழி) ஆகியோர்கள் இஸ்லாத்தை ஏற்றல். ● ஹள்ரத் பாத்திமா (ரழி) அவர்களின் பிறப்பு.

நபித்துவத்தின் மூன்றாம் ஆண்டு

● கி.பி. 612இல் இஸ்லாமிய அழைப்புப் பணியை வெளிப்படையாக செய்தல். ● ஸபா மலைக்குன்றின் மீது அண்ணலார் ஆற்றிய வரலாற்றுப் பிரசித்திப் பெற்ற சொற்பொழிவு. ● குறைஷித் தூதுவரின் வருகை. மற்றும் அபூதாலிப் அவர்களின் பதில். ● முஸ்லிம்கள் மீது காபிர்கள் கொடுத்த தொல்லைகள்.

நபித்துவத்தின் ஐந்தாம் ஆண்டு

● ரஜப் மாதம் - கி.பி. 614 ஆம் ஆண்டு ஏப்ரல் ஹபஷாவிற்கு (அபிசீனியாவிற்கு) முதல் ஹிஜ்ரத்.

நபித்துவத்தின் ஆறாம் ஆண்டு

● ஹள்ரத் ஹம்ஸா (ரழி) அவர்கள் இன்னும் ஹள்ரத் உமர் (ரழி) ஆகியோர் இஸ்லாத்தைத் தழுவுதல்.

நபித்துவத்தின் ஏழாம் ஆண்டு

● முஹர்ரம் மாதம் கி.பி. 615 அக்டோபர் அபிசீனியாவிற்கு அன்னலாரின் இரண்டாம் ஹிஜ்ரத். ● நபித்துவத்தின் ஏழாம் ஆண்டு முஹர்ரம் மாதம் முதல் 9 ஆம் ஆண்டு வரை அதாவது கி.பி. 618 ஆம் ஆண்டிலிருந்து மூன்று வருடங்கள் 'ஷுஅபே அபீதாலிப்' (அபூதாலிப் பள்ளத்தாக்கு) எனும் இடத்தில் பனூ ஹாஷிம் கோத்திரத்தார் சமூக பகீஷ்கரிப்பு செய்யப்படல்.

நபித்துவத்தின் பத்தாம் ஆண்டு

● ஷவ்வால் மாதம் - கி.பி. 619 ஆம் ஆண்டு ஏப்ரல்: அபூதாலிப், ஹள்ரத் கதீஜா (ரழி) ஆகியோரின் மறைவு. ● தாயி.ப் நகரத்திற்கு அண்ணலாரின் பயணம். ● ஹஜ் பருவத்தில் இஸ்லாத்தை பரப்புதல். ● ஹள்ரத் ஸவ்தா (ரழி), ஹள்ரத் ஆயிஷா (ரழி) ஆகியோருடன் அண்ணலாருக்கு திருமணம்.

நபித்துவத்தின் 11 ஆம் ஆண்டு

● ரஜப் பிறை 27- கி.பி. 620 மார்ச் 9: மிஅராஜ் (விண்ணுலகப் பயணம்) நிகழ்ச்சி ● ஐந்து நேரத் தொழுகை கடமையாக்கப்படுதல். ● இதே ஆண்டு துல்ஹஜ் மாதம் - கி.பி. 620 ஜூலை மினாவில் மதீனத்து மக்களில் ஆறு பேர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளல். இன்னும் மதீனாவில் இஸ்லாமிய எழுச்சி.

நபித்துவத்தின் 12 ஆம் ஆண்டு

● துல்ஹஜ் மாதம் -கி.பி. 621 ஜூன் : முதலாம் 'அகபா' ஒப்பந்தம். இதில் மதீனாவைச் சேர்ந்த 12 பேர் இஸ்லாத்தின் மீது பைஅத் எனும் உறுதி மொழிப் பிரமாணம் செய்து இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுதல். ● ஹள்ரத் முஸ்அப் பின் உமைர் (ரழி), ஹள்ரத் அப்துல்லாஹ் பின் உம்மி மக்தூம் (ரழி) ஆகியோர் மார்க்கத்தைப் போதிப்பதற்காக மதீனாவிற்குச் செல்லல்.

நபித்துவத்தின் 13 ஆம் ஆண்டு

● துல்ஹஜ் பிறை 13 - கி.பி. 622 ஜூன் 28: இரண்டாம் 'அகபா' ஒப்பந்தம். மதீனாவின் 73 ஆண்களும், இரு பெண்களும் இஸ்லாத்தை ஏற்று 'பைஅத்' (உறுதிமொழிப் பிரமாணம்) செய்தல். இன்னும் உதவி ஒத்தாசை செய்வதற்காக உடன்படிக்கை.

மதீனாவிற்கு - அண்ணலாரின் ஹிஜ்ரத்

● நபித்துவத்தின் 14 ஆம் ஆண்டு ஸ.ப்ர் பிறை 27 'ஜுமுஆ' தினத்தன்று நபிகளார் (ஸல்) அவர்கள் ஹள்ரத் அபூ பக்ர் (ரழி) அவர்களுடன் மக்காவை விட்டும் வெளியேறினார்கள். வெள்ளி, சனி, ஞாயிறு அதாவது ஹிஜ்ரி 1 ஸ.ப்ர் மாதம் பிறை 27,28,29 (கி.பி. 622 செப்டம்பர் 10,11,12) ஆகிய மூன்று நாட்கள் 'தவ்ரு' குகையில் மறைந்திருந்தார்கள். மக்காவிலிருந்து ஐந்து மைல் தொலைவில் இக்குகை இருக்கின்றது.

● ரபிஉல் அவ்வல் முதலாம் நாள் திங்கட்கிழமை 'தவ்ரு' குகையை விட்டு வெளியேறினார்கள். ஹிஜ்ரி 1 ஆம் ஆண்டு ரபிஉல் அவ்வல் 8 ஆம் திங்கட் கிழமை கி.பி. 622 செப்டம்பர் 20 ஆம் தேதி குபா கிராமத்தில் நுழைந்தார்கள். அங்கு 'மஸ்ஜிதுல் குபா' எனும் பள்ளிவாசலை நிர்மாணித்தல்.

● ஹிஜ்ரி 1 ஆம் ஆண்டு ரபிஉல் அவ்வல் பிறை 12 - கி.பி. 622 செப்டம்பர் 24 ஆம் தேதி ஜுமுஆ நாளன்று மதீனாவிற்குள் நுழையுதல். இன்னும் அங்கு ஹள்ரத் அபூ அய்யூபுல் அன்ஸாரி (ரழி) அவர்களின் வீட்டில் தங்குதல்.

ஹிஜ்ரி 1

● மஸ்ஜிதுன் நபவீ பள்ளிவாசலின் நிர்மாணம்.

● லுஹர், அஸர், இஷா ஆகிய தொழுகைகள் நான்கு ரக்அத் வீதம் கடமையாகுதல்.

● மதீனாவிலிருந்த யூதர்களுடன் ஒப்பந்தம்.

● முஹாஜிர்களுக்கும் அன்ஸாரிகளுக்கும் மத்தியில் சகோதரத்துவம் ஏற்படுதல்.

● ஹள்ரத் அப்துல்லாஹ் பின் ஸுபைர் (ரழி) அவர்களின் பிறப்பு

● அதான் (பாங்கொலி) தொடக்கம்

● ஷவ்வால் மாதம் ஹள்ரத் ஆயிஷா (ரழி) அவர்கள் கணவர் வீட்டுக்கு அனுப்பப்படுதல்

● ஹள்ரத் ஹம்ஸா (ரழி), ஹள்ரத் உபைதா (ரழி), ஹள்ரத் ஸஅத் (ரழி) ஆகியோர் தலைமையில் ஸரீயா எனப்படும் படைப் பிரிவுகள் அனுப்பப்படுதல்.

ஹிஜ்ரீ 2

- ஷஅபான் பிறை 15 இல் கிப்லா - தொழும் திசை மாற்றப்படுதல்
- ரமளானில் நோன்பு கடமையாகுதல்
- 'ஸதக்கதுல் .'.பித்ர்' மற்றும் ஈதுல் பித்ர் (நோன்புப் பெருநாள்) தொழுகை கடமையாகுதல்.
- குறைஷிகள் மதீனா மீது தாக்குதல் தொடுக்க வியூகம் அமைத்தல்
- ஜிஹாத் செய்வதற்கு அனுமதி வழங்கப்படுதல்
- ஸ.'.பர் மாதம் 'அப்வா' போர் நடைபெறுதல்
- ரபிஉல் அவ்வல் மாதம் 'புவாத்' போர் நடைபெறுதல்.
- ஜமாதுல் அவ்வல் மாதம் 'உஷைரா' போர் மற்றும் முதலாம் பத்ருப் போர் நடைபெறுதல்.
- ரஜப் மாதம் ஹள்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் (ரழி) அவர்களின் தலைமையில் படைப்பிரிவு அனுப்பப்படுதல்.
- ரமளான் பிறை 17 ல் இரண்டாவது மிகப்பெரும் பத்ருப் போர் நடைபெறுதல். இதில் முஸ்லிம்களில் 313 பேர் கலந்து கொள்ளுதல். அதில் 14 பேர் உயிர்த் தியாகம் செய்தல். இறைமறுப்பாளர்களில் 1000 பேர் கலந்து கொண்டதில் 70 பேர் கொல்லப்படுதல். எழுபது பேர் கைதிகளாக பிடிபடுதல்.
- 'கைனுகா' இன்னும் 'தவீக்' எனும் யுத்தங்கள் நடைபெறுதல்.
- ஹள்ரத் ருகையய்யா (ரழி) அவர்களின் மறைவு.
- ஹள்ரத் .'.பாத்திமா (ரழி) அவர்களுக்குத் திருமணம் நடைபெறுதல்.

ஹிஜ்ரீ 3

- முஹர்ரம் மாதம் : கத்.'.பான் யுத்தம்
- ரபிஉல் ஆகிர் மாதம் : பஹ்ரான் யுத்தம்
- ஜமாதுல் ஆகிர் மாதம் : ஹள்ரத் ஸைத் பின் ஹாரிஸா (ரழி) அவர்களின் தலைமையில் படைப்பிரிவு அனுப்பப்படுதல்.

- ஷவ்வால் 15 இல் : உஹுது யுத்தம் நடைபெறுதல். இதில் ஹள்ரத் ஹம்ஸா (ரழி) அவர்களின் 'ஷஹாதத்' எனப்படும் வீரமரணம். முஸ்லிம்கள் 650 பேர் கலந்து கொண்டதில் 70 பேர் ஷஹீத் -உயிர் தியாகம் செய்தல். இன்னும் 40 பேர் காயமுறுதல். கா.'.பிர்கள் 3000 பேர் கலந்து கொண்டதில் 40 பேர் கொல்லப்படுதல்.
- 'ஹம்ராஉல் அஸத்' எனும் போர் நடைபெறுதல்.
- வாரிசுரிமைச் சட்டங்கள் அருளப்படுதல்.
- இணை கற்பித்து வாழும் பெண்களை (முஷ்ரிக்கா) மணமுடிப்பதற்கு தடைச் சட்டம் அருளப்படுதல்.
- ஷவ்வால் மாதம் : மதுவுக்குத் தடை.
- ரமளான் மாதம் : ஹள்ரத் ஹஸன் (ரழி) அவர்களின் பிறப்பு.
- ஹள்ரத் ஹ.'.ப்ஸா (ரழி) அவர்கள் மற்றும் ஹள்ரத் ஜைனப் பின்த் ஜஹ்ஷ் (ரழி) ஆகியோருடன் அண்ணலாருக்குத் திருமணம்.
- ஹள்ரத் உம்மு குல்ஸும் (ரழி) அவர்களுடன் ஹள்ரத் உஸ்மான் (ரழி) அவர்களுக்குத் திருமணம்.

ஹிஜ்ரீ 4

- முஹர்ரம் : ஹள்ரத் அபூ ஸலமா (ரழி) இன்னும் ஹள்ரத் அப்துல்லாஹ் பின் உனைஸ் (ரழி) ஆகியோர் தலைமையில் சிறு படைப்பிரிவுகள் அனுப்பப்படுதல்.
- ஸ.'.பர் : 'ரஜீஉ' நிகழ்ச்சி. இன்னும் 'பிஅரெ மஊனா' வின் துயரச் சம்பவம். இதில் 70 நபித் தோழர்கள் ஷஹீதாகுதல்.
- ரபிஉல் அவ்வல் : 'பனூ நுழைர்' போர்.
- ஜுமாதுல் ஊலா : 'தாதுர் ரிகாஉ' போர்.
- ஷஅபான் : இன்னும் ஹள்ரத் ஹுஸைன் (ரழி) அவர்களின் பிறப்பு.
- ஷவ்வால் : ஹள்ரத் உம்மு ஸலமா (ரழி) அவர்களுடன் நபிகளாருக்குத் திருமணம்.
- ரபிஉல் ஆகிர் : ஹள்ரத் ஜைனப் பின்த் ஹுஸைமா (ரழி) அவர்களின் மறைவு.

ஹிஜ்ரீ 5

● ரபிஉல் அவ்வல் : 'தூமத்துல் ஜன்தல்' போர்.

● ஷஅபான் : பனூ முஸ்தலிக் (முறைஸீஉ) போர், ஹள்ரத் ஆயிஷா (ரழி) அவர்கள் மீது அவதூறு கிளப்பப்பட்ட நிகழ்ச்சி. ● விபசாரத்தின் தண்டனை பற்றிய அருள் மறை வசன்ம் இறங்குதல். ● பர்தா இன்னும் தயம்முமின் சட்டம் அருளப்படுதல்.

● ஷவ்வால் : கன்தக் (அகழ்) யுத்தம்.

● துல்கஅதா : 'பனூ குரைழா' போர், 'பனூ குரைழா' வின் யூதர்களை முடிவுக்கு கொண்டு வருதல். ● ஹள்ரத் ஜுவைரியா (ரழி), ஹள்ரத் ஜைனப் பின்த் ஜஹ்ஷ் (ரழி) ஆகியோருடன் நபிகளாரின் திருமணம்.

ஹிஜ்ரீ 6

● முஹர்ரம் : ஹள்ரத் முஹம்மத் பின் மஸ்லமா (ரழி) அவர்களின் கீழ் படைப்பிரிவுகள் அனுப்பப்படுதல்.

● ரபிஉல் அவ்வல் : 'பனூ லஹ்யான்' மற்றும் 'தீ கரத்' எனும் போர்கள் நடைபெறுதல். இன்னும் ஹள்ரத் உக்காஷா (ரழி) அவர்களின் தலைமையில் படைப்பிரிவு அனுப்பப்படுதல்.

● ரபிஉல் ஆகிர் : 'ஸரீய்யா தில் கலஸா' மற்றும் 'ஸரீய்யா ஜுமும்' எனும் இரு படைப்பிரிவு அனுப்பப்படுதல்.

● ஜுமாதுல் ஊலா : 'ஸரீய்யா தரிப்' மற்றும் 'ஸரீய்யா ஈஸ்' எனும் இரு படைப்பிரிவுகள் அனுப்பப்படுதல்.

● ரஜப் : 'ஸரீய்யா வாதில் குரா' எனும் படைப்பிரிவு அனுப்பப்படுதல்.

● ஷஅபான் : 'ஸரீய்யா தூமத்துல் ஜன்தல்', 'ஸரீய்யா ஃபதக்' எனும் இரு படைப்பிரிவுகள் அனுப்பப்படுதல்.

● ஷவ்வால் : ஹள்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரழி) அவர்களின் தலைமையிலும், குர்ஸ் பின் ஜாபிர் (ரழி) அவர்களின் தலைமையிலும் இரு படைப்பிரிவுகள் அனுப்பப்படுதல்.

● துல்கஅதா : 'பைஅத்துர் ரிழ்வான்' எனும் நிகழ்ச்சி. இன்னும் ஹுதைபிய்யா உடன்படிக்கை.

● துல் ஹஜ் : ரோம் நாட்டு மன்னன் கைஸர் மற்றும் கிஸ்ரா, ஃபர்வேஜ், நஜ்ஜாஷீ, மகூகிஸ் போன்ற அரசர்களுக்கும் மற்றும் உலகளாவிய மன்னர்களுக்கும் இஸ்லாமிய அழைப்பு விடுத்து கடிதங்கள் அனுப்பப்படுதல்.

இஸ்லாமிய ஆட்சியின் தொடக்கம்

ஹிஜ்ரீ 7

● முஹர்ரம் : 'கைபர்' போரின் வெற்றி. முஸ்லிம்கள் 1400 பேர். அதில் 15 பேர் வீர மரணம் அடைதல். யூதர்களின் எண்ணிக்கை 10,000.. அதில் கொல்லப்பட்டவர்கள் 93 பேர். இப்போரில்தான் அண்ணலாருக்கு உணவில் விஷம் கலந்து கொடுக்கப்பட்டது.

● ஃபதக்கின் வெற்றி, 'வாதியே குரா' வின் வெற்றி.

● ஸஃபர் மாதம் : ஹள்ரத் காலிப் லைஸீ (ரழி) அவர்களின் தலைமையில் படைப்பிரிவு அனுப்பப்படுதல்.

● ஜுமாதுல் ஆகிர் மாதம் : ஹள்ரத் ஸைத் பின் ஹாரிஸா (ரழி) அவர்கள், ஹள்ரத் அபூபக்ர் (ரழி) அவர்கள் இன்னும் ஹள்ரத் உமர் (ரழி) ஆகியோரின் தலைமையில் படைப்பிரிவு அனுப்பப்படுதல்.

● ரமளான் மாதம் : ஹள்ரத் உஸாமா (ரழி) அவர்களின் தலைமையில் ஒரு படைப்பிரிவு அனுப்பப்படுதல்.

● ஷவ்வால் மாதம் : முர்ரா இப்னு பஷீர் பின் ஸஅத் (ரழி), ஹள்ரத் அப்துல்லாஹ் பின் அபீ ஹத்ரத் (ரழி), ஹள்ரத் அப்துல்லாஹ் பின் ஹுதைஃபா (ரழி) ஆகியோரின் தலைமையில் படைப்பிரிவுகள் அனுப்பப்படுதல்.

● வன விலங்குகள், கீறிக் கிழிக்கும் பறவைகள், கழுதை மற்றும் கோவேறு கழுதை போன்ற மிருகங்களை உண்பது தடைசெய்யப்பட்டது.

● ஹள்ரத் ஸஃபீயா (ரழி) அவர்களை அண்ணலார் திருமணம் செய்தல்.

● துல்கஅதா மாதம் : 'உம்ரத்துல் கழா' எனும் உம்ரா நடக்குதல். இன்னும் ஹஜ்ஜின் போது 'ரம்லின்' (தோள்தூக்கி ஓடும்) சட்டம் ஆரம்பமாகுதல்.

- ஹள்ரத் மைமூனா (ரழி) அவர்களை நபிகளார் மணந்தது.
- ஹள்ரத் காலித் பின் வலீத் (ரழி), ஹள்ரத் அம்ர் பின் ஆஸ் (ரழி) ஆகியோர்களின் இஸ்லாமிய வருகை.

ஹிஜ்ரீ 8

- ரபிஉல் அவ்வல் மாதம் : 'ஸரீய்யா தாதே அத்லாஹ்' மற்றும் 'ஸரீய்யா தாதே இரக்' எனும் படைப்பிரிவுகள் அனுப்பப்படுதல்.
- ஜுமாதுல் ஊலா மாதம் : 'மூத்தா' போர். இதில் 3000 முஸ்லிம்கள் கலந்து கொள்ளுதல். இதில் 12 பேர் வீர மரணம் அடைதல். ஒரு சொல்லின் படி இப்போரில் விரோதிகள் ஒரு இலட்சம் பேர் என்றும் மறு சொல்லின் படி இரண்டு இலடசம் பேர் என்றும் கூறப்பட்டிருக்கிறது.
- ஜுமாதுல் ஆகிர் மாதம் : 'ஸரீய்யா தாதுஸ் ஸலாஸில்' எனும் படைப்பிரிவு அனுப்பப்படுதல்.
- ரஜப் மாதம் : 'சீ.ப்புல் பஹ்ர்' எனும் படைப்பிரிவு அனுப்பப்படுதல்.
- ரமளான் மாதம் பிறை 20 வியாழக் கிழமை : மக்கா வெற்றி. கஅபாவின் மேல் ஏறி ஹள்ரத் பிலால் (ரழி) அவர்கள் பாங்கு கூறுதல். உஸ்ஸா, ஸுவாஉ மற்றும் மனாத் ஆகிய சிலைகளை உடைத்தெறிதல்.
- ஷவ்வால் மாதம் : 'ஹுனைன்', 'நஹ்லா', 'அவ்தாஸ்' ஆகிய போர்கள் நடைபெறுதல். தா.ய்ப் முற்றுகை இன்னும் முதல் முறையாக 'மின்ஜனீக்' (கவண்) கருவியை உபயோகித்தல்.
- நபிகளாரின் மகளார் ஹள்ரத் ஜைனப் (ரழி) அவர்களின் மறைவு.
- துல்ஹஜ் மாதம் : நபிகளாரின் மகனார் ஹள்ரத் இப்ராஹீம் (ரழி) அவர்களின் பிறப்பு.
- துல்கஅதா மாதம் : உம்ரா ஜிஇர்ரானா.

ஹிஜ்ரீ 9

- முஹர்ரம் மாதம் : உயைனா பின் ஹஸன் (ரழி) அவர்களின் தலைமையில் ஒரு படைப்பிரிவு அனுப்பப்படுதல்.

- ஸ.ப்ர் மாதம் : குத்பா பின் ஆமிர் (ரழி) அவர்களின் தலைமையில் படைப்பிரிவு அனுப்பப்படுதல்.
- ரபிஉல் அவ்வல் மாதம் : ழிஹாக் பின் ஸுப்யான் (ரழி), ஹள்ரத் அல்கமா பின் முஹ்ஸிஸ் (ரழி) ஆகியோரின் தலைமையில் படைப்பிரிவுகள் அனுப்பப்படுதல்.
- ரபிஉல் ஆகிர் மாதம் : ஹள்ரத் அலீ (ரழி) அவர்களின் தலைமையில் ஒரு படைப்பிரிவு அனுப்பப்படுதல்.
- ரஜப் மாதம் : தபூக் யுத்தம் நடைபெறுதல். இன்னும் ஹள்ரத் காலித் பின் வலீத் (ரழி) அவர்களின் தலைமையில் ஒரு படைப்பிரிவு அனுப்பப்படுதல்.
- துரோக்கன் கட்டிய மஸ்ஜிதே ழிரார் தகர்க்கப்படுதல்.
1785 - 1794 ..... - வில்லியம் ஜாகப் பிராங்க் த கிராப்
1794 - 1796 ..... - ஜோ ஆன் பிரார்த் வான் எங்கல்பேர்க்

இலங்கையில் ஆங்கிலேய ஆளுனர்கள்

1798 - 1805 ..... - பிரெட்றிக் நோர்த்
1805 - 1812 ..... - சேர் தோமஸ் மெயிட்லண்ட்
1812 - 1819 ..... - சேர் ரொபர்ட் பிரேளன்றிக்
1819 - 1822 ..... - சேர் எட்வர்ட்
1822 - 1831 ..... - சேர் எட்வர்ட் பான்ஸ்
1831 - 1837 ..... - சேர் ரொபர்ட் வில்மட் ஹோர்ட்டன்
1837 - 1841 ..... - ஜேம்ஸ் அலெக்ஸ்ஸாண்டர் ஸ்ரூவர்ட்
1841 - 1847 ..... சேர் கொலின் கம்பல்
1847 - 1850 ..... - வைக்வுண்ட் டொரிங்டன்
1850 - 1855 ..... - சேர் ஜோர்ஜ் வில்லியம் அன்டர்சன்
1855 - 1860 ..... - சேர் ஹென்றி ஜோர்ஜ் வோர்ட்
1860 - 1865 ..... - சேர் சார்ல்ஸ் ஜஸ்டின் மக்காத்தி
1865 - 1872 ..... - சேர் ரொபர்ட் ரொபின்ஸன்
1872 - 1877 ..... - சேர் வில்லியம் ஹென்றி கிறெகரி
1877 - 1883 ..... - சேர் ஜேம்ஸ் றொபெட் லோங்டன்
1883 - 1890 ..... - சேர் ஆர்தர் கோடன்
1890 - 1896 ..... - சேர் ஆர்தர் அல்பங்க் ஹவ்லொக்
1896 - 1903 ..... - சேர் வெஸ்ட் ரிஜ்வே
1903 - 1907 ..... - சேர் ஹென்றி ஆர்தர் பிளேக்
1907 - 1913 ..... - சேர் ஹென்றி எட்வர்ட் மெக்கலம்
1913 - 1916 ..... - சேர் ரொபர்ட் சாமஸ்
1916 - 1918 ..... - சேர் ஜோன் அன்டர்சன்
1918 - 1925 ..... - சேர் வில்லியம் ஹென்றி மெனிங்

1925 - 1927 ..... - சேர் சார்ள்ஸ் கிளிபட்
1927 - 1930 ..... - சேர் ஹேர்பட் ஜேம்ஸ் ஸ்ரான்லி
1930 - 1933 ..... - சேர் கிறெமி தொம்ஸன்
1933 - 1937 ..... - சேர் ரெஜினோல்ட் எட்வட் ஸ்டப்ஸ்
1937 - 1948 ..... - சேர் அன்றூ கொல்கொட்
1948 - 1949 ..... - சேர் ஹென்றி மன்க் மேசன் முவர்

1948 சுதந்திரத்தின் பின் ஆளுனர்கள்

1949 ..... - சோல்பரி பிரபு
1962 ..... - சேர் ஒலிவர் குணதிலக
1972 ..... - வில்லியம் கொபல்லவ

இலங்கையின் பிரதமர்கள்

1948 ..... - டி.எஸ். சேனாநாயக்க
1952 ..... - டட்லி சேனாநாயக்க
1953 ..... - சேர் ஜோன் கொத்தலாவல
1956 ..... - எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க
1959 ..... - விஜயானந்த தஹநாயக்க
1960 ..... - டட்லி சேனாநாயக்க (2 ஆம் முறை)
1960 ..... - ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க
1965 ..... - டட்லி சேனாநாயக்க (3ம் முறை)
1970 ..... - ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க (2ம் முறை)
1977 ..... - ஜே.ஆர். ஜயவர்தன
1978 ..... - ஆர். பிரேமதாஸ
1989 ..... - டி.பி. விஜேதுங்க
1993 ..... - ரணில் விக்கிரமசிங்க
1994 ..... - சந்திரிகா குமாரதுங்க
1995 ..... - ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க (3ம் முறை)

இலங்கையின் ஜனாதிபதிகள்

1972 ..... - வில்லியம் கொபல்லவ
1978 ..... - அதிமேதகு ஜே.ஆர். ஜயவர்தன
(நிறைவேற்று அதிகாரம் கொண்ட முதலாவது ஜனாதிபதி - இருமுறை இப்பதவியை வகித்தவர்)
1989 ..... - அதிமேதகு ஆர். பிரேமதாஸ
1992 ..... - அதிமேதகு டி.பி. விஜேதுங்க
1995 ..... - அதிமேதகு சந்திரிகா குமாரதுங்க
1999 ..... - அதிமேதகு சந்திரிகா குமாரதுங்க (3ம் முறை)

பங்களாதேஷ்

கி.பி. 1971 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கிழக்கு பாகிஸ்தான் உள்நாட்டு போர்களின் காரணமாக மேற்கு பாகிஸ்தானிலிருந்து பிரிந்து பங்களாதேஷ் எனும் ஒரு தனி நாடாக உருவெடுத்தது. அது தனி நாடாக உருவெடுக்க இந்தியா முழு ஆதரவை நல்கியது.

இஸ்லாமிய வெற்றிகள்

● இஸ்லாத்தின் ஆரம்ப கால கட்டத்தில் இறைமறுப்பாளர்களின் கொடுஞ்செயல்களையும், அநீதிகளையும் சகித்துக் கொள்ளுமாறு முஸ்லிம்களுக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது. ஆனால் இறைமறுப்பாளர்களின் அட்டூழியங்கள் உச்சகட்டத்தை அடைந்ததும் ஹிஜ்ரி 2 - கி.பி. 623 ஆம் ஆண்டு ஸ.ப்ர் மாதம் பிறை 11 இல் 'ஜிஹாத்' எனும் அறப்போருக்காக அனுமதி வழங்கப்பட்டது.

● நபி (ஸல்) அவர்கள் கலந்து கொண்ட போர்களுக்கு 'கஜ்வா' என்றும் கலந்து கொள்ளாத யுத்தங்களுக்கு 'ஸரீயா' (படைப்பிரிவு) அல்லது 'பஅஸ்' என்று கூறப்படும். சரியான சொல்லின் பிரகாரம் நபி (ஸல்) அவர்கள் கலந்து கொண்ட போர்கள் 27 ஆகும். ஒன்பது போர்களில் எதிரிகளுடன் போரிடும் சந்தர்ப்பம் உண்டானது.

● நடந்த 'ஸராயா' எனும் படைப்பிரிவுகளின் சின்னஞ்சிறு போர்களின் எண்ணிக்கை 35 முதல் 56 வரை பதிவாகியுள்ளன.

● ஹிஜ்ரி 7 முஹர்ரம் - கி.பி. 628 மே - கைபர் மற்றும் .ைபதக்கின் வெற்றி.

● ஹிஜ்ரி 8 ரமளான் பிறை 20 - கி.பி. 630 ஜனவரி 11 - .ைபத்ஹு மக்கா எனும் மக்கா வெற்றி. இதே வருடத்தில் ஷவ்வால் மாதத்தில் ஹுனைன் வெற்றி.

● ஹிஜ்ரி 11 முதல் 13 வரை - கி.பி. 632 - 634 வரை - ஹள்ரத் அபூபக்ர் (ரழி) அவர்களின் கிலா.ைபத்தில் ஈராக் வெற்றி இன்றும் சிரியா (ஷாம்) மீது தாக்குதல்.

● ஹிஜ்ரி 13 - 24 வரை - கி.பி. 634 - 644 வரை - ஹள்ரத் உமர் (ரழி) அவர்களின் கிலா.ைபத்தில் பெரும் பெரும் வெற்றிகள் கிடைத்தன.

ஷாம், ஈரான், மிஸ்ர், (எகிப்து), ஆசியாவின் ஒரு பகுதி, அஜர்பாய்ஜானின் சில பகுதிகள், பஅலபக், ஷெஹ்ஜாத், மற்றும் ஹிம்ஸ் போர்களின் வெற்றிகள். 86 ஆயிரம் கோட்டைகள் மற்றும் நகரங்கள் வெற்றி கொள்ளப்பட்டன. வெற்றி கொள்ளப்பட்ட பகுதிகளின் நிலப்பரப்பளவு 22.5 இலட்சம் சதுர மைல்.

● ஹிஜ்ரி 15 - கி.பி. 636 - ஹள்ரத் ஹகம் பின் ஆஸ் (ரழி) அவர்கள் குஜராத்தின் ஒரு பகுதியையும் புரோச்சையும் வெற்றி கொண்டார்கள்.

● ஹிஜ்ரி 24 முதல் 35 வரை - கி.பி. 644 - 656 வரை - ஹள்ரத் உஸ்மான் (ரழி) அவர்களின் கிலா.ஃபத்தில் ஆப்பிரிக்கா வெற்றி, அல்ஜீரியா, மத்திய தரைக்கடலின் தீவுகள், அவ்டோஸ், சீப்ரு ஆகிய இடங்களை கைப்பற்றுதல். ஈரானில் அதுவரை வெற்றி கொள்ளப்படாத மற்றும் தொலைதூரத்திலிருந்த இடங்களின் வெற்றி. ஸ்பெயின் மீது முதல் தாக்குதல்.

● ஹிஜ்ரி 35 முதல் 40 வரை - கி.பி. 656 - 661 வரை - ஹள்ரத் அலீ (ரழி) அவர்களின் கிலா.ஃபத்தில் உள்நாட்டு யுத்தங்கள், கிளர்ச்சிகள், குழப்பங்களை அடக்குதல், யுத்தங்களின் காரணமாக ஆப்பிரிக்காவை ரோமர்களும், கிரேக்கர்களும் மறுமுறை கைப்பற்றிக் கொள்ளுதல்.

● ஹிஜ்ரி 48 - கி.பி. 668 - ஹள்ரத் அமீர் முஆவியா (ரழி) அவர்கள் ரோமின் அதிகமான ஊர்களை வெற்றி கொண்டார்கள். குஸ்துன்தீனியாவை தண்ணீர் மார்க்கமாக முற்றுகையிட்டார்கள்.

● ஹிஜ்ரி 50 - கி.பி. 670 - வட ஆப்பிரிக்காவின் அதிகமான இடங்களையும் அங்கிருக்கும் மிகப் பெரும் பாலை வனத்தையும் வெற்றி கொண்டார்கள். நீதிபதி தன்ஜாவை வரி வசூலிப்பதற்காக நியமித்தார்கள்.

● ஹிஜ்ரி 61 - கி.பி. 680 - யஸீதுடைய ஆளுமையில் முஸ்லிம் பின் ஸியாத் அவர்கள் குவாரிஜ்ம், புகாரா ஆகிய இடங்களை வெற்றி கொண்டார்கள்.

● ஹிஜ்ரி 62 - கி.பி. 682 - ஹள்ரத் உக்பா பின் நாபி.ஃ அவர்கள் 'ம.ஃரிபீ அக்ஸா' வை வெற்றி கொண்டார்கள்.

● ஹிஜ்ரி 84 - கி.பி. 703 - அப்துல் மலிக்கின் ஆளுமையில் மீண்டும் கிரேக்கர்கள் மற்றும் ரோமானியர்களின் பகுதிகள் வெற்றி கொள்ளப்பட்டது.

● ஹிஜ்ரி 93 - கி.பி. 712 - முஹம்மத் பின் காஸிம் ஸக.ஃபீ அவர்கள் இந்தியாவின் ராஜா தாஹிரை தோற்கடித்தார். சிந்த் மற்றும் முல்தானின் பகுதிகளை வெற்றி கொண்டார்.

● ஹிஜ்ரி 92 - கி.பி. 711 - ஹள்ரத் தாரிக் பின் ஸியாத் அவர்கள் ஸ்பெயினை வெற்றி கொண்டார்கள். அதே வருடம் 'ஸார்டேனியா' தீவையும் வெற்றி கொள்ளப்பட்டது.

● ஹிஜ்ரி 98 - கி.பி. 717 - யஸீத் பின் முஹல்லப் அவர்கள் ஜர்ஜான் இன்றும் திபிரிஸ்தானையும் வெற்றி கொண்டார்கள்.

● ஹிஜ்ரி 104 - கி.பி. 723 - யஸீத் பின் அப்தில் மலிக்கின் ஆளுமையில் ஜர்ரஹ் பின் அப்துல்லாஹ் அர்மீனியாவை வெற்றி கொண்டார்கள்.

● ஹிஜ்ரி 107 - கி.பி. 725 - ஹிஷாம் பின் அப்தில் மலிக்கின் ஆளுமையில் ஜுனைத் பின் அப்துர் ரஹ்மான் மர்வீ அவர்கள் மால்வாவையும், புரோச்சின் விசாலமான நிலப்பரப்பையும் வெற்றி கொண்டார்.

● ஹிஜ்ரி 114 - கி.பி. 732 - அப்துர் ரஹ்மான் பின் அப்துல்லாஹ் ஆ.ஃபிகீ அவர்கள் ஃபிரான்ஸ் மீது தாக்குதல் நடத்தி அதன் இரு மாநிலங்களான 'உக்டியானா', 'யோர்கோனியா' வில் சுற்றித்திரிந்து சார்லஸ் மார்டல் என்பவனை தோற்கடித்து 'போர்ட்டூ' வரை சென்று அதனையும் வெற்றி கொண்டார்கள்.

● ஹிஜ்ரி 117 - கி.பி. 735 - ஹபீப் அபூ உபைதா அவர்கள் சூடானை வெற்றி கொண்டார்கள்.

● ஹிஜ்ரி 119 - கி.பி. 737 - 'ஃபர்ஆனா', 'ஹுகந்த்' ஆகிய இரு இடங்கள் வெற்றி கொள்ளப்பட்டன. துருக்கியர்களுக்கு தோல்வி ஏற்பட்டது.

● ஹிஜ்ரி 131 - கி.பி. 748 - மர்வான் பின் முஹம்மத் எனும் அர்மீனிய கவர்னர் காகேஷியாவை வெற்றி கொண்டார். அரசரே ஜிஸ்யா எனப்படும் காப்பு வரியைச் செலுத்த ஒப்புக் கொண்டார். அதே வருடம் முஸல்லமா பின் அப்துல் மலிக் அவர்கள் ரோம் நாடுகளில் ஏராளமான கோட்டைகளை வெற்றி கொண்டார்.

● ஹிஜ்ரி 122 - கி.பி. 740 - ஹபீப் பின் அபூ உபைதா அவர்கள் ஆளுநரான அப்துல்லாஹ்வின் ஆணைப்படி ஸகலீயா எனும் மேற்கத்திய தீவை வெற்றி கொண்டார்.

● ஹிஜ்ரி 224 - கி.பி. 839 - கிழக்கு ஆப்பிரிக்காவின் திசையை நோக்கி முஸ்லிம்கள் ரன்ஜிபார் மற்றும் தெற்கு ஆப்பிரிக்கா வரை சென்றார்கள்.

● ஹிஜ்ரி 226 - கி.பி. 841 - ஊகியானூஸ் கடலின் ஐம்பதுக்கும் மேற்பட்ட தீவுகள் கைப்பற்றப்படுதல்.

● ஹிஜ்ரி 230 - 235 - கி.பி. 844 - 849 - யஅகூப் பின் லைஸ் மற்றுமுண்டான தளபதிகள் துருகிஸ்தான், அப்கானிஸ்தான் போன்ற நாடுகளை தமக்குக் கீழ் கொண்டு வருதல். அதிகமான மக்கள் இஸ்லாத்தை ஏற்று முஸ்லிம்களாகுதல்.

● ஹிஜ்ரி 372 - கி.பி. 982 - ராஜா ஜெய்பால் கஜனி நகரைத் தாக்கி அதனை கருவறுக்க திட்டமிட்டார். மன்னர் சுபுக்தகீன் அவனை தோற்கடித்து பெஷாவரின் சில பகுதிகளை கைப்பற்றினார். அதே ஆண்டு அடிமை வம்சாவளித் தலைவர் ஜனீவாவை வெற்றி கொண்டார்.

● ஹிஜ்ரி 376 - கி.பி. 986 - மீண்டும் ராஜா ஜெய்பால் தாக்கியதும் முஸ்லிம்கள் பெஷாவர் மற்றும் சிந்து நதியின் மேற்கு எல்லைவரை கைப்பற்றிக் கொண்டார்கள்.

● ஹிஜ்ரி 391 - கி.பி. 1001 - மஹ்மூத் கஜ்னவீயின் ஆளுமையில் ராஜா ஜெய்பால் தாக்கினான். ஆனால் தோற்றுப் போனான். ஜலம்வரை அவனை துரத்திச் சென்று சிறை பிடித்துக் கொண்டார்கள்.

● ஹிஜ்ரி 398 - கி.பி. 1008 - மஹ்மூத் கஜ்னவீ அவர்கள் ராஜா அனந்த பாலின் அட்டூழியங்கள் இன்னும் இரகசிய சதித் திட்டத்தால் நெருக்கடிக்கு ஆளாகினார். 'பாக்கானா' மாநிலத்தை வெற்றி கொண்டார்.

● ஹிஜ்ரி 406 - கி.பி. 1015 - மஹ்மூத் கஜ்னவீ நாராஇன், தானேஸ்வர் ஆகிய இடங்களை வெற்றி கொண்டார்.

● ஹிஜ்ரி 409 - கி.பி. 1018 - மஹ்மூத் கஜ்னவீ ராஜா ஜெய்பாலை தாக்கி அவனை வழிக்கு கொண்டு வருதல்.

● ஹிஜ்ரி 413 - கி.பி. 1022 - மஹ்மூத் கஜ்னவீ இந்தியாவின் வடக்கு பகுதிகளை வெற்றி கொண்டார்.

● ஹிஜ்ரி 416 - கி.பி. 1025 - ஸோமநாத் மீது வெற்றித் தாக்குதல்

● ஹிஜ்ரி 583 - கி.பி. 1187 - சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி பைத்துல் முகத்தஸை வெற்றி கொள்ளுதல்

● ஹிஜ்ரி 588 - கி.பி. 1192 - சுல்தான் ஷஹாபுத்தீன் கோரீ டெல்லி மற்றும் அஜ்மீரை வெற்றி கொள்ளுதல்

● ஹிஜ்ரி 589 - கி.பி. 1193 - மீரட், அலிகட், கன்னோஜ், குவாலியர், ஆக்ரா, பனாரஸ், குஜராத் ஆகிய இடங்களை வெற்றி கொள்ளுதல்.

● ஹிஜ்ரி 590 - கி.பி. 1194 - பீஹார் மற்றும் வங்காளம் வெற்றி கொள்ளப்படுதல்

● ஹிஜ்ரி 626 - கி.பி. 1229 - சுல்தான் ஷம்சுத்தீன் அல்துமிஷ் ஒரிஸாவை வெற்றி கொள்ளுதல்

● ஹிஜ்ரி 695 - கி.பி. 1296 - அலாவுத்தீன் கில்ஜீ தகனை வெற்றி கொள்ளுதல்

● ஹிஜ்ரி 709 - கி.பி. 1310 - அலாவுத்தீன் கில்ஜீ மன்னரின் ஆட்சியில் க.ாபூரின் மன்னர் மற்றும் காஜாஹாஜி அவர்களும் தெலுங்கானா, மலபார், கர்நாடகம் ஆகிய பகுதிகளை வெற்றி கொள்ளுதல்

● ஹிஜ்ரி 727 - கி.பி. 1326 - சுல்தான் உர்கான் பாஸ்போர்ஸின் எல்லை வரை ஆசியாவின் நிலப்பரப்பை வெற்றி கொண்டார்.

● ஹிஜ்ரி 761 - கி.பி. 1360 - முதலாம் சுல்தான் முராத் கான் 'த்ரோஸ்' மற்றும் ரோமானியாவை வெற்றி கொண்டார்

● ஹிஜ்ரி 778 - கி.பி. 1376 - பல்கேரியா, ஸர்வியா, கிரீஸ் போலந்து, ரஷியா, ஹங்கேரி, ஆஸ்திரியா ஆகிய நாடுகள் கூட்டாகச் சேர்ந்து துருக்கியர்களைத் தாக்கினர். என்றாலும் தோல்வியைச் சந்தித்தனர். ஸர்வியா, பல்கேரியா ஆகிய நாடுகள் கராஜ் எனும் வரிப் பணத்தை செலுத்த ஒப்புக் கொண்டனர்.

● ஹிஜ்ரி 791 - கி.பி. 1389 - சுல்தான் பா யஜீத் யல்தரம் கிழக்கு ஐரோப்பாவில் டைனூப் வரை இருக்கும் பகுதிகளை வெற்றி கொண்டார்.

● ஹிஜ்ரி 799 - கி.பி. 1397 - .ாபிரான்ஸ், போலந்து, இங்கிலாந்து, ஜெர்மனி, இத்தாலி, ஆஸ்திரியா, ஹங்கேரி, போஸ்னியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஆறு இலட்சம் எண்ணிக்கை கொண்ட படையினர் 42 ஆயிரம் பேர் கொண்ட துருக்கியர்களை தாக்கினர். நிகொபொலிஸின் மைதானத்தில் போர் நடந்தது. முஸ்லிம்கள் கிறிஸ்துவர்களை விரட்டியடித்தார்கள். இங்கிலாந்து, போலந்து, .ாபிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி, போஸ்னியா ஆகிய நாடுகளின் இளவரசர்கள் கைது செய்யப்பட்டார்கள். பா யஜீத் யல்தரம் அவர்களை நோக்கி, 'செல்லுங்கள்! நீங்களும் சென்று துருக்கியர்களை எதிர்க்க ஆயத்தமாகுங்கள்' எனக் கூறினார்.

● ஹிஜ்ரி 804 - கி.பி. 1402 - பா யஜீத் யல்தரம் யூனானை (கிரீஸ்) வெற்றி கொண்டார். ஆஸ்திரியா, ஹங்கேரி ஆகிய நாடுகளின் சில பகுதிகளையும் கைப்பற்றினார்கள்.

● ஹிஜ்ரி 828 - கி.பி. 1425 - துருக்கியர்கள் ஸர்பியாவை வெற்றி கொள்ளுதல்

● ஹிஜ்ரி 857 - கி.பி. 1453 - இரண்டாம் முஹம்மத் கான் குஸ்துன்தீனியாவை வெற்றி கொள்ளுதல்

● ஹிஜ்ரி 860 - கி.பி. 1456 - ரோமானியா, பல்கேரியா, யுகோஸ்லாவியா, ஹங்கேரி வெற்றி கொள்ளப்படுதல்.

● ஹிஜ்ரி 865 - கி.பி. 1461 - இரண்டாம் முஹம்மத் கான் யூனானியக் கடலின் தீவுகளான ரொடோஸ், டொரின்டோ, இத்தாலி நகரம் ஆகியவற்றை வெற்றி கொள்ளுதல்.

● ஹிஜ்ரி 906 - கி.பி. 1500 - துருக்கியர்கள் ரோம் கடலில் வெனிஸ், இத்தாலி, ஸ்பெயின், .ப்ரான்ஸ் ஆகிய நாடுகளின் ஒன்றுபட்ட கடற் படைகளை தோற்கடித்தனர்.

● ஹிஜ்ரி 920 - கி.பி. 1514 - முதலாம் சலீம் கான் அர்மீனியா, ஜார்ஜியா மற்றும் கோஹெகாபின் பகுதிகளையும் வெற்றி கொண்டு தம் ஆளுமையின் கீழ் கொண்டு வருதல்.

● ஹிஜ்ரி 1014 - கி.பி. 1605 - பேரரசர் அக்பர் தென் இந்தியாவை வெற்றி கொள்ளுதல்

● ஹிஜ்ரி 1080 - கி.பி. 1669 - ஔரங்கஸேப் (ரஹ்) அவர்கள் சிடாகாங், அசாம், வார்கானின் பகுதிகள் ஆகியவற்றை வெற்றி கொள்ளுதல்.

ஆச்சர்யம்! ஆனால் உண்மை!

பக்தாதிலிருந்து நாற்பது மைல் தொலைவில் நபித்தோழர் ஹள்ரத் ஸல்மான் .ர்ஸி (ரழி) அவர்களின் அடக்கத்தலம் இருக்கின்றது. இதன் காரணமாக ஸல்மான் பாக் என அவ்வூருக்கு பெயரிடப்பட்டுள்ளது. அதன் பழமையான பெயர் மதாஇன் என்பதாகும். பல்லாண்டுகளாக இவ்வூர் இராக் மற்றும் அஜமின் அரசு பீடமாக இருந்து வந்தது. இங்கிருந்து இரு .ர்லாங்கு தொலைவில் ஹள்ரத் ஹுதை.பா (ரழி), ஹள்ரத் ஜாபிர் (ரழி) ஆகிய இரு நபித்தோழர்களின் அடக்கத்தலங்கள் இருந்தன. அதற்கு அருகில் தஜ்லா நதி இருக்கின்றது. இதனால் ஹள்ரத் ஹுதை.பா பின் யமான் (ரழி) அவர்களின் மண்ணறைக்கு தண்ணீரும், ஹள்ரத் ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரழி) அவர்களின் மண்ணறையில் ஈரமும் வர ஆரம்பித்தது.

முதலாம் ஷா பைஸல் மற்றும் அப்போதிருந்த இராக்கின் பெரும் மு.ப்தி ஆகியோர் தம் கனவில் அவ்விரு நபித்தோழர்களையும் கண்டனர். 'எங்களின் மண்ணறைகளை இடமாற்றம் செய்யுங்கள்' என அவ்விருவர்களும் வேண்டிக் கொண்டனர். இராக்கின் பெரும் மு.ப்தி அவர்கள் மண்ணறைகளை

தோண்டுவதற்கு அனுமதி (.பத்வா) வழங்கினார். மன்னர் அதற்குரிய தேதியை அறிவிப்புச் செய்து பத்திரிகைகளில் அதுபற்றி தகவல் கொடுத்தார். துருக்கி மற்றும் எகிப்தின் அரசுப் படைகள் வருகை தந்தன. வெளிநாடுகளிலிருந்து அனைத்து மதத்தினரும் சுமார் ஐந்து இலட்சம் பேர் ஒன்றுகூடினார்கள். அச்சிறு ஊர் 'பக்தாதே ஸானி' - இரண்டாவது பக்தாது என கூறுமளவுக்கு மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது.

ஹிஜ்ரி 1350 துல்ஹஜ் கடைசிப் பத்தில், கி.பி. 1932 ஏப்ரல் மாதம் திங்கட் கிழமை பகல் 12 மணிக்கு முதல் முதலாக ஹள்ரத் ஹுதை.பா (ரழி) அவர்களினதும், இரண்டாவதாக ஹள்ரத் ஜாபிர் (ரழி) அவர்களின் பரிசுத்தமான உடல்களை அனைத்து நாடுகளின் தூதுவர்கள், ஈராக் பாராளுமன்ற உறுப்பினர்கள், முதலாம் ஷா பைஸல் மற்றும் இலட்சக்கணக்கான நபர்களுக்கு மத்தியில் பளு தூக்கும் இயந்திரத்தின் (கிரேன்) மூலம் வெளியே எடுக்கப்பட்டது. ஷா பைஸல், இராக்கின் பெரும் மு.ப்தி, துருக்கியின் அமைச்சர், மற்றும் அப்போதைய பட்டத்து இளவரசர் ஷா .பாருக் ஆகியோர்கள் பெரு மதிப்புடன் தோள்கொடுத்தனர். அப்புனித உடல்களை கண்ணாடிப் பெட்டிகளில் வைத்தார்கள். துணியை அகற்றியதும் 13 நூற்றாண்டுகளுக்கு முந்திய உடல்களைப் போன்றில்லாமல் சில மணி நேரங்களுக்கு முன்பு அடக்கப்பட்ட உடல்களைப் போன்று அப்புனிதர்களின் தாடி முடிகள் காட்சியளித்துக் கொண்டிருந்தன. இதில் வியப்பிற்குரிய விஷயம் யாதெனில் அவ்விரு மகான்களின் கண்கள் மின்னிக் கொண்டிருந்தன. ஏராளமான மக்கள் அதனைக் கண்ணுற்றனர். ஆனால், அவர்களால் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. பெரும் பெரும் மருத்துவ நிபுணர்கள் ஆச்சரியத்தில் திகைத்து வாயடைத்துப் போயினர். ஜெர்மன் நாட்டு ஒரு பெரும் வைத்தியர் இதைக் கண்ணுற்று மு.ப்தியே அ.ஜம் அவர்களின் கரங்களைப் பற்றிப் பிடித்து, 'இஸ்லாம் உண்மையான மார்க்கம் என்பதற்கு இதைத் தவிர வேறொரு அத்தாட்சி தேவைப்படாது' எனக் கூறி உடனே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்.

அப்புனிதர்களின் உடல்களைப் பெட்டியில் வைத்து மக்களின் பார்வைக்காக முகங்களிலிருந்து துணி அகற்றப்பட்டது. இராக் படையினர் சலாம் மொழிந்தார்கள். துப்பாக்கிகளை மரியாதை நிமித்தம் உயர்த்தப்பட்டது. அதன் பின்பு மக்கள் ஜனாஸா (பிரார்த்தனைத்) தொழுகையை நிறைவேற்றினார்கள். மன்னர்களும் மார்க்க அறிஞர்களும் தமது தோள் கொடுத்து அப்புனிதர்களின் புனிதமேனி வைக்கப்பட்டிருந்த பெட்டியைத் தூக்கினார்கள். பிறகு பிற நாட்டு தூதுவர்கள், அதன் பின்பு உயர் அதிகாரிகள் தோள்

கொடுத்தார்கள். பிறகு ஏனைய மக்கள் இப்பாக்கியத்தை பெற்றார்கள். ஆகாய விமானங்கள் மேலிருந்து கீழ் நோக்கி வந்து ஸலாம் (வாழ்த்துக்) களை மொழிந்து மலர்களைத் தூவின. இவ்வாறாக நான்கு மணி நேரத்திற்குப் பின் இரு பெட்டிகளும் 'மக்பரயே ஸல்மான்' ஹள்ரத் ஸல்மான் .'.பார்ஸி (ரழி) அவர்களின் அடக்கஸ்தலத்தை சென்றடைந்தது. 'அல்லாஹு அக்பர்' (அல்லாஹு தஆலா மிகப் பெரியவன்) எனும் முழக்கம் வானலோகத்தைப் பிளக்க துப்பாக்கிகளின் வெடி சப்தத்துடன் இஸ்லாமிய மார்க்கத் தியாகிகளான அவ்விரு மகான்களின் உடல்களும் கொண்டு செல்லப்பட்டு ஹள்ரத் ஸல்மான் .'.பார்ஸி (ரழி) அவர்களின் மண்ணறைக்கு அருகாமையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. மறுநாள் பக்தாதின் திரையரங்குகளில் இதைப்பற்றி காட்டப்பட்டது. பக்தாதின் ஏராள பிற மதத்தவர்கள் இதைக் கண்ணுற்று இஸ்லாத்தை ஏற்று முஸ்லிமாகினர்.

(மஆரி.'.ப் மாத இதழ், அ.'.ஜம் கட், டெல்லி.
தேதி : கி.பி. 1979 ஜனவரி இதழ்)

♦பல்வேறு காலங்களில் பொருட்களின் விலைவாசி

அலாவுத்தீன் கில்ஜீயின் ஆட்சி

- கோதுமை ஒரு ரூபாய்க்கு 119 சேர்
- அரிசி ஒரு ரூபாய்க்கு 179 சேர்
- கடலைப் பயறு ஒரு ரூபாய்க்கு 179 சேர்
- உளுத்தம் பருப்பு ஒரு ரூபாய்க்கு 179 சேர்
- வாற் கோதுமை ஒரு ரூபாய்க்கு 224 சேர்
- நெய் ஓரிரு ரூபாய்க்கு 33 சேர்
- கெவர் எண்ணை ஒரு ரூபாய்க்கு 67 சேர்
- கரும்பு சர்க்கரை ஒரு ரூபாய்க்கு 24 சேர்

முஹம்மத் துக்ளக் மன்னரின் ஆட்சி காலம்

- கோதுமை 9 அணாவுக்கு சரியாக 1 மன்
- நெல் 6 அணா 1 பைசாவுக்கு சரியாக 1 மன்
- அரிசி 9 அணாவுக்கு சரியாக 1 மன்
- கடலை 3 அணாவுக்கு சரியாக 1 மன்
- வெள்ளை சர்க்கரை 3 ரூபாய்க்கு சரியாக 1 மன்
- கற்கண்டு 3 ரூபாய் 12 அணாவுக்கு சரியாக 1 மன்

♦(ஒரு ரூபாய் 16 அணாவுக்கும், ஒரு அணா 4 பைசாவுக்கும் சமமாக இருந்தபோதிருந்த விலைவாசியின் ஏற்றத்தாழ்வே இவ்வட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.)

- ஒரு கொழுத்த மாடு 2 ரூபாய்க்கு
- ஒரு கொழுத்த எருமை 2 ரூபாய்க்கு
- ஒரு கோழி 2 பைசாவுக்கு
- ஆட்டு கறி 2 பைசாவுக்கு ஒரு சேர்
- ஒரு கொழுத்த ஆடு ஒரு ரூபாய்க்கு

இந்த கால கட்டத்தில் இப்னு பதூதா எனும் வரலாற்றாய்வாளர் இந்தியாவிற்கு வந்தார். அவர் தனது நூலில், 'வங்காளத்தில் விலையேற்றத்தின் சமயம் ஒரு ரூபாய்க்கு மூன்று மன் அரிசியும் விலை வீழ்ச்சியின் போது 16 மன் அரிசியும், ஒரு ரூபாய்க்கு 30 கஜம் காட்டன் துணியும் கிடைத்தன' எனக் குறிப்பிடுகிறார்.

துக்ளக் மன்னரின் ஆட்சிக் காலம்

- கோதுமை 5 அணா 3 பைசாவுக்கு சரியாக ஒரு மன்
- வாற்கோதுமை 3 அணாவுக்கு சரியாக ஒரு மன்
- கடலைப்பயறு 3 அணாவுக்கு சரியாக ஒரு மன்
- நெய் 2.5 பைசாவுக்கு சரியாக ஒரு மன்
- சர்க்கரை 3.5 பைசாவுக்கு சரியாக ஒரு மன்

இப்ராஹீம் லோடியின் ஆட்சி காலம்

- தானியம் 1 ரூபாய்க்கு 10 மன்
- நெய் 1 ரூபாய்க்கு 5 சேர்
- துணி 1 ரூபாய்க்கு 10 கஜம்

ஒரு குடும்பம் ஐந்து ரூபாயை வைத்து மாதச் செலவுகள் செய்து சந்தோஷமாக வாழ்க்கையை கழித்தனர்.

அக்பர் மன்னரின் ஆட்சி காலம்

- கோதுமை 8 அணாவுக்கு ஒரு மன்
- தொலி கோதுமை 5 அணாவுக்கு ஒரு மன்

- உயர்வான நெல் 12 அணா ஒரு பைசாவுக்கு ஒரு மன்
- கடலைப்பயறு 5 அணாவுக்கு ஒரு மன்
- பாசிப்பய்று 11 அணாவுக்கு ஒரு மன்
- உளுந்து 10 அணாவுக்கு ஒரு மன்
- தானியம் 6 அணா ஒரு பைசாவுக்கு ஒரு மன்
- வெள்ளை சர்க்கரை 3 ரூபாய் 12 அணாவுக்கு ஒரு மன்
- சிவப்பு சர்க்கரை 1 ரூபாய் 10 அணாவுக்கு ஒரு மன்
- நெய் 2 ரூபாய்க்கு ஒரு மன்
- எண்ணெய் 2 ரூபாய் 11 அணாவுக்கு ஒரு மன்
- கொழுத்ததொரு ஆடு ஒரு ரூபாய் 8 அணாவுக்கு
- வாசனை மிக்க அரிசி 2 ரூபாய்க்கு ஒரு மன்
- பட்டாணி (ஜ்வார்) 6 அணாவுக்கு ஒரு மன்
- சோளம் (கம்பு) 5 அணாவுக்கு ஒரு மன்
- பருப்பு 6 அணாவுக்கு ஒரு மன்
- மைதா 13 அணாவுக்கு ஒரு மன்
- பால் 15 அணாவுக்கு ஒரு மன்
- வெல்லம் ஒரு ரூபாய் 7 அணாவுக்கு ஒரு மன்
- கோதுமை ஒரு ரூபாய்க்கு 4 மன்
- எண்ணெய் ஒரு ரூபாய்க்கு ஒரு மன் 24 சேர்
- உப்பு ஒரு ரூபாய்க்கு 20 மன், 30 சேர்
- சர்க்கரை ஒரு ரூபாய்க்கு 18 சேர்
- தானியம் (பாஜரா) ஒரு ரூபாய்க்கு 3 மன்
- நெய் ஒரு ரூபாய்க்கு 15 சேர்
- பாசிப்பயறு ஒரு ரூபாய்க்கு ஏழே முக்கால் மன்

ஜஹாங்கீரின் ஆட்சி காலம்

ஒருவர் ஒரு அணாவைக் கொண்டு அன்றைய நாளின் முழு செலவிற்காக அதை போதுமாக்கிக் கொண்டு நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருந்தார்.

ஔரங்கஸேப் மன்னரின் ஆட்சிக் காலம்

- டாக்காவில் ஒரு ரூபாய்க்கு அரிசி 7 மன் 10 சேர்
- எல்லைப்புறப் பகுதியில் மீன் 3 அணாவுக்கு 20 பவுண்டு (10 சேர்)
- கடக் என்ற ஊரில் புது நெய் 2 அணாவுக்கு ஒரு சேர்
- உப்பு ஒரு ரூபாய் 8 அணாவுக்கு 28 மன்
- நூறு பெரிய மீன்கள் இரண்டு அணாவுக்கு
- மாட்டிறைச்சி அரை சேர் சில 'கவ்டீ*' களுக்கு கிடைத்தன.

ஆங்கிலேயர்கள் இந்தியாவிலிருந்து எண்ணிலா செல்வங்களையும், தானியங்களையும் எடுத்துச் சென்றனர். இதனால் இந்தியாவில் விலைவாசியில் மாற்றம் ஏற்பட்டது. காண்க : கல்கத்தாவில் வருடாந்திர விலை வாசி.

கல்கத்தாவில் வருடாந்திர விலைவாசி

- கி.பி. 1738 - அரிசி ஒரு ரூபாய்க்கு 2 மன் 30 சேர்கள்
- கி.பி. 1750 - அரிசி ஒரு ரூபாய்க்கு 2 மன் 10 சேர்கள்
- கி.பி. 1758 - அரிசி ஒரு ரூபாய்க்கு 1 மன் 30 சேர்கள்
- கி.பி. 1782 - அரிசி ஒரு ரூபாய்க்கு 1 மன் 5 சேர்கள்
- கி.பி. 1825 - அரிசி ஒரு ரூபாய்க்கு 30 சேர்கள்
- கி.பி. 1858 - அரிசி ஒரு ரூபாய்க்கு 15 சேர்கள்
- கி.பி. 1880 - அரிசி ஒரு ரூபாய்க்கு 12 சேர்கள்
- கி.பி. 1738 - கோதுமை ஒரு ரூபாய்க்கு 2 மன் 20 சேர்கள்
- கி.பி. 1750 - கோதுமை ஒரு ரூபாய்க்கு 2 மன் 10 சேர்கள்
- கி.பி. 1758 - கோதுமை ஒரு ரூபாய்க்கு 1 மன் 35 சேர்கள்
- கி.பி. 1782 - கோதுமை ஒரு ரூபாய்க்கு 1 மன் 5 சேர்கள்
- கி.பி. 1825 - கோதுமை ஒரு ரூபாய்க்கு 32 சேர்கள்
- கி.பி. 1858 - கோதுமை ஒரு ரூபாய்க்கு 18 சேர்கள்
- கி.பி. 1880 - கோதுமை ஒரு ரூபாய்க்கு 11 சேர்கள்

*மண் மற்றும் தண்ணீரில் உண்டாகும் மின்னக்கூடிய ஒரு வகைப் பொருள். அதற்கு 'கவ்டீ' எனக் கூறப்படும். அதை ஒரு பைசாவை விட குறைந்த விலையுள்ள பொருட்களை வாங்க மக்கள் அன்று பயன்படுத்தினர்.

- கி.பி. 1738 - கடுகு எண்ணெய் ஒரு ரூபாய்க்கு 12 சேர்கள்
- கி.பி. 1750 - கடுகு எண்ணெய் ஒரு ரூபாய்க்கு 10 சேர்கள்
- கி.பி. 1758 - கடுகு எண்ணெய் ஒரு ரூபாய்க்கு 8.5 சேர்கள்
- கி.பி. 1782 - கடுகு எண்ணெய் ஒரு ரூபாய்க்கு 7 சேர்கள்
- கி.பி. 1825 - கடுகு எண்ணெய் ஒரு ரூபாய்க்கு 6 சேர்கள்
- கி.பி. 1858 - கடுகு எண்ணெய் ஒரு ரூபாய்க்கு 5 சேர்கள்
- கி.பி. 1880 - கடுகு எண்ணெய் ஒரு ரூபாய்க்கு 4.5 சேர்கள்

விக்டோரியா ஆட்சி (கி.பி. 1890)

● கோதுமை ஒரு ரூபாய்க்கு 25 சேர் ● அரிசி ஒரு ரூபாய்க்கு 12 சேர் ● நெய் ஒரு ரூபாய்க்கு 2 சேர் ● பால் ஒரு ரூபாய்க்கு 9 சேர் ● கடலை ஒரு ரூபாய்க்கு 28 சேர்

ஐந்தாம் ஜார்ஜின் ஆட்சி

● கோதுமை ஒரு ரூபாய்க்கு 8 சேர் ● அரிசி ஒரு ரூபாய்க்கு 4 சேர் ● நெய் ஒரு ரூபாய்க்கு 40 தோலா ● பால் ஒரு ரூபாய்க்கு 4 சேர் ● பருப்பு ஒரு ரூபாய்க்கு 4 சேர் ● கடலை ஒரு ரூபாய்க்கு 9 சேர். ஐந்தாம் ஜார்ஜ்க்குப் பிறகு வந்த காலம் படுமோசமானதாக இருந்தது.

(நக்ஷெ ஹயாத்- பாகம் 1. பக்கம் 197 - 202)

இங்கிலாந்து மற்றும் இந்தியாவில் ஏற்பட்ட பஞ்சம்

நூற்றாண்டு	இங்கிலாந்து	இந்தியா	பஞ்ச நிலவரம்
● கி.பி. 1000 - 1100	20 முறை	2 முறை	இரு இடங்களில்
● கி.பி. 1100 - 1200	15 முறை	1 முறை	டெல்லி, அதன் சுற்றுப்புறம்
● கி.பி. 1200 - 1300	19 முறை	3 முறை	உள்ளூரில்
● கி.பி. 1300 - 1400	16 முறை	3 முறை	உள்ளூரில்
● கி.பி. 1400 - 1500	9 முறை	2 முறை	உள்ளூரில்
● கி.பி. 1500 - 1600	15 முறை	3 முறை	உள்ளூரில்
● கி.பி. 1600 - 1700	6 முறை	3 முறை	குறிப்பிடப் பட வில்லை

17 ஆம் நூற்றாண்டு வரை இங்கிலாந்தில் 100 முறையும் இந்தியாவில் 17 முறையும் பஞ்சம் நிலவியது. ஆங்கிலேயர்களின் வருகைக்குப் பின் நிலைமை இன்னும் படுமோசமானது.

● கி.பி. 1700 - 1800	7 முறை	11 முறை	பல மாநிலங்கள்
● கி.பி. 1800 - 1900	1 முறை	31 முறை	நாடெங்கிலும்

19 ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் பஞ்சத்தால் ஏற்பட்ட விளைவு

● கி.பி. 1800 - 1825 5 முறை	இந்த 25 வருட காலப் பஞ்சத்தில் 50 இலட்சம் மக்கள் இறந்தனர்.
● கி.பி. 1825 - 1850 2 முறை	இந்த 25 வருடகாலப் பஞ்சத்தால் 10 இலட்சம் பேர் மாண்டனர்
● கி.பி. 1851 - 1875 6 முறை	இந்த 25 வருடகாலப் பஞ்சத்தால் 50 இலட்சம் மறுசொல்லின் பிரகாரம் 1 கோடி பேர் இறப்பு
● கி.பி. 1876 - 1900 18 முறை	2 கோடி 6 இலட்சம் பேர் இறப்பு
● கி.பி. 1860 - 1910	50 வருட பசி பட்டினி மற்றும் வறுமையினால் 3 கோடி இறப்பு.
● கி.பி. 1793 - 1900	இந்த 107 வருடத்தில் முழு உலகப்போர்களின் மூலம் 50 இலட்சத்திற்கும் அதிகமானோர் இறப்பு.
● கி.பி. 1891 - 1900	10 வருட காலப் பஞ்சத்தால் இந்தியாவில் ஒரு கோடி 90 இலட்சத்தை விட அதிகமானோர் இறப்பு.

இந்தியாவில் பசி பட்டினி, நெருக்கடி மற்றும் மோசமான வறுமை., பஞ்சம் ஆகியவை பற்றிப்பிடித்திருந்தது. இங்கிலாந்தில் நல்ல வளமும் சுதந்திரமான அமைப்பும் இருந்தது. இதற்கு தெளிவான காரணம் ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தின் போது அவர்கள் இந்தியாவிலிருந்து தங்கம், வெள்ளி, தானியங்கள் போன்ற எண்ணிலடங்கா பொருட்களை இங்கிலாந்துக்கு அனுப்பி வைத்தனர்.

இந்தியப் பணம் இங்கிலாந்தில்

பிலாசிப் போர், வாட்டர்லோ போர் ஆகிய இரு போர்களுக்கு இடைப்பட்ட காலத்தில் 1500 கோடி ரூபாய்கள் இங்கிலாந்து சென்றது. மிஸ்டர் இந்துமன்னின் கணக்குப் படி 60 கோடி ரூபாய்கள் இங்கிலாந்துக்கு சென்று கொண்டிருந்தது.

சர் வில்லியம் டக்பியின் சொல்படி கி.பி. 1900 வரை 9,100 கோடி ரூபாய்கள் இந்தியாவிலிருந்து வெளியாகின. மிஸ்டர் இந்துமன் உடைய கணக்கின் பிரகாரம் கி.பி. 1832 - 1945 ஆம் ஆண்டு வரை ஒரு இலட்சத்து 1800 கோடி ரூபாய்கள் வெளியாகின. வல்ல பாஈ பட்டேலின் சொல் பிரகாரம் கி.பி. 1933 ஆம் ஆண்டு வரை இங்கிலாந்து வங்கிக்கு நான்கு இலட்சத்து 5000 கோடி ரூபாய்கள் சென்றடைந்தன. (நக்ஷெ ஹயாத் - பாகம் 1, பக்கம் - 188)

திருட்டுத்தனமாகவும், முறைகேடாகவும் கவர்ந்து செல்லப்பட்ட பணத்திற்கு அளவில்லை.

இந்திய தானியம் இங்கிலாந்தில்

விமானங்களில் தானிய வகைகள் ஏராளமாக ஏற்றி இங்கிலாந்திற்கு அனுப்பப்பட்டது. கி.பி. 1883 ஆம் ஆண்டில் மாத்திரம் கோதுமை 118683710 மன் இந்தியாவிலிருந்து வெளியே எடுத்துச் செல்லப்பட்டன. அதாவது ஒரு நிமிடத்திற்கு 229 மன் நாட்டை விட்டு வெளியே எடுத்துச் செல்லப்பட்டன. அதிகாரப்பூர்வமான முறையில்

- அரிசி ஒரு நிமிடத்திற்கு 118 மன்
- கோதுமை ஒரு நிமிடத்திற்கு 65 மன்
- பருப்பு ஒரு நிமிடத்திற்கு 50 மன்
- மைசூர் பருப்பு ஒரு நிமிடத்திற்கு 55 மன்
- பாசிப்பயறு ஒரு நிமிடத்திற்கு 65 மன்

இந்தியாவிலிருந்து வெளியே சென்றது. கி.பி. 1913 ஆம் ஆண்டு கணிப்பின் படி அரிசி 6 கோடி 75 இலட்சம் மன், கோதுமை 3 கோடி 50 இலட்சம் மன், கதர் 1.5 கோடி மன், சணல் 2.25 கோடி மன், தேயிலை 36 இலட்சம் மன் எடுத்துச் செல்லப்பட்டது. கி.பி. 1916 ஆம் ஆண்டு கோதுமை 2380000 டன், கி.பி 1917 ஆம் ஆண்டு கோதுமை 2910000 டன், கி.பி. 1918 ஆம் ஆண்டு கோதுமை 4510000 டன், கி.பி. 1919 ஆம் ஆண்டு அரிசி 565000000 மன், இந்தியாவிலிருந்து எடுத்துச் செல்லப்பட்டது. இக்கணக்குகளை அரசு அலுவலகங்கள் வெளியிட்டுள்ளன. ஆனால் மறைத்து முறைகேடாக எடுத்துச் செல்லப்பட்டவைகளுக்கு கணக்கில்லை.

(நக்ஷெ ஹயாத் - மவ்லானா மதனி - பாகம் 1, பக்கம் 203)

இந்தியாவின் வளமான நிலை

இந்தியா பண்டைய காலந்தொட்டே பூமியில் இப்படியொரு செல்வச் செழிப்பான நாடே இல்லை என்று சொல்லுமளவுக்கு ஒரு செழிப்பான நாடாகத்

திகழ்ந்தது. நாணய மாற்றுக் கடைகளில் குவிக்கப்பட்டிருக்கும் தானியங்கள் போன்று நகைக் கடைகளில் ரூபாய்களும், தங்க நாணயங்களும் குவியல் குவியலாக குவிக்கப்பட்டிருக்கும். வங்காளத்துச் செல்வந்தர்களின் தொழில்கள் இங்கிலாந்து வங்கிகளுக்கு நிகராகப் பரவியிருந்தது. ஸூரத் நகர வியாபாரி அப்துல் கபூரின் வருவாய் கிழக்கிந்தியக் கம்பெனியின் வருவாய்க்குச் சமமாக இருந்தது.

முஹம்மத் துக்ளக் மன்னர் வருடம் இரண்டு இலட்சம் ஜோடி ஆடைகளையும், பத்தாயிரம் குதிரைகளையும் மக்களுக்குப் பங்கு வைத்துக் கொடுப்பார். தினமும் 20,000 விருந்தினர்கள் அரசு விருந்தினர் மாளிகையில் உணவு உண்பார்கள். சமையல் அறையில் தினமும் 2500 மாடுகள், 2000 ஆடுகள் அறுக்கப்பட்டு வந்தன. தினமும் இருநூறு மார்க்க அறிஞர்கள் அரசருடன் உணவு அருந்துவர்கள். டெல்லியில் 70 வைத்திய சாலைகள், 2000 வழிப்போக்கர்களுக்கு தங்கும் விடுதிகள் மற்றும் ஆயிரம் மார்க்கக் கல்விக் கூடங்கள் இருந்தன.

ஜஹாங்கீரின் ஆட்சி காலத்தில் வருடமிருமுறை தங்கம், வெள்ளி மற்றும் விலையுயர்ந்த உலோகப் பொருட்களை பன்னிரண்டு பன்னிரண்டு முறை எடைபோட்டு அளந்து அந்த அனைத்து தங்க வெள்ளிகளை ஏழை எளியோர்கள் மற்றும் தேவையுடையோருக்கு பங்கிடப்பட்டு வந்தது. ஜஹாங்கீரின் எடை 3 மன் 10 சேர்களாகும். இதைப் போன்று பேரரசர் அக்பர் மற்றுமுண்டான மொகலாய மன்னர்களும் ஏழை எளியோருக்கு தாராளமாக நிறுத்துக் கொடுப்பர். தினமும் தருமமாக மூவாயிரம் ரூபாய்கள் செலவிடும் வழக்கம் அவர்களிடம் இருந்து வந்தது. செல்வம் பெருகிவிட்டதன் காரணமாக ஷாஜஹான் மன்னர் ஒரு கோடி ரூபாய் செலவிட்டு 3.5 கஜம் அகலமான 5 கஜம் உயரமான தங்கத்தினாலான ஒரு தங்க மயிலாசனத்தை அமைத்தார்.

ஔரங்கஸேப் (ரஹ்) அவர்கள் அரசராகிய போது ஆக்ரா மற்றும் டெல்லியிலிருக்கக் கூடிய செல்வக் கருவூலங்களை கணக்கிடும் படி கூறினார்கள். ஆறு மாதங்கள் வரை பல்லாயிரக்கணக்கான ஊழியர்கள் வெள்ளி நாணயங்களை எண்ணிக் கொண்டிருந்தனர். ஆறு மாத காலமாக கருவூலத்தின் ஒரு பகுதியைத்தான் எண்ணி முடித்திருந்தனர். தங்க நாணயங்கள் மற்றும் மாணிக்கங்களை கணக்கிடுவதற்கு இன்னும் சந்தர்ப்பம் கூட வாய்க்கவில்லை. அப்படியிருக்க இப்பணியை அப்படியே நிறுத்திவிட்டு ஔரங்கஸேப் (ரஹ்) அவர்கள் ஏதோ வேலை நிமித்தம் தகன் பகுதிக்குச் சென்று விட்டார்கள்.

(நக்ஷெ ஹயாத் - மவ்லானா மதனி, பாகம் 1, பக்கம் 165-169)

கஅபாவை புனர் நிர்மாணம் செய்தவர்கள்

1. வானவர்கள் : ஹள்ரத் ஆதம் (அலை) அவர்களுக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வானவர்கள் ஹஜ் மற்றும் தவா.ப் செய்து கொண்டிருந்தனர்.

2. ஹள்ரத் ஆதம் (அலை) அவர்கள் : லெபனான், தூர்ஸீனா, தூர்ஜீதா, ஜூதி, ஹிரா முதலிய ஐந்து மலைகளின் கற்களினால் நிர்மாணித்தார்கள்.

3. ஆதம் (அலை) அவர்களின் மகனான ஷீஸ் : கல் மற்றும் மண்ணால் நிர்மாணித்தார்கள்.

4. ஹள்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் : நீளம் 32 அடி, மறு பக்கத்தின் நீளம் 31 அடி, அகலம் 22 அடி, மறுபக்கத்தின் அகலம் 20 அடிகளாகும். ஹள்ரத் இஸ்மாயில் (அலை) அவர்கள் கஅபாவைக் கட்டுவதற்காக கற்களைச் சுமந்தார்கள். அப்போது அவர்களின் வயது முப்பது. அப்போது ஜன்னல்கள் இல்லாத இரு கதவுகள் தரைக்குச் சமமாக இருந்தது. சுவர்களின் உயரம் 9 அடிகளாகும். முகடு இருக்கவில்லை. நேர்ச்சைகள் மற்றும் கருவூலங்களை வைப்பதற்காக கஅபாவிற்குள்ளே ஒரு சிறு கிணறு அமைக்கப்பட்டது.

5. அமாலிகா கோத்திரத்தார்கள் : ஹள்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் நிர்மாணித்த கட்டுமானம் தகர்ந்துவிட்ட பின்பு கஅபாவை நிர்மாணம் செய்தார்கள்.

6. ஜுர்ஹும் கோத்திரத்தார்கள் : வெள்ளப் பிரளயத்தால் கஅபா இடிந்து விட்ட பின்பு இவர்கள் புனர் நிர்மாணம் செய்தார்கள்.

- அமாலிகா, ஜுர்ஹும் என்பது ஹள்ரத் நூஹ் (அலை) அவர்களின் குழந்தைகளிலிருந்து வந்த இரு கோத்திரங்களாகும். இவர்கள் மக்காவில் வசித்து வந்தனர்.

7. குஸை பின் கிலாப் : நபிகளாரின் ஐந்தாம் தலைமுறையில் வந்தவர். இவர்கள் கஅபாவிற்கு முகடமைத்தார்.

8. அப்துல் முத்தலிப் : குஸை மற்றும் குறைஷிக் கோத்திரங்கள் புதுப்பித்த கால இடைவெளிக்கு மத்தியில் இவர்கள் புதுப்பித்தார்கள். இவர்களின் இப்புனர்நிர்மாணம் பிரபல்யமாகவில்லை.

9. குறைஷிகள் : ஒரு பெண் கஅபாவைச் சுற்றி தூபம் காட்டிக் கொண்டிருக்க கஅபாவின் மூலையில் நெருப்பு பற்றி எரிந்து விட்டது. இதன் காரணமாக

சுவர்களனைத்தும் பலவீனமானது. இதன் பின்பு ஏற்பட்ட வெள்ளத்தால் சுவர்களில் ஓட்டை ஏற்பட்டு விட்டது. குறைஷிகள் அதை இடித்து தம்மால் முடிந்த நல்ல வருவாயால் புதிதாகக் கட்டினார்கள். நல்ல வருவாய் பற்றாக் குறைவால் கஅபாவின் ஹதீம் பக்கமுள்ள சிறு பகுதியை கட்டாது அப்படியே விட்டுவிட்டார்கள். சுவர்களை 18 அடி உயர்த்தினார்கள். நேரான வரிசைப் பிரகாரம் உள்ளே இரு பக்கமாக ஆறு தூண்களைக் கட்டி முகட்டை அமைத்தார்கள். ருக்னே ஷாமியின் பக்கமாக படிக்கட்டை அமைத்தார்கள். மிக உயரத்தில் ஒரு வாசலை அமைத்தார்கள். இப்பணி நடைபெற்று கொண்டிருந்த போது நபிகளார் முஹம்மத் (ஸல்) அவர்களும் தமது தோளின் மீது கற்களைச் சுமந்து எடுத்து வருவார்கள். அப்போது அன்னாருக்கு 35 வயது. ஹஜருல் அஸ்வத் கல்லை நட்டி குறைஷிக் குலத்தாரின் இடையே ஏற்படவிருந்த மிகப்பெரும் கலகத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தார்கள்.

நபிகளாரின் கட்டுமானப் பணிக்கும் ஹள்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் கட்டுமானப் பணிக்கும் இடையே இடைவெளி 2645 வருடங்கள் ஆகும்.

10. ஹள்ரத் அப்துல்லாஹ் பின் ஸுபைர் (ரழி) அவர்கள் : ஹிஜ்ரி 64 - கி.பி. 683 - ரபிஉல் அவ்வல் மாதம் ஷாம் நாட்டு யஸீதின் படை ஹள்ரத் அப்துல்லாஹ் பின் ஸுபைர் (ரழி) அவர்களை மக்காவில் முற்றுகையிட்டது. மின்ஜனீக் எனும் எறியும் கருவியின் மூலம் கஅபாவின் மீது கற்களை சொரிந்தனர். ரபிஉல் அவ்வல் மாதம் பிறை 6 ல் ஷாம் தேசத்தவன் கஅபாவின் மேல் பகுதிக்கு தீயிட்டான். இதனால் கஅபாவின் கட்டிடத்திற்கு மிகப்பெரும் இழப்பு ஏற்பட்டது. ஜுமாதுல் ஆகிர் மாதம் ஹள்ரத் அப்துல்லாஹ் பின் ஸுபைர் (ரழி) அவர்கள் புனர்நிர்மாணிப்பதற்காக கஅபாவை உடைக்க ஆரம்பித்தார்கள். ஹிஜ்ரி 64 ரஜப் பிறை 17 அல்லது ஹிஜ்ரி 65 ஆம் ஆண்டு கஅபாவின் கட்டுமானப் பணி முழுமைப் பெற்றது. இரு அடி அகலம், 27 அடி உயரம், இன்னும் உள்ளே ஒரு வரிசையில் மூன்று தூண்கள் என அமைக்கப்பட்டது. ஹள்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் கட்டியதற்கு தோதாகவும், நபி முஹம்மது (ஸல்) அவர்களின் விருப்பத்திற்கேற்றவாறும் ஹதீமின் எல்லைப் புறத்தை கஅபாவிற்குள் அமையுமாறு நிர்மாணித்தார்கள் தரைக்கு இறக்கி இரு வாசல்களை அமைத்தார்கள். அப்போது ஏற்பட்ட எதிர்பாராத நிகழ்ச்சியின் காரணமாக அதுவரை கஅபாவிலும் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த ஹள்ரத் இஸ்மாயில் (அலை) அவர்களுக்கு பகரமாக அறுக்கப்பட்ட சொர்க்கத்து ஆட்டின் கொம்பு எரிந்து நாசமாகிப் போனது. ஹள்ரத் அப்துல்லாஹ் பின் ஸுபைர் (ரழி) அவர்களின் கட்டுமானத்திற்கும் குறைஷிகளின் கட்டுமானத்திற்கும் இடைப்பட்ட காலம் 86 ஆண்டுகளாகும்.

11. ஹஜ்ஜாஜின் கட்டுமானம் : ஹஜ்ஜாஜ், ஹள்ரத் அப்துல்லாஹ் பின் ஸுபைர் (ரழி) அவர்களை கொலை செய்த பின் அப்துல் மலிக்கிடம், கஅபாவில் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் இருக்காத அதிகரிப்பை இப்னு ஸுபைர் (ரழி) அவர்கள் செய்திருக்கின்றார். எனவே அதை உடைத்து முன்பிருந்தவாறு அமைக்க வேண்டும் என அனுமதி வேண்டினார். அதற்கு அனுமதி கிடைத்ததும், ஹதீமின் எல்லைப் புறத்தை கஅபாவிற்கு வெளியே இருக்குமாறு மாற்றி அமைத்தார். மேற்குப் பக்கமாக இருந்த வாசலை அடைத்து உட்புறத்தை விரிவுபடுத்தி 4.5 முழம் உயரத்தில் கிழக்கு பக்கமாக வாசலை அமைத்தார். மீதமுள்ள கட்டுமானம் மற்றும் ஏனைய மூன்று சுவர்களும் ஹள்ரத் அப்துல்லாஹ் பின் ஸுபைர் (ரழி) அவர்கள் கட்டியதே! அவை இன்று வரை அப்படியே இருக்கின்றன. இம்மாற்றம் ஹிஜ்ரி 73 இல் - கி.பி. 692 இல் ஏற்பட்டது.

ஹதீஸ் கலை விரிவுரையாளர்கள் அறிவிக்கின்றார்கள் : ஹாரூன் ரஷீத் போன்ற சில மன்னர்கள் ஹள்ரத் அப்துல்லாஹ் பின் ஸுபைர் (ரழி) அவர்கள் கட்டியதை போன்று கஅபாவை புனர்நிர்மாணம் செய்ய நாடினர். அச்சமயத்தில் ஹள்ரத் இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள், கஅபாவை கட்டுவதென்பது அரசர்களின் விளையாட்டாக அமைந்து விடக்கூடாது என்று அதை கடுமையாக எதிர்த்தார்கள்.

12. ஸுல்தான் அஹ்மத் துர்கி : இவர்கள் ஹிஜ்ரி 1021 - கி.பி. 1612 ஆம் ஆண்டு கஅபாவின் முகட்டை மாற்றி சுவர்கள், மீஜாபே ரஹ்மத் ஆகியவற்றை புனர்நிர்மாணம் செய்தார்.

13. ஸுல்தான் முராத் : ஹிஜ்ரி 1039 - கி.பி. 1630 - ஷஅபான் மாதம் பிறை 19 ஆம் புதன் கிழமை அதிகாலையிலிருந்து ஷஅபான் பிறை 20 வியாழக்கிழமை இரவு வரை மக்காவில் மழை பெய்து கொண்டிருந்தது. அதன் காரணமாக கடும் வெள்ளப் பிரளயம் ஏற்பட்டது. கஅபாவின் சுவற்றின் நடுப்பகுதி வரை தண்ணீர் நிரம்பி விட்டது. மக்காவாசிகளின் வீடுகளுக்குள்ளும் தண்ணீர் புகுந்துவிட்டது. சுமார் ஆயிரம் பேர் உயிரிழந்தார்கள். ஷஅபான் பிறை 20 மாலைப் பொழுதில் கிழக்குப்புற, மேற்குப்புற மற்றும் ஷாம் புற சுவர்கள் உட்பட கஅபாவின் மற்ற சில பகுதிகள் இடிந்து விட்டது. சுல்தான் முராத் அவர்கள் 6.5 மாதங்களில் ஹிஜ்ரி 1040 துல்ஹஜ் பிறை 20 வரை கஅபாவை புனர்நிர்மாணம் செய்தார். அதுவே இன்றுவரை இருக்கின்றது. ஷாஹ் அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்களது சொல்படி கஅபாவில் ஹஜருல் அஸ்வத் பக்கமாக செய்யப்பட்ட புனர்நிர்மாணம் ஹள்ரத் ஸுபைர் (ரழி) அவர்கள் உடையது! ஏனைய மூன்று பகுதிகளும் சுல்தான் முராத் அவர்களின் கட்டுமானமே!

14. கஅபாவின் முகடு, உட்பட மேற்கு மற்றும் வடக்கு சுவர்கள் பலஹீனமடைந்து ஓட்டை விழுந்துள்ளது என மன்னர் இப்னு ஸஊத்தின் ஆட்சியில் தெரிய வந்தபோது ஹிஜ்ரி 1377 ரஜப் பிறை 18 ஜுமுஆ தினத்திலிருந்து ஹிஜ்ரி 1377 - கி.பி. 1958 ஷஅபான் பிறை 11 வரை கட்டுமான பணி நடந்தது. மன்னர் இப்னு ஸஊத் அவர்கள் நிலைக்கதவுகளையும் வாசல்களையும் புதுப்பித்தார்கள்.

முப்பெரும் பள்ளிவாசல்கள்

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : மூன்று பள்ளிவாசல்கள் தவிர வேறெதற்கும் நீங்கள் உங்கள் பயணத்தை (அதிக நன்மையை நாடி) அமைத்துக் கொள்ள வேண்டாம்.

1- மஸ்ஜிதுல் ஹராம் (கஅபா)
2- மஸ்ஜிதுல் அக்ஸா (ஜெருசலம்)
3- மற்றது எனது பள்ளிவாசல் - மஸ்ஜிதுன் நபவி

(மிஷ்காத் பாகம் - 1, பக்கம் 62)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : ஒரு ஆண் ஒரு தொழுகையை வீட்டில் தொழுதால் அது ஒரு தொழுகைக்குச் சமம். அதே தொழுகையை தனது மஹல்லாவிலுள்ள பள்ளிவாசலில் தொழுதால் இருபத்தைந்து தொழுகைகளுக்கும், ஜாமிஆ மஸ்ஜிதில் தொழுதால் ஐநூறு தொழுகைகளுக்கும், மஸ்ஜிதுல் அக்ஸாவில் தொழுதால் ஐம்பதாயிரம் தொழுகைகளுக்கும், என் பள்ளிவாசலான மஸ்ஜிதுன் நபவியில் தொழுதால் ஐம்பதாயிரம் தொழுகைகளுக்கும், மஸ்ஜிதுல் ஹராமில் தொழுதால் ஒரு இலட்சம் தொழுகைகளுக்கும் சமமானதாகும். (இப்னு மாஜா - பக்கம் 103)

மஸ்ஜிதுல் ஹராமின் விரிவாக்கம்

மஸ்ஜிதுல் ஹராமின் நவீன கட்டிடம் மூன்று அடுக்குகளைக் கொண்டதாகும். ஒரு அடுக்கு பூமிக்குள்ளும் இரு அடுக்குகள் பூமிக்கு மேலும் இருக்கின்றன. ஹரமின் எல்லைப்புறத்தின் முழு சுற்றளவு 1.25 இலட்சம் சதுர அடிகளாகும். தொங்கோட்டம் ஓடும் இடம் 65 ஆயிரம் சதுர அடிகளாகும். பழைய ஹரமின் சுற்றளவு முப்பதாயிரம் சதுர மீட்டர்களாகும். ஹரமை நவீனமயமாக்கிய பின்பு 1.5 இலட்சம் மீட்டர்கள் அதாவது ஐந்து மடங்காக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. மேலும் பெரிய அளவில் விரிவாக்கம் செய்யப்படுகின்றது.

விரிவாக்கம் நடந்தது வரிசை எண் பிரகாரம்	விரிவாக்கம் செய்த ஆண்டு		செய்தவர்
	ஹிஜ்ரி	கி.பி.	
1. விரிவாக்கம்	17	638	ஹள்ரத் உமர் (ரழி)
2. விரிவாக்கம்	26	647	ஹள்ரத் உஸ்மான் (ரழி)
3. விரிவாக்கம்	65	685	ஹள்ரத் அப்துல்லாஹ் பின் ஸுபைர் (ரழி)
4. விரிவாக்கம்	75	694	அப்துல் மலிக் பின் மர்வான்
5. விரிவாக்கம்	91	710	வலீத் பின் அப்துல் மலிக்
6. விரிவாக்கம்	137	754	அபூ ஜஅ்பர் மன்ஸூர் அப்பாஸீ
7. விரிவாக்கம்	164	781	முஹம்மத் மஹ்தீ அப்பாஸீ
8. விரிவாக்கம்	271	884	மு.அ்தமித் பில்லாஹ் அப்பாஸீ
9. விரிவாக்கம்	284	897	மு.அ்தழித் பில்லாஹ் அப்பாஸீ
10. விரிவாக்கம்	306	918	முக்ததிர் பில்லாஹ் அப்பாஸீ
11. விரிவாக்கம்	807	1405	ஜராகிஸாவின் மன்னர்கள்
12. விரிவாக்கம்	882	1477	ஸுல்தான் காதிபாஈ
13. விரிவாக்கம்	972	1564	ஸுல்தான் சுலைமான் கான்
14. விரிவாக்கம்	980	1572	ஸுல்தான் ஸலீம் கான்
15. விரிவாக்கம்	984	1576	ஸுல்தான் முராத் கான்
16. விரிவாக்கம்	1375	1956	ஸவூதி அரசு

ஹிஜ்ரி 984 - கி.பி. 1576 ஆம் ஆண்டு மஸ்ஜிதுல் ஹரமின் கோபுரங்களின் எண்ணிக்கை :

பெரிய கோபுரங்கள் : 113 சிறிய கோபுரங்கள் : 268

(தாரீக் ஹரமைன் ஷரீபைன் - பக்கம் 40)

ஹரம் ஷரீஃபின் நவீன ஏற்பாடுகள்

ஹரமில் 8,000 மின்விசிறிகள் பொருத்தப்பட்டுள்ளன. இவைகளின் மொத்த விலை மதிப்பு 30,44,000 ரியால்களாகும். 55,000 மின் விளக்குகளும், டியூப் லைட்டுகளும் பொருத்தப்பட்டுள்ளன. அவைகளுக்கு 1000 - 5000 வாட் வரை மின்சாரம் செலவிடப்படுகிறது. 4,000 ஒலிபெருக்கிகள் உண்டு. இன்னும் 1364 கண்ணாடிக் கலசங்கள், அவைகளுக்குள் பொருத்தப்பட்டிருக்கும். விளக்குகளின் எண்ணிக்கை 21,000 ஆகும்.

ஹரமுடைய மினாராக்களின் மீது பச்சை நிறம் கொண்ட அழகான பேரொளிகுழல் விளக்குகள் பதிநான்கு பொருத்தப்பட்டுள்ளன. அந்த ஒவ்வொரு விளக்கிலும் ஹரமைத் தூரத்திலிருந்தே அடையாளம் காட்டித் தருவதற்காக 12500 வாட் பலம் கொண்ட இரு விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

உலகில் மக்களால் பேசப்படும் முக்கிய ஆறு மொழிகளைக் கொண்டு இயங்கும் 450 எலக்ட்ரானிக் சுவர்கடிகாரங்கள் ஹரமில் பொருத்தப்பட்டுள்ளன. கணிணி (கம்ப்யூட்டர்) மூலம் இயங்கக் கூடிய அனைத்து கடிகாரங்களையும் ஒரே மையத்தில் இருக்கும் ஒரு கடிகாரத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இக்கடிகாரங்களுக்காக 917222 சவூதி ரியால்கள் செலவிடப்பட்டுள்ளன. தொங்கோட்டம் (ஸஈ) ஓடும் இடத்தை குளிரூட்டுவதற்காக 28 யூனிட் செலவிடப்படுகிறது. ஒவ்வொரு யூனிட்குரிய செலவு ஒரு கோடி ரியால்களாகும். நோயாளிகள், வயதானவர்கள் மேலே சென்று ஸஈ செய்வதற்கு வசதியாக அவ்விடத்தில் 15 இலட்சம் ரியால்கள் செலவிடப்பட்டு இரண்டு லிஃப்ட் (மின்னுயர்த்தி) கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஹரமிற்கு வந்து செல்வதற்கு வசதியாக ஸஈ செய்யுமிடத்தில் ஆறு மேம்பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதற்கான செலவு 1413450 ரியால்களாகும்.

ஹரமின் சுவர்கள் மற்றும் தூண்களை சலவைக் கற்களைக் கொண்டு வேலைபாடுகள் செய்வதற்காக ஒரு கோடி ரியால்கள் செலவிடப்பட்டது. ஸம் ஸம் கிணற்றை புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. அத்தண்ணீரை குளிரூட்டுவதற்காகவும் மற்றும் அத்தண்ணீரை ஹரமில் விநியோகிப்பதற்காகவும் 722 குழாய்கள் பொருத்தப்பட்டு 40 லிட்டர் கொள்ளளவு கொண்ட 5000 குளிர்சாதனப் பெட்டிகளின் வசதி செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக 2500 கிலோவாட் கொண்ட சக்திவாய்ந்த ஒரு பவர் ஹவுஸும் அமைக்கப்பட்டது. இத்திட்டத்திற்காக 3.25 கோடி ரியால்கள் செலவிடப்பட்டது.

ஹரமிற்குள் நுழைய 45 வாசல்கள் உண்டு. இவைகளை புதுப்பிப்பதில் 1.25 கோடி ரியால்கள் செலவானது. (தற்போது 99 வாசல்கள் உண்டு). ஹரம் ஷரீஃபை தூய்மைப்படுத்தவும் கண்காணிக்கவும் 2.5 கோடி சவுதி ரியால்கள் செலவிடப்படுகிறது. பவர் ஹவுஸின் மின் சக்திக்கு 76 இலட்சம் ரியால்கள் செலவானது. ஹிஜ்ரி 1403 முதல் ஹிஜ்ரி 1405 ஆண்டு வரை இரண்டு வருடத்திற்கான ஹரம் ஷரீஃபின் மொத்த செலவு 9700 கோடி 95862 ரியால்களாகும்.

(ரோஜ் நாமா ஹிந்த் இதழ், கல்கத்தா
ஹி. 1405 - கி.பி. 1985 - ரமளான் பிறை 22)

பைத்துல் முகத்தஸ்

முஸ்லிம்கள், யூதர்கள் மற்றும் கிறிஸ்துவர்களால் புனித இடம் எனக் கருதப்படும் பைத்துல் முகத்தஸ் முஸ்லிம்களின் முதல் கிப்லாவும், நபிகளார் முஹம்மத் (ஸல்) அவர்கள் விண்ணுலகப் பயணத்தை (மிஅராஜ்) துவக்கிய இடமுமாகும். பைத்துல் முகத்தஸின் தென்புறம் - கடல் மட்டத்திலிருந்து 3600 சதுர அடி உயரத்தில் இருக்கும் மலை ஸைஹூனில் உள்ளது. இதன் முதல் பெயர் 'ஜெலீஸ்' என்றிருந்தது. அதன் பின்பு 'யரூஸலம்' என்று மாறியது. அபரானி பாஷையில் 'யரூஸலம்' (ஜெரூசலம்) என்பதன் பொருள் 'அமைதியின் வீடு' என்பதாகும். ஆனால் இஸ்லாமிய ஆட்சி நடைபெறாத காலங்களில் அங்கு பெருமளவு இரத்தக்களரியே ஏற்பட்டுக் கொண்டிருந்தது. யூதர்கள் எதிராகச் செயல்பட்டு அட்டூழியங்கள் புரிந்ததால் அவர்கள் மீது ஜாலூத், பாபல் மன்னன், புக்த நஸர் போன்ற அநியாயக்கார அரசர்கள் ஆதிக்கம் செலுத்தினார்கள். நகரத்தில் இவர்கள் நுழைந்து பைத்துல் முகத்தஸிற்கு தீ வைத்து கொளுத்தினர். பல்லாயிரக்கணக்கான யூதர்களைக் கொன்றனர். அதிகமானோரை கைது செய்தனர். புக்த நஸரின் வெற்றிவாகைக்குப் பின்னால் யூதர்களால் தலைதூக்க முடியவில்லை. பைத்துல் முகத்தஸின் பழமைவாய்ந்த சரித்திர வரலாறு திரைக்கு அப்பால் மறைந்துள்ளது. வெறுமனே 19 நூற்றாண்டுகளின் வரலாறே பாதுகாக்கப்பட்டு இருக்கின்றது.

பைத்துல் முகத்தஸ் (ஹைக்கலின்) வரலாறு

- கி.மு. 1000 - ஹள்ரத் தாவூத் (அலை) அவர்கள்
- கி.மு. 970 - ஹள்ரத் சுலைமான் (அலை) அவர்கள் ஹைக்கலை நிர்மாணித்தல்
- கி.மு. 587 - புக்த நஸர் என்ற மன்னன் நகரத்தை அழித்து நாசமாக்கினான்.
- கி.மு. 538 - யூதர்கள் நாடு கடத்தப்பட்ட பிறகு மீண்டும் வருகைப் புரிதல்.
- கி.மு. 538 - 532 வரை - பாலஸ்தீனம் பாரசீகர்களின் கீழ்.
- கி.மு. 520 - ஜர்த் பாபல் பின் ஸாலதீ ஹைக்கலை புனர்நிர்மாணம் செய்தல்.
- கி.மு. 442 - ∴பஸீல் முன்பிருந்தபடி புனர்நிர்மாணம் செய்தல்.
- கி.மு. 332 - பேரரசர் இஸ்கந்தர்.

- கி.மு. 168 - சுலைமான் (அலை) அவர்கள் கைத்தடியை ஊன்றியவாரே மறைந்த இடத்தை 'அன்தோக்யூஸ்' என்பவன் அழித்து சின்னாபின்னமாக்கினான்.
- கி.மு. 165 - ஹைக்கலின் ஆரம்ப நிலை
- கி.மு. 637 - 63 வரை - பாலஸ்தீனத்தின் மீது ரோம் வாசிகளின் ஆதிக்கம்.
- கி.மு. 63 - போம்பியாஸ் என்பவன் ஹைக்கலை அழித்தல்.
- கி.பி. 20 - ஹீரோதே அ∴ழம் மற்றும் ∴பஸீல் 'ஹைக்கலை' புனர்நிர்மாணம் செய்தல்.
- கி.பி. 4 - ஹள்ரத் ஈஸா (அலை) (இயேசு) அவர்களின் பிறப்பு.
- கி.பி. 49 - ரோம் நகரத்திலிருந்து யூதர்கள் வெளியேற்றப்படல்.
- கி.பி. 66 - யூதர்கள் செய்த போர்.
- கி.பி. 70 - தீதஸ் ரோமீ என்பவன் யரூஸலம் (ஜெரூசலம்) நகரத்தை அழித்தான்.
- கி.பி. 70 - 132 வரை - யரூஸலம் நகரத்தில் ரோம் நாட்டு படையினர் முகாமிடுதல்.
- கி.பி. 132 - யூதர்களின் கிளர்ச்சி
- கி.பி. 135 - ரோம் வாசிகள் வணக்கஸ்தலத்தை வீழ்த்தி ஏர் உழுதனர்.
- கி.பி. 136 - பிறகு ஹைட்ரீனின் புனரமைப்பு. இந்நகரத்தின் பெயர் 'ஈலியா' என்றிருந்தது.
- கி.பி. 335 - குஸ்துன்தீன் - ரோம் அரசன் குஸ்ரூ ஜெபக்கூடங்களையும் ஆலயங்களையும் கட்டுதல்.
- கி.பி. 532 - ஹள்ரத் மர்யம் (அலை) அவர்களுக்குரிய வணக்கஸ்தலத்தின் நிர்மாணம்.
- கி.பி. 614 - குஸ்ரூ என்பவன் பைத்துல் முகத்தஸை கைப்பற்றினான்.
- கி.பி. 620 - நபி (ஸல்) அவர்கள் விண்ணுலகப் பயணத்தின் (மிஅராஜ்) போது மஸ்ஜிதுல் அக்ஸா செல்லுதல்.
- கி.பி. 628 - ஹிர்க்கல் (ஹெராக்ளியஸ்) குஸ்ரூவைத் தோற்கடித்தல்.
- கி.பி. 637 - ஹள்ரத் உமர் (ரழி) அவர்கள் பைத்துல் முகத்தஸை வெற்றி கொள்ளல்.

- கி.பி. 637 - ஹள்ரத் உமர் (ரழி) அவர்களின் பெயரில் ஒரு பள்ளிவாசல் நிறுவப்படுதல்.
- கி.பி. 637 - 1099 வரை - பைத்துல் முகத்தஸ் இஸ்லாமிய நகரமாகுதல்.
- கி.பி. 691 - பச்சை கோபுரத்தை (குப்பாவை) அப்துல் மலிக் நிறுவுதல்.
- கி.பி. 969 - ஜெரூசலம் நகரத்தை .ாதிமீயாக்கள் கைப்பற்றுதல்.
- கி.பி. 831 - மன்னர் மாமூன் ரஷீத் பச்சை கோபுரத்தை (குப்பா) நிர்மாணித்தல்.
- கி.பி. 1077 - தாத்தாரிகளின் தாக்குதல்.
- கி.பி. 1099 - முதலாம் சிலுவைப் போர் - காட்.ாபீ
- கி.பி. 1099 - 1187 - சிலுவைக்காரர்களின் ஆதிக்கம்.
- கி.பி. 1187 - ஸலாஹுத்தீன் அய்யூபி பைத்துல் முகத்தஸை வெற்றி கொள்ளுதல்.
- கி.பி. 1187 - 1192 - மூன்றாம் சிலுவைப் போர்.
- கி.பி. 1196 - நான்காம் சிலுவைப் போர்.
- கி.பி. 1202 - ஐந்தாம் சிலுவைப் போர்.
- கி.பி. 1212 - சிறுவர்களின் சிலுவைப் போர்.
- கி.பி. 1217 - ஆறாவது சிலுவைப் போர்.
- கி.பி. 1227 - ஏழாவது சிலுவைப் போர்.
- கி.பி. 1229 - 1242 வரை - கிறிஸ்துவர்களின் ஆதிக்கம்.
- கி.பி. 1242 - 1247 வரை - குவாரிஜ்மீன்கள் கைப்பற்றுதல்.
- கி.பி. 1247 - 1507 வரை - மம்லூக் உடைய ஆதிக்கம்
- கி.பி. 1248 - 1254 வரை எட்டாம் சிலுவைப் போர்.
- கி.பி. 1260 - 1277 வரை அல் மலிகுல் லாஹிர் - பேப்ரஸ்
- கி.பி. 1279 - 1290 வரை - மன்ஸுர் கலாஊன்.
- கி.பி. 1270 - 1272 வரை - ஒன்பதாம் சிலுவைப் போர்.
- கி.பி. 1291 - முஸ்லிம்கள் 'அக்கா'வை வெற்றி கொள்ளுதல்.
- கி.பி. 1453 - முஹம்மத் ஸானி எனப்படும் இரண்டாம் முஹம்மத் குஸ்துன்தீனியாவை வெற்றி கொள்ளுதல்.
- கி.பி. 1517 - 1917 வரை - பலஸ்தீன் மீது துருக்கி உஸ்மானின் ஆதிக்கம்.
- கி.பி. 1537 - 1542 வரை - சுலைமான் அ.ாழும் மூலம் பைத்துல் முகத்தஸின் புனர்நிர்மாணம்.

- கி.பி. 1832 - மிஸ்ரின் (எகிப்து) ஆளுநர் முஹம்மத் அலீ பைத்துல் முகத்தஸை கைப்பற்றுதல்.
- கி.பி. 1917 - ஜெரூசலத்தை ஆங்கிலேயர்கள் கைப்பற்றுதல்.
- கி.பி. 1949 - இஸ்லாமிய நகரம் - பைத்துல் முகத்தஸ்.
- கி.பி. 1967 - பைத்துல் முகத்தஸ் மீது யூதர்களின் ஆதிக்கம்.

(தாரிக் பைத்துல் முகத்தஸ்)

பைத்துல் முகத்தஸ் உலகின் எண்ணிறந்த சுற்றுலாத் தலங்களில் மிகப் பழமை வாய்ந்ததாகும். அதற்கு 33 க்கும் மேற்பட்ட நூற்றாண்டுகள் கழிந்து விட்டன. பல தடவை சேதம் விளைவிக்கப்பட்டு பின்பு மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. ஹாவிரீன்கள் மற்றும் புக்த நஸ்ர் காலத்தில் இந்நகரம் முற்றிலும் அழிந்து போனது. சிற்சில சமயங்களில் தரைமட்டமாக்கி அதன் மீது ஏர் உழுதனர். இந்நகரத்து மக்கள் கொலை செய்யப்பட்டார்கள். ஊரை விட்டும் துரத்தப்பட்டார்கள். பல தடவை ஏற்பட்ட பூகம்பங்களின் காரணமாக கட்டிடம் சரிந்து விழுந்தது. இருபது தடவைகள் முற்றுகையிடப்பட்டுள்ளது. பதினெட்டு முறை புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது. இந்நகரத்து மக்கள் தொடர்ந்து இருபது வருடங்கள் கூட நிம்மதியாக இருந்திருக்கமாட்டார்கள். ஏனெனில் அவர்கள் தொடர்ந்து அநியாயக்கார அரசர்களின் தொல்லைகளுக்கு ஆளானார்கள். பைத்துல் முகத்தஸுக்கு 'யரூஸலம், 'ஜீபோஸ்', யூரி ஸலீம்', 'ஈலியா', 'அல்பிலாத்' மற்றும் 'கோல்டன் ஸிட்டி' எனும் பல பெயர்கள் உண்டு.

(தாரீக் பைத்துல் முகத்தஸ்)

மஸ்ஜிதுன் நபவி

ஹிஜ்ரி 1 ஆம் ஆண்டு - கி.பி. 622 இல் நபி (ஸல்) அவர்கள் இப்பள்ளிவாசலுக்கு அடித்தளமிட்டார்கள். ஆரம்பத்தில் 60 முழம் நீளம், (90 அடி) 105 அடி அகலம், ஏறத்தாழ 10 அடி உயரம் கொண்டதாக இருந்தது. சுவர்களின் தடிப்பம் 1.5 சதுர அடி கொண்டதாகவும் இருந்தது. மூன்று கதவுகள் இருந்தன. அதன் முகடு ஈச்ச மர இலைகளினால் அமைக்கப்பட்டிருந்தது. தரை வெறும் மண் தரையாகவே இருந்தது. ஹிஜ்ரி 7 - கி.பி. 628 ஆம் ஆண்டு கைபர் வெற்றிக்குப் பின் நபி (ஸல்) அவர்கள் பள்ளிவாசலை 150 அடி அகலம் கொண்டதாக விரிவுபடுத்தி அமைத்தார்கள். அதாவது 100 சதுர முழங்கள் அன்னார் விரிவுபடுத்தினார்கள். பள்ளிவாசலையொட்டி அன்னாரின் மனைவிமார்களுக்கு ஒன்பது அறைகள் அமைக்கப்பட்டன.

ஹிஜ்ரி 18 ஆம் ஆண்டில் ஹள்ரத் உமர் (ரழி) அவர்கள் 140 கஜம் நீளம் (210 அடி), 120 கஜம் அகலம் (180 அடி) கொண்டதாக ஆறு வாசல்களை அமைத்தார்கள்.

ஹிஜ்ரி 29 ஆம் ஆண்டு ஹள்ரத் உஸ்மான் (ரழி) அவர்கள் 160 கஜம் உயரம் கொண்டதாகவும், 150 கஜம் அகலம் கொண்டதாகவும் அதை மாற்றியமைத்து அழகிய வேலைப்பாடுகளை செய்தார்கள். கிப்லா பகுதியை விரிவுபடுத்தினார்கள். மிஹ்ராபின் அப்பகுதிக்கு 'மிஹ்ராபே உஸ்மானீ' எனும் பெயரால் அழைக்கப்பட்டது.

ஹிஜ்ரி 88 - 91 ஆம் ஆண்டு வரை - வலீத் பின் அப்தில் மலிக் 200 கஜம் (300 சதுர அடி) நீளம், 162 கஜம் (250 சதுர அடி) அகலம் கொண்டதாக விரிவுபடுத்தினார்.

ஹிஜ்ரி 161 - 165 ஆம் ஆண்டு வரை கலீ.பா மஹ்தீ 300 கஜம் உயரம், 180 கஜம் அகலம் கொண்டதாக விரிவுபடுத்தினார்கள். அதற்குப் பிறகு மு.தலிம் பில்லாஹ் புனர்நிர்மாணம் செய்தார். மலிக் நாஸிர் வெளிப்புற வளாகத்தை ஏற்படுத்தினார். மலிக் அஷ்ர.ப் இதை உடைத்து புது வளாகத்தை அமைத்தார். ஹிஜ்ரி 853 ஆம் ஆண்டு மன்னர் ழாஹிர் ஹகீக் நபிகளாரின் அடக்கஸ்தலத்தையும் பள்ளிவாசலின் முகட்டையும் புதுப்பித்து இரண்டாம் முறையாக நிர்மாணித்தார். ஹிஜ்ரி 924 ஆம் ஆண்டு மலிக் நாஸிர் காஜீ இரண்டாம் முறையாக சுவர்களைக் கட்டினார். ஹிஜ்ரி 980 - கி.பி. 1572 ஆம் ஆண்டு இரண்டாம் ஸலீம் கான் போற்றத்தக்க முறையில் புனர்நிர்மாணம் செய்தார். ஹிஜ்ரி 999 ஆம் ஆண்டு ஸுல்தான் முராத் அவர்கள் உயர்த்தி இன்னும் விரிவுபடுத்தினார்கள். ஹிஜ்ரி 1254 - கி.பி. 1838 முதல் ஹிஜ்ரி 1266 ஆம் ஆண்டு வரை ஸுல்தான் அப்துல் மஜீத் புனர்நிர்மாணம் செய்தார்கள். பச்சை நிற கோபுரம் (குப்பா) கட்டினார்கள். கட்டிடத்தை அழகிய வேலைபாடுகளுடன் குர்ஆனிய திருவசனங்களைக் கொண்டும் பள்ளிவாசலை அழகுபடுத்தினார். அவரின் பெயரைக் கொண்டு 'பாபே பஜீதீ' என்றொரு வாசலும் உண்டு. அவர்களுக்குப் பின்பு சுல்தான் அப்துல் அஸீஸீ அவர்கள் பணிகளை முழுமைப்படுத்தினார்.

ஹிஜ்ரி 1336 ஆம் ஆண்டு பக்ரீ பாஷா 'மிஹ்ராபே நபி', 'மிஹ்ராபே உஸ்மானீ' ஆகிய இரு (மிம்பரின்) இடங்களைப் புதுப்பித்தார். ஹிஜ்ரி 1348 - கி.பி. 1929 ஆம் ஆண்டு அப்துல் அஜீஸ் பின் சுஊத் அவர்கள் வளாகத்தை நாலாபுறத்திலும் கற்களினால் தரை பதித்தார். நவீன விரிவாக்கத்திற்கு முன்பு 381 சதுர அடி நீளம், 216 சதுர அடி அகலம் கொண்டதாக இருந்தது.

ஹிஜ்ரி 1368 ஆம் ஆண்டு ஸுல்தான் அப்துல் அஜீஸ் அவர்கள் விரிவாக்கத்திற்கு அறிவிப்புச் செய்தார். ஹிஜ்ரி 1372 ஆம் ஆண்டு மன்னர் ஸுஊத் பின் அப்தில் அஜீஸ் அவர்கள் புதுக் கட்டிடத்திற்கு அடித்தளமிட்டார். நாலாபுறங்களிலும் இடங்களை விலைக்கு வாங்கி அதிலிருந்த கட்டிடங்களை உடைத்தார். அது 22955 சதுர கிலோ மீட்டர்கள் பரப்பளவு கொண்ட விசாலமான பகுதியாகும். 'பாபே ஜிப்ரீல்', 'பாபே ரஹ்மத்', 'பாபே மஜீதீ', பாபே லுத்', பாபுஸ் ஸலாம்' எனும் பெயர் பெற்ற ஐந்து வாசல்கள் முன்பிருந்தது. பின்பு பத்து வாசல்களாக அதிகரிக்கப்பட்டன. 80 கஜம் உயரமான ஐந்து மினாராக்கள், சுவர்களுடன் சேர்ந்திருக்கும் 484 சதுர வடிவமான தூண்கள், இது தவிர வட்ட வடிவிலான புதிய தூண்களின் எண்ணிக்கை 232 ஆகும். பள்ளியில் 689 வளைவு(ஆர்ச்சு)களும், 144 ஜன்னல்களும் கட்டப்பட்டன. சுவர்களின் ஆழம் 6 கஜம், மினாராக்களின் ஆழம் 22 கஜம்.

நபி (ஸல்) அவர்களின் காலத்தில் மஸ்ஜிதுன் நபவி 2475 சதுர மீட்டர்கள் பரப்பளவைக் கொண்டதாக இருந்தது. ஹள்ரத் உமர் (ரழி) அவர்களின் விரிவாக்கம் 1100 சதுர மீட்டர்களாகும். ஹள்ரத் உஸ்மான் (ரழி) அவர்களின் விரிவாக்கம் 496 சதுர மீட்டர்களாகும். வலீத் அவர்களின் விரிவாக்கம் 2393 சதுர மீட்டர்கள். மஹ்தீ அவர்களின் விரிவாக்கம் 2450 சதுர மீட்டர்கள். மலிக் அஷ்ர.ப் அவர்களின் விரிவாக்கம் 120 சதுர மீட்டர்கள். மன்னர் அப்துல் மஜீத் அவர்களின் விரிவாக்கம் 1292 சதுர மீட்டர்கள். இவ்வாறாக ஸவுதி அரசுவரை 10329 சதுர மீட்டர்கள் அளவு கொண்ட விரிவாக்கம் ஏற்பட்டது. அதன் பின் ஸவுதி அரசு 1632700000 சதுர மீட்டர்கள் வரை மிகப் பெரும் விரிவாக்கத்தை செய்தது. அதற்கு பின்பு மீண்டும் அதிக அளவிலான விரிவாக்கம் செய்யப்படடுள்ளது.

நபி (ஸல்) அவர்கள் தொழவைத்த இடத்தின் பெயர் 'மிஹ்ராபுன் நபி' என்பதாகும். அதன் வலது பக்கமாக ஒரு தூணின் அடையாளம் இருக்கின்றது. அங்கு ஈச்சம் மரத்தின் ஒரு கட்டை இருந்தது. நபியவர்கள் அதில் சாய்ந்து பிரசங்கம் - பேருரை நிகழ்த்துவார்கள். அதற்கருகில் புதிதாக ஒரு அழகிய மிம்பர் அமைக்கப்பட்டது. மிம்பருக்கும் நபிகளாரின் அடக்கஸ்தலத்திற்கும் மத்தியில் இருக்கும் பகுதியை 'சொர்க்கத்துப் பூங்காவின் ஒரு பூங்கா' என வர்ணிக்கப்பட்டுள்ளது. அதில் சில தூண்கள் உண்டு. ஒரு தூணின் பெயர் 'ஸுதூனே ஆயிஷா (ரழி)' இது ஹள்ரத் ஆயிஷா (ரழி) அவர்கள் தொழுது கொண்டிருந்த இடம். இங்கு 'ஸுதூனே ஸரீர் (ரழி)', 'ஸுதூனே அபூ லுபாபா (ரழி)' எனும் பெயர் பெற்ற இன்னும் இரு தூண்கள் உண்டு. இத்தூண்களில்



படம் நன்றி: ஹஜ்ஜின் சிறப்புகள்

ஹள்ரத் ஸாீர் (ரழி), ஹள்ரத் அபூ லுபாபா (ரழி) ஆகிய இரு நபித்தோழர்களும் தாங்கள் செய்துவிட்ட தவறுக்காக மன்னிப்பு வேண்டி தங்களை தாங்களே கைற்றால் கட்டிக் கொண்டனர். மன்னிப்பு வழங்கப்பட்டதற்கு அடையாளமாக நபி (ஸல்) அவர்களே தங்களது புனித கரங்களால் இவ்விடத்தில் அவர்களை விடுவித்தார்கள்.

